www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ஜன.09-15,1994
ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SR NATIONAL TAM L WE முரசு 33



உழவர் திருநாளில்
கரும்பின் இனிய
சுவைபோல
எங்கும்
மகிழ்ச்சி பொங்கட்டும்.

உழவர் திருநாளில்-
வாசக நெஞ்சங்களுக்கு
நெஞ்சில் பொங்கும்
நிறைவான நேசங்களோடு
முரசின் வாழ்த்துக்கள்

மகாபாரத
கதை-வசனம்

## தொலை தூரத்தில் தீர்வுகள்!
## தொடும் தூரத்தில் யுத்தம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

இராஜதந்திரியின்
அரசியல் அலசல்

குள்ளமான பெண்
சுகப் பிரசவம்
மருத்துவ
உலகில்
வியப்பு



படங்களோடு சினிவிசிட்

ரசிகனின் இலக்கிய நயம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

## ஆண்டவர் முன் வரிசையில் இருக்கிறார்



**"கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்."**

(உபா 31:8)

பெரிய வேலையாவது போராட்டமாவது நம்மை எதிர் நோக்கியிருக்கும் போது இந்த வசனம் நம்மை தைரியத்துடன் ஆயத்தப்பட ஏவக்கூடியது. யேகோவாவே நம்முடன் போனால் அவரைப் பின்பற்றிப் போவது பாதுகாப்பாயிருக்கும். ஆண்டவரே நம்மோடு இருந்தால் நாம் முன்னேறிச் செல்வதை யார் தடுக்க முடியும்? சகவீரரே, வாருங்கள், நாம் உடனே முன்னேறிப் போகலாம். வெற்றியை அடையச் செல்வதற்கு நாம் ஏன் தயங்க வேண்டும்?

ஆண்டவர் நம்முன் மட்டும் இல்லை. நம்மோடு நமக்கு மேலும் கீழும் சுற்றிலும் இருக்கும் சர்வ வியாபியும் சர்வ வல்லவருமானவர். அவர் நம்மோடு இதுவரை இருந்தது போல் எல்லாக் காலமும் நித்தியத்துக்கும் நம்மோடு இருப்பார். இது நம்மை எவ்விதம் தைரியப்படுத்தக் கூடியது என்று பாருங்கள். சிலுவையின் வீரர்களே தைரியமாக முன்னேறுங்கள். ஏனெனில் சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்.

# ஆன்மீகம்

நமக்கு முன்னும் நம்மோடும் இருப்பவர் ஒரு நாளும் உதவி செய்வதை நிறுத்தி விடமாட்டார். அவர் தம்மிலே தளர்வடைய மாட்டார். நம்மைக் கைவிடமாட்டார். முடிவு வரை நம் தேவைகளுக்கேற்ப, தொடர்ந்து நமக்கு உதவி செய்வார். அவர் நம்மை ஏமாற்றாதவரானபடியால் நம்மைக் கைவிட மாட்டார்; நாம் போர் செய்ய வேண்டிய நாட்கள் முடியும்வரை நமக்கு பெலனும் உதவியும் அளிக்கக் கூடியவர். நாம் சோர்வு கொள்ளத் தேவையில்லை. சேனைகளின் கர்த்தர் நம்மோடு வந்து அவரே போர் புரிந்து வெற்றியையும் கொடுப்பார்.

குணபிரபா- வெள்ளவத்தை.

## இதுதான் உலகம்!

ஒரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் வீதி வழியே சென்று கொண்டிருந்தார்கள். தெருவில் ஓர் இடத்தில் செத்த ஆடு ஒன்று கேட்பாரற்றுக் கிடந்தது. "இந்த ஆட்டை இதன் உரிமையாளர்கள் எவ்வளவு கேவலமாக மதித்து வீசி விட்டார்கள். வீசி எறிந்ததற்கு காரணம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று தோழர்களிடம் பெருமானார் அவர்கள் கேட்டார்கள். "செத்த ஆடு அற்பமானது என்ற காரணத்தினால் இதன் உரிமையாளர்கள் துச்சமாக மதித்து எறிந்து விட்டார்கள்" என்று தோழர்கள் விடையளித்தார்கள். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் கீழ் கண்டவாறு கூறினார்கள். "ஆம் உண்மைதான் இந்த செத்த ஆட்டை நீங்கள் எப்படி மதிக்கிறீர்களோ, அப்படித்தான் இறைவன் இம்மையை மதிக்கிறான்."

மற்றொரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "இம்மை என்பது விசுவாசிகளுக்குச் சிறை போன்றது. ஆனால் நிராகரிப்பவர்களுக்கு இதுதான் சுவர்க்கம்" மற்றொரு சமயம் கிழிந்து போன துணியையும் மக்கிப் போன எலும்பையும் எடுத்துக்காட்டி, "இது தான் உலகம்!" என்றார்கள். "உங்கள் அலங்காரங்கள் அனைத்தும் விரைவில் கிழித்தெறியப்படும். அழகான உங்கள் உடல், விரைவில் எலும்புகளாக மாறிவிடும் என்பதை விளக்குவதற்காக வேண்டி பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிச் சிலேடையாகக் கூறினார்கள்.

செல்வி.அஸ்ரபுன்நிசா ஹமீட்-அக்குறனை.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பொங்கல் திருநாள்
உழுதுண்டு வாழ்வோருக்கு
உவகை தரும் நாள்.

நன்றி மறப்பது என்பது
ஒரு நாகரிகமாகிவிட்டதோ என்று
எண்ணுமளவுக்கு
மனித மாண்புகள் மறைந்து வருகின்றன.

நேற்றைய நண்பன் இன்றைய எதிரி.
இன்றைய நண்பன் நாளைய எதிரி.
மனித உறவுகளுக்குள்
குறுகிய சுயநலமும்-கபடும்
ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

காலம் மாறுவதும், அந்த மாற்றத்தோடு
மனித குலம் முன்னேறுவதும்
வரலாற்று அவசியங்கள்.

ஆற்றுநீர் ஓரிடத்தில் நிற்பதில்லை.
ஓடிக்கொண்டேயிருக்கும்.
அதனால்தான் அது சுத்தமாக இருக்கிறது.

மனித குல முன்னேற்றமும்
தடங்கல் இல்லாமல்
மேலும் மேலும் முன் உயர்ந்து
வியத்தகு சாதனைகளை நோக்கி வளர்ந்து
முன் செல்ல வேண்டும்.

ஆனால்-
முன்னேற்றம் என்பது
தறிகெட்டு திசையற்று ஓடுவதல்ல.
நேற்றை விட இன்று
அழகானதாக இருக்க வேண்டும்.
இன்றை விட நாளை என்பது
இன்னும் வசீகரமாக இருக்க வேண்டும்.
அதுதான்
மனித குல முன்னேற்ற இலக்காக
இருத்தல் வேண்டும்.

ஆயினும், துரதிஷ்டவசமாக
விஞ்ஞானம் வளர்ந்தளவுக்கு
மனிதனின் உள்ளம்
விரிந்திடவில்லையோ என்று
எண்ணத் தோன்றுகிறது.

ஓடு. ஓடு
யார் விழுந்து கிடந்தாலும்
கவலைப்படாதே.
வேண்டுமானால் முன்னே ஓடுபவனை
வசதியானபோது தள்ளிவிழுத்திவிட்டு
நீ தாவி ஓடு - சுயநலமே குறி.
நத்தை தன் ஓட்டுக்குள்
உடலை சுருக்குவது போல,
மனிதன் தன் சுயநலத்துக்குள்
உள்ளத்தை சுருக்கிக் கொண்டான்.

தன் வீடு இன்பமாக இருக்கவேண்டும்
என்று நினைப்பது தவறல்ல.
தன்வீடு மட்டுமே இன்பமாக வேண்டும்
என்ற நினைப்பே கெடுதல்.
அதனால்தான் வீடும் நரகமாகிறது.
நாடும் சுடுகாடாகிறது.

எனவேதான்-
மனிதன் முன்னேறும் போது அவன்
மனமும் விரிந்து கொண்டிருக்க வேண்டும்.
அன்பு-நேசம், நன்றி-நேர்மை
என்பவற்றை - நாம்
நாகரிகமானவர்கள் என்று காட்ட
உச்சரிக்கும் வார்த்தைகளாகக் கருதாமல்
உள்ளத்தின் ஆழத்தில் சுமக்க வேண்டும்.
வாழ்க்கை முறையாகக் கொள்ளல் வேண்டும்.

தைப்பொங்கல் திருநாள்
வருடம் முழுவதும் தன்வருகையால்
பூமிக்கு பேருதவி செய்யும்
சுயநலமில்லாத சூரியனுக்கு
உழவர்கள் நன்றி சொல்லும் பெருநாள்.
தங்கள் இனிய சந்தோசத்தை
சூரியனோடு பகிர்ந்து கொள்ளும் திருநாள்.

சூரியனுக்கே நன்றி சொல்லும்
பண்பாடு காத்தவர்கள் நாங்கள்
என்று பெருமைப்பட்டால் மட்டும் போதாது.
நல்ல பண்பாடுகள்-மனித நேசங்கள்
மண்மூடிப் போகாமலும்
போர்கள புழுதியில் காணாமல் போகாமலும்
காக்கவேண்டிய கடப்பாடும் நமக்குண்டு.
அதை மறவாதிருப்போம்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்"
என்பார்கள்.
போரிடுவதே முடிவு என்று
தீர்வுகளை தேடாமல் இருக்கும்
விழிகள் திறக்குமா?
திறந்தால்-வழியும் பிறக்கும்.
சமாதான முரசின் உதடும் திறக்கும்.
மக்களின் முகங்களில்
புன்னகைப் பூக்கள் மலரும்.

■

பொங்கல் வாழ்த்துக்களோடு
கைகுலுக்கிக் கொண்டு
மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை,

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்.

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-30

போட்டிக்களம் தேடி வந்து குவிந்தவற்றில் வெற்றி பெற்றதுவும், வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

**சமாதானத்தின் சாவி!**

**சமாதானத்தின் சாவி
சாக்கடையில் விழுந்ததாலோ?
வாலிபத்தின் சுமைகளை
வயோதிபம் சுமக்கிறது!**

**கே. கோவிந்தராஜ்
வாழைச்சேனை.**

**பாராட்டுக்குரிய கவிதைகள்**


**துயரம்!**

மனிதனை மனிதன்
இழுப்பதும்-அந்த
மனிதனை மனிதனே
வதைப்பதும்
இனியில்லை என்றால்தான்
சமத்துவம்- எங்கும்
துளிர்விடும் இல்லையேல்
துயரம்தான்!

செ.குணரத்தினம்
மட்டக்களப்பு.

வேகும் வெய்யிலுக்குள்ளே,
போகும் போக்கைப் பார்
சாகும் வரை உழைப்பைத்
தாங்கும் உடலைப்பார்.

ஏ.எச்.எம்.யூஸுப்-வெலிகம.



"சின்னச் சின்ன ஆசை"
ஐம்பதிலும் ஆசை
சுமை தாங்கியாகாமல்
உழைத்து வாழ ஆசை.

இளையமகள்-களுத்துறை.

வயிற்றுக்காக!
உல்லாச
சவாரியல்ல; இது!
உயிர்வாழ
சவாரி.

எச்.எம்.அனஸ் றஹ்மான்
சிலாபம்.

தொலையுமா வறுமை?
துப்பாக்கியை கைகள்
தழுவியதால்
தொலைந்தது!
மனிதம்.
துவிச்சக்கர வண்டியை
கால்கள்
அழுத்தினால்
தொலையுமா வறுமை?

அ.ரமணன்.-பாண்டிருப்பு.

கொடிது கொடிது தள்ளாமையில்
இல்லாமை கொடிது

பாத்திமா ரைஹானா
உக்குவளை.

**சவால்**

இது
என்ன
தாத்தா
எங்க
இளமைகளுக்கு
விடும்
சவாலா?


அனீராதாசன்
சின்னக்கிண்ணியா-01.

**போக முடியாது**

"அப்பு!
போக மாட்டீர்கள்
திரும்புங்கள்"
"ஏ...ன்?"
"பூநகரிப் பாதை
மூடியுள்ளது."

ர.பிரதீபன்-கல்குடா.

## கவிதைப் போட்டி இல-33



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 15.1.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 33
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

இதுதான்
நம்நாட்டின்
மட்டுப்படுத்தப்பட்ட
மக்கள் மயப்படுத்திய
போக்குவரத்துச் சேவையா?

ந.ரதீஸ்வரன்-மட்டக்களப்பு.

**முயற்சி**

முதுமை வந்தால் என்ன
முயற்சி தளரவில்லை!

க.பரமானந்தராஜா
கல்குடா.

**வழி விடு**

முச்சக்கர வண்டிதான்-இது
யுத்த வாகனமில்லை
முன்னேற வழிவிடு-பாதையில்
முன்நிற்பதை தவிர்த்திடு.

-ஷர்மி-
கண்டி.

உண்டி நிரப்ப
வண்டி இழுப்பது
தவறில்லை
தோழா

திதக்ஷலா
திருமலை.

**சக்கரம்**

வாழ்க்கைச் சக்கரம்
சுழல வேண்டுமானால்
இந்த
வண்டிச் சக்கரம்
சுழல வேண்டும்.

ஊற்றூரான்
முந்தல்.

**பயணம்**

இது
மனிதம் மரித்த வீதி
இங்கே
எருதுக்குப் பதிலாக முதுமை
பயணிக்குப் பதிலாகப் 'பிணம்'

செ.வாமதேவன்-கல்லாறு (கி.மா)

ஒய்வு பெறாத
உயிர் இயந்திரம்

எஸ்.துளசிநாதன்
அக்கரைப்பற்று-09.

**வறுமையின் வாகனம்**

கவசவாகனமல்ல-இது
வறுமை நிலையை
ஓட்டும்-என்
சுவாச வாகனம்.

பர்ஸான் இஸ்மாயில்
உடத்தலவின்னை.

**எனக்கேது?**

உள்ளத்தில் இளமை
உழைப்பில் நேர்மை
எனக்கேது வறுமை!

பரீஹா.ஏ.ஜுனைது
ஏறாவூர்-06.

ஒரு பக்கம்
ஆயுதப் போர்.
மறுபக்கம்
எங்களின்
வயிற்றுப் போர்.

ப.இரவீந்திரகுமார்
கொழும்பு-13.

# வாசகர் சாலை

வியக்க வைக்கும் விந்தையான தகவல் தருவதில் நீபெஸ்ட். அதிரடி அய்யாத்துரையின் செய்தி படு ஜோர். பார்க்கும் பக்கமெல்லாம் பரபரக்கும் செய்தி சொல்லும் நாரதர் வேலை மிக முக்கியம். மொத்தத்தில் இது ஒரு தேனருவி தினமுரசு. வளர்க உன் பணி. வாழ்க உன் சேவை.

**எம்.பி.கிருஷ்ணன்-ரொசெல்ல.**

•

பல அம்சங்களால் எம் நெஞ்சம் கவர்ந்த நேச முரசே! மகா பாரதத்தினால் மேலும் ஒருபடி உயர்ந்து எம் மூச்சே நீயாகிவிட்டாய். மக்கள் தேவையுணர்ந்து நீயாற்றி வரும் அளப்பரிய சேவைக்கு அன்பே உனக்கு என் கோடான கோடி நன்றிகள்.

**செல்வராணி சோமசுந்தரம்
எலமுள்ள.**

•

தேன் கிண்ணத்தை சுவைத்தேன். தித்திக்கும் உள்ளம் கொண்டேன். கண்ணே மதுமிதாவை பார்த்தேன். இலக்கிய நயத்தை மணந்தேன். ரசிகன் யார் புரியவில்லை. என்றாலும் ரசித்தேன். சுவைத்தேன். ருசித்தேன்.

**செல்வி. ஜெயா செல்லத்தம்பி
கிண்ணியா-01.**

•

முரசே!

பலர் கூறத் தயங்கும் விஷயங்களை அதிரடியாகத் தருகிறாய். உன் தைரியம் என் விழிகளை விரிய வைக்கிறது. மேலும், இலை மறைகாயாக இருக்கும் கலைஞர்களை வெளியுலகுக்கு எடுத்துக்காட்டுகிறாய்.

இளம் தலைமுறையினரின் எதிர்காலத்துக்கு நீயொரு வழிகாட்டியாகவும் இருக்கிறாய். உன் சேவைகள் மனந்திறந்து பாராட்டத்தக்கவை. வாழ்க, முரசு. வளர்க உன் சேவை என வாழ்த்துகிறாள் இப்பாவை.

**சர்மிளா ஏ.றஹீம்
நிலாவெளி-01.**

தினமுரசே!

நம்நாட்டில் பக்க சார்பற்ற பத்திரிகைகள் இல்லை என்றே கூறலாம்! ஆனால் நீ ஒன்றுதான் எமக்கு பக்கசார்பில்லாமல் செய்திகளைத் தருகிறாய். உனக்கு எனது வாழ்த்துக்கள்.

**ச.ஸ்ரீகஜன்-கொட்டாஞ்சேனை.**

•

"அன்பின் தினமுரசே!

நீ சுமந்துவரும் கண்ணே மதுமிதா மற்றும் பல்சுவை அம்சங்களையும் காணும்போது நாங்கள் எங்களையே மறந்து விடுகிறோம்.

**ஹசீம், அறபாத்,
உஸ்மான், சிப்ரி, கப்பூர்,
மஹ்சூன்-நுரைச்சோலை.**

•

வாரம் ஒரு முறை மலர்ந்தாலும் எம் மனதை கொள்ளை கொள்ள நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. வாழ்க வளர்க அன்பு மலரே.

**செல்வி கே.சண்முகம்
யோகேஸ்வரி-தெல்தெனிய.**

அன்பின் தினமுரசே!

வாரம் வாரம் வழங்கிவரும் அனைத்து அம்சங்களும் என் நினைவை விட்டு அகலாமல் இருக்கின்றது. தொழில் தவிர்ந்த ஏனைய நேரங்களில் உன்னை நான் பார்த்து ரசிக்கின்றேன்.

**பி.லோகநாதன்-மாதலாவத்தை.**

•

இதுவரை 'மகாபாரதம்' தொலைக்காட்சி நாடகத்தை பார்க்க வாய்ப்பில்லையே என ஏங்கிக் கொண்டிருந்த என் போன்றவர்களுக்கு வாராவாரம் ஒளி பரப்பாகும் பகுதியையும் வழங்க முன்வந்தாயே அன்பு முரசே. உன் பெருந்தன்மையை என்னவென்பேன். தொலைக்காட்சி பார்ப்பதோடு சரி. நீ வெளியிடும் பகுதி பத்திரமாக பாதுகாத்து பரம்பரையும் பலன் பெறக்கூடியதாய் உள்ளது. குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மத்தியிலே நீ ஒரு பரந்த நோக்கில் ஒளிகொடுத்து வரும் 'சூரியன்' இதைவிட பொருத்தமாக சொல்ல ஒரு வார்த்தை தெரியவில்லை. உன் சேவை தமிழ் மக்களுக்குத் தேவை.

**திருமதி. தெய்வா விஜயகுமார்-சிலாபம்.**




தினமுரசு வாரமலரை நாங்கள் தொடர்ந்து பார்த்து வருகிறோம். கண்ணே மதுமிதா தொடர்கதை விறுவிறுப்பாக இருக்கிறது. சிறுகதைகள், வியக்க வைக்கும் தகவல்கள் மற்றும் அனைத்து அம்சங்களும் பெண்டாஸ்டிக்! நல்ல தகவல்களை வாசகர் எமக்கு சுமந்து வரும் தினமுரசு வாரமலர் மேலும் வளர எமது வாழ்த்துக்கள்!

**செல்விகள் நியாஸா ஏ.அஸீஸா,
நிஸானா, சிபானா, பர்வீன்-நிந்தவூர்-06.**

•

மகாபாரதத்தை வசன நடையில் தரும் வித்தியாசம் உங்களுடையது! எமது பாராட்டுக்கள். தொடருங்கள்.

மேலும், ரசிகனுக்கு இலக்கிய ரசம் வடிக்கவும் தெரியுமென்பதை இலக்கிய நயம் எடுத்துக்காட்டி அசத்துகிறது. சபாஷ். பாராட்டுக்கள் பல.

**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.**

•

கொள்ளை அழகுடன் வெள்ளி தோறும் வலம் வந்து பல ஆக்கங்களை நீ அள்ளித் தந்து மனதை கொள்ளை கொண்ட தினமுரசே நீ வளர்க!

**செல்வி.க.லோகா -திருமலை.**

•

அன்புள்ள ஆசிரியருக்கும் தினமுரசு வாசகர்களுக்கும் மதுமிதா ரசிகன் அவர்களுக்கும் அதிரடி அய்யாத்துரை அவர்களுக்கும் சுரேஷ், முகில்வண்ணன், நாரதர் ஆகியோருக்கும் என் பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

**எஸ்.முகைதீன்-மூதூர்-07.**

•

வீட்டுக்கு விளக்கேற்றும் புதுமணப் பெண்போல் எங்கள் நாட்டிற்கு விளக்கேற்ற வந்திருக்கும் என் இனிய முரசே, முதற்கண் என் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள். குறுகிய காலமானாலும் எண்ணற்ற உள்ளங்களின் இதயத்தை திருடி விட்டாய். ஆயிரம் காலத்துப் பயிராக நீ வாழ வளர வேண்டும். என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**திருமதி.சரோஜாதேவி கருணாநிதி
வாழைச்சேனை.**

•

கண்ணே மதுமிதா எம்மை காக்க வைப்பதில் என்ன இன்பமோ. தொடரவிருக்கும் உன் வரவால் ஏங்கும் எம் உள்ளத்தை (குலாம்ஷா) இன்ஸ்பெக்டர் தித்திக்க (திடுக்கிட) வைத்திடுவாரோ. முரசே உன் வரவு இனிய வரவாகட்டும்.

**க.சந்திரகலா-இராகலை.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஆட்பல அதிகரிப்பில் இரு தரப்பும் தீவிரம்!

## இராணுவத்துக்குள் மாற்றங்களை ஏற்படுத்தும் புதிய தளபதி!!

**புதிய இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி சில்வா பதவி ஏற்றுக்கொண்டபின்னர் இராணுவத்துக்குள் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறார்.**

**கடந்த ஆண்டு இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் ஏற்படுத்தியிருந்த சோர்வுகளை அகற்றுவதும், புதிய உற்சாகத்தை இராணுவத்தினர் மத்தியில் ஏற்படுத்துவதுமே புதிய தளபதியின் உடனடிப் பணிகளாக இருக்கும்.**

இராணுவத்தின் கட்டமைப்பிலும், பயிற்சி முறைகளிலும் புதிய மாற்றங்களைக் கொண்டுவர அவர் தீர்மானித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் புலிகளைத் தோற்கடித்து இராணுவம் தனது நம்பிக்கைத்தன்மையை நிரூபிக்கும் என்று புதிய இராணுவத்தளபதி கூறியிருக்கிறார்.

இராணுவத்தைப் பொறுத்தவரை அது அரசின் உத்தரவுகளையே நிறைவேற்றுகிறது.

போரில் வெல்லுவதே இராணுவத்தின் நோக்கம்.

இராணுவத் தளபதியும் தனது இராணுவத்தினரைப் போரில் உற்சாக மூட்டி முன் அழைத்துச் செல்வதில்தான் கவனம் செலுத்தவேண்டும். அதுதான் அவரது வேலை.

அரசியல் தீர்வு காண்பது, போரை நிறுத்தி பேச்சு நடத்துவது, பேச்சு நடத்துவதற்கான சமிக்கைகளை காட்டுவது என்பவை இராணுவத்தின் வேலையல்ல.

ஆனால், தற்போதைய யுத்தம் வெளிநாட்டு எதிரியுடன் அல்லது அந்நியப் படையுடன் நடைபெறும் யுத்தம் அல்ல.

இந்த நாட்டின் ஒரு பகுதியில் தமது கட்டுப்பாட்டை செலுத்தும் ஒரு அமைப்போடு நடைபெறும் யுத்தம்.

இந்த யுத்தத்தில் வெற்றிபெற படைப்பலம் மட்டும் போதாது.

படைப்பலத்தை மட்டுமே வைத்து போரிடுவது ஒரு கையைப் பின்னால் கட்டிக்கொண்டு சண்டைசெய்வது போலவே இருக்கும்.

இராணுவத்திற்குள் செய்யப்படும் மாற்றங்கள் புதிதாக வாங்கப்படும் ஆயுதங்கள், தீவிரமான பயிற்சிகள் போரின் வேகத்தை அதிகப்படுத்தலாம்.

களத்தில் தற்போதைய நிலையைவிட எதிர்த்தரப்பில் இழப்புக்களை அதிகம் உருவாக்கலாம்.

முக்கியமான முகாம்கள் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கப்படக்கூடிய ஏற்பாடுகளை வலுப்படுத்தலாம்.

ஆனால் யுத்தத்தில் புலிகளை முற்றாக தோற்கடிப்போம் என்று கூறுவதை எந்தளவுக்கு படையினர் சாதிக்கமுடியும் என்பதே கேள்வியாகும்.

மக்களை வென்றெடுக்கும் தகுந்த அரசியல் தீர்வு ஒன்று இல்லாதவரை படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒரு கட்டத்திற்கு மேல் செல்ல முடியாது.

மறுபுறம் 'உள்நாட்டு யுத்தத்தில் கடுமையான பலப்பிரயோகம். காட்டப்படும்போது அப்பலப்பிரயோகம் காட்டப்படும் பகுதிகளில் உள்ள மக்கள் பாதிக்கப்படுவார்கள். அவ்வாறான பாதிப்புக்கள் அரசாங்கத்தின் மீதும், படையினர் மீதும் அதிருப்திகளையே ஏற்படுத்தும்.

யாழ்குடாநாட்டில் இராணுவ முகாம்களில் இருந்து ஏவப்படும் ஷெல்கள் மக்களிடையே தினமும் அதிருப்திகளையே ஏற்படுத்துகின்றன.

மழைக்காலத்தின் போதுகூட ஷெல் தாக்குதல்கள் நடந்துள்ளன.

வடக்கே எங்கும் தரைவழியாக யுத்தம் நடைபெறாத வேளையிலும் விமானத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

புலிகள் அமைப்பின்மீது அதிருப்தி கொண்டவர்கள்கூட படையினரை நினைத்து பயப்படும் நிலையே அவ்வாறான தாக்குதல்களால் ஏற்படுகிறது.

அரசியல் தீர்வும் இல்லை. குடியிருப்புக்கள் மத்தியிலும் தாக்குதல்கள் தொடர்கின்றன என்ற நிலைமையானது யுத்தத்தில் தமது கரங்களை பலவீனப்படுத்தும் என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

புதிய இராணுவத் தளபதி கடுமையான போக்குக் கொண்டவர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

முன்னாள் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்னா மீது பத்திரிகையாளர்கள் அதிருப்தி கொள்ளும் நிலை ஏற்பட்டது.

சிங்கள-ஆங்கில தினசரிகள் அவரது தலைமைத்துவம் மீது குறை கூறின.

ஆனால் புதிய இராணுவத்தளபதி பத்திரிகையாளர்களோடு நல் உறவு கொண்டிருக்கிறார். அதுதவிர யுத்தத்தில் பொதுமக்களது இழப்புக்களை கூடியளவு தவிர்க்கவேண்டும் என்றும் கருத்துக் கொண்டுள்ளார் என்றே அவரை அறிந்தவர்கள் சொல்லுகின்றனர்.

எதிர்கால போர் நடைமுறைகள் புதிய தளபதியின் அணுகுமுறைகளை அறிய வைக்கும்.

இராணுவத்தினர் பலர் படையை விட்டு தப்பி ஓடுவதைத் தடுக்க அவர்களது தனிப்பட்ட நலன்களிலும் அக்கறை செலுத்தவேண்டும் என்று புதிய தளபதி கருத்துக் கொண்டுள்ளார்.

புதிய இராணுவத் தளபாடங்கள் வாங்கப்பட வேண்டும், இராணுவத்தின் ஆட் பலம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது அவரது கருத்து என்று தெரிகிறது.

வடக்கே புலிகளும் தமது ஆட் பலத்தை பெருக்கிக்கொள்ள பல்வேறு வகையான பிரச்சார முறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


பூநகரி மோதலின்போது எடுக்கப்பட்ட வீடியோ படம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் எங்கும் போட்டுக் காண்பிக்கப்படுகிறது.

போரிடும் தரப்புக்களின் ஆட்பலம் அதிகரிக்க, யுத்தத்தின் தீவிரமும் அதிகமாகும்.

ஒரு பாரிய யுத்தத்துக்கான பலம் திரட்டுவதில் இராணுவத்தினரும், புலிகளும் ஈடுபட்டுள்ளனர்.

புயலுக்கு முன்னைய அமைதி போன்று போருக்கான் தற்போதைய தயாரிப்புக்காலம் காணப்படுகிறது.

## பொருத்தமற்ற நேரத்தில் செல்லா தொடுத்த கணைகள்! உட்கட்சி மோதலில் வெற்றி தொண்டாவுக்கே!!



கட்சிக்கட்டுப்பாட்டை மீறியது குற்றம்தான். யார் செய்தாலும் குற்றம் குற்றமே என்று திரு. தொண்டா கூறுவது மலையக மக்கள் மத்தியில் ஏற்கப்படவே செய்கிறது.

பொதுச் செயலாளர் திரு.செல்லச்சாமி அடிக்கடி நடத்தும் பத்திரிகையாளர் மாநாடுகள் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஆயினும், மலையகத்தில் உள்ள இ.தொ.கா உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் செல்லா சொல்வதையெல்லாம் அப்படியே நம்பவில்லை என்றே தெரிகிறது.

அமைச்சர் செல்லச்சாமி பொருத்தமற்ற ஒரு நேரத்தில் உட்பூசலை வெளியே போட்டு உடைக்க முற்பட்டார்.

ஆளும்கட்சிக்கு ஆதரவு தெரிவித்த மாகாணசபை உறுப்பினர்கள் மீது இ.தொ.கா உறுப்பினர்கள் கோபப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அந்த உறுப்பினர்களுக்கு சார்பாக பேசப்போய் அதனால் பல்வேறு சந்தேகங்களுக்கு இடம் கொடுத்து விட்டார். சுருக்கமாகச் சொன்னால் செல்லா அவசரப்பட்டு விட்டதால் அவரது வாதங்கள் இ.தொ.கா உறுப்பினர்களது செவிகளுக்கு செல்லாமல் போகும் நிலை ஏற்பட்டது.

ஆரம்பமே தவறான நேரத்தில் அமைய, பின்னர் கணக்கு விபரங்கள், தனிமனித முடிவுகள், அமைச்சர் தொண்டாவின் குடும்பத்தினர் பற்றிய அமைச்சர் செல்லாவின் கேள்விகளும் குற்றச்சாட்டுகளும் வலுவிழந்து போய்விட்டன.

ஆளும் கட்சிக்கு ஆதரவு தெரிவித்த மாகாண சபை உறுப்பினர்கள் பாதுகாப்பில்லாமல் நடமாட முடியாத நிலையே காணப்படுகிறது.

தமக்கு ஆதரவு தெரிவித்த மாகாண சபை உறுப்பினர்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவிக்க அது அவலை நினைத்து உரலை இடித்த கதையாகிவிட்டது.

அமைச்சர் செல்லா ஆளும்கட்சியோடு இணைந்து அவர்கள் ஆதரவோடு செயற்படுகிறார் என்று அவருக்கு எதிரான கருத்து பலமாக அதுவும் ஒரு காரணமாகிவிட்டது.

ஆனால் உட்கட்சி பிரச்சனை பகிரங்கத்திற்கு வந்தபின்னர், அதுவும் தமது கட்சிக்கு ஆதரவு கொடுத்தமையோடு அப்பிரச்சனை தொடர்பு பட்டு வெளிவரும் போது அது பற்றி கருத்துச் சொன்ன ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களையும் குறை சொல்ல முடியாது.

அமைச்சர் தொண்டமான் தற்போதைய பிரச்சனையை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டுள்ளார்.

ஆளும்கட்சியோடு ஏற்பட்ட மோதலில் அரசியல் பலம் காட்டி ஜெயிப்பதில் அவர் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால் அந்த தோல்விக்கு காரணமான தன் கட்சிக்காரர்களை அவர் மன்னிக்கத் தயாராக இல்லை. உட்கட்சி மோதலில் அவர் வெற்றி பெற ஏற்ற சூழ்நிலையே உள்ளே காணப்படுகிறது.

அமைச்சர் செல்லா, பத்திரிகையாளர் மாநாட்டில் இருக்க, அமைச்சர் தொண்டா மக்களை சந்தித்து வருகிறார். அவர்களது மனநிலையை அறிந்து காய்களை நகர்த்துகிறார்.

அமைச்சர் தொண்டாவைப் போல மலையகத்தில் மக்களை நேரடியாக சுதந்திரமாக சந்திக்க முடியாத சூழலை ஏற்படுத்திக்கொண்டமை அமைச்சர் செல்லா அணியினருக்கு அரசியல் நஷ்டம்.

உட்கட்சி மோதலில் வெற்றி அமைச்சர் தொண்டாவுக்கு. எனினும் பிளவுகள் ஏதோ ஒரு வகையில் பலவீனத்தையே ஏற்படுத்தும்.

## மாத்தையா மீது விசாரணை! புலிகளின் பாரிஸ் கிளை கூறுகிறது!!

புலிகள் அமைப்பின் பிரதித்தலைவர் என்று கருதப்பட்ட திரு.கோபாலசுவாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையா மீது விசாரணைகள் நடைபெற்று வருவதாக புலிகள் அமைப்பின் பாரிஸ் கிளையினர் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

மாத்தையா பற்றிய சர்ச்சைகள் குறித்து புலிகள் அமைப்பின் வெளிநாட்டுக்கிளைகள் இதுவரை கருத்து எதனையும் வெளியிடவில்லை.

இப்போது முதல் தடவையாக பாரிஸ் கிளையினர் மாத்தையா மீது தமது தலைமை விசாரணை நடத்துவதாக அறிவித்துள்ளனர்.

மாத்தையா மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தேசத்துரோக குற்றத்தின் அடிப்படையில் அவருக்கான தண்டனை வழங்கப்படும் என்று பாரிஸ் கிளையினரின் அறிக்கை தெரிவிக்கிறது.

இதன் மூலம் மாத்தையா பிரச்சனை உண்மையோ பொய்யோ என்ற சந்தேகங்களுக்கு பதில் கிடைத்துள்ளது.

மாத்தையா ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், கண்துடைப்புக்காகவே விசாரணை என்று பொய் கூறப்படுவதாகவும் தமிழ் கட்சி வட்டாரங்கள் சில சொல்லுகின்றன. எனினும் அத்தகவல் பற்றிய ஆதாரங்களை அவை கூறவில்லை.

## புதிதாக பேருந்து சேவைகள்!

(காரைதீவு நிருபர்)

மக்கள் மயப்படுத்தப்பட்ட வாழைச்சேனை பேருந்து நிலையத்திற்கு அண்மையில் 05 புதிய பஸ்கள் வந்து சேர்ந்துள்ளமையால் சாலையில் சாரதி, நடாத்துனர் பெரும் பற்றாக்குறையில் பஸ்கள் செயலாற்றுதலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் அண்மையில் நடந்தேறிய நேர்முகப்பரீட்சையின் போது 07 சாரதிகளும் 06 நடாத்துனர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனால் இப் பெரும்குறை நீங்கியது. பேருந்து நிலையத்தில் புதிதாக பல இலட்ச ரூபா செலவில் டீசல் நிரப்பும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் பஸ்களுக்கு வெளியில் டீசல் நிரப்பும் வேலையும் தவிர்க்கப்பட்டுள்ளது. இச்சாலையின் வளவு பூராக மின்சாரம் இணைக்கும் வேலையும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காத்தான்குடி- கதுறுவெல நேரடி பஸ் சேவை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இம்மாதம் முதல் வாழைச்சேனை- கொழும்பு பஸ்சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பேருந்து நிலைய நிர்வாக பணிப்பாளர் திரு. எஸ். ஆறுமுகம் தெரிவித்தார்.

## போர் ஒருபுறம்! பொருளாதார பாதிப்பு மறுபுறம்!! மனநோயாளர் அதிகமாகிவரும் யாழ்ப்பாணம்!!!

யாழ் பல்கலைக்கழக உளவளத்துறை தலைவரும், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மனநோய் மருத்துவ நிபுணருமான டாக்டர் சோமசுந்தரம் அண்மையில் வெளியிட்டுள்ள தகவல் ஒன்று அதிர்ச்சி தருகிறது.

யாழ் வைத்தியசாலையிலும், யாழ் பிரதேசத்திலும் உளவியல் ஆய்வு ஒன்றை அவர் மேற்கொண்டார்.

அந்த ஆய்வின் மூலம் பெறப்பட்டுள்ள தகவல்களின்படி கடந்த வருடத்தில் சிகிச்சை பெற்ற நோயாளிகளில் 75 வீதமானோர் ஏதோ ஒருவகையில் உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருப்பது தெரிய வந்துள்ளது.

யுத்தமும், அதனால் ஏற்பட்டு வருகின்ற பொருளாதார பாதிப்புக்களுமே மன நோயாளர்களை உருவாக்கிவருவதாக டாக்டர் சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

நோயாளர்களில் குறைந்த அளவினரே சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைக்கு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் சோமசுந்தரம் வெளியிட்டுள்ள தகவல்கள் யாழ் குடாநாட்டு மக்களின் வாழ்நிலை மிக மோசமாகிவருவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

## நியமனம் வழங்கத் தாமதம் ஏன்?

(திருகோணமலை நிருபர்)

1992ல் நடத்தப்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு திருகோணமலை மாவட்டத்தில் இன்னமும் நியமனம் வழங்கப்படாதது ஏன்? இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றைப் பாதிப்படைந்த பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

சித்தியடைந்த 28 பேருக்கு 17.3.93ல் நேர்முகப்பரீட்சை நடைபெற்றதோடு அவர்களது நடத்தை சம்பந்தமாகப் புலனாய்வு அறிக்கைகள் பெறப்பட்டிருந்தும் இன்னமும் நியமனம் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மேற்படி மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நியமனங்களைத் துரிதப்படுத்தி தங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள் என்று இம்மகஜரில் கேட்டுள்ளார்கள்.

## வெள்ளத்தால் பரவும் வியாதி!

கிளிநொச்சியில் சமீப மழை காரணமாக பாதைகள் பலவும் பாதிப்படைந்துள்ளன. போக்குவரத்துக்களும் கஷ்டமாகியுள்ளன.

மலேரியா நோய் காரணமாக மூன்று பேர் பலியாகியுள்ளனர். பலர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டின் நடுவே நீர்கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அணைக்கட்டின் மேலான வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டது.

இதன் மூலம் வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

## பத்தாயிரம் கால்நடைகள் பரிதாபச் சாவு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த அடை மழையால் 30 குளங்கள் வரை உடைப்பெடுத்தன.

உடையார் கட்டு குளம் உட்பட மூன்று பெரிய குளங்களும் உடைப்பெடுத்தன.

பதின்மூவாயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்படைந்தன.

பத்தாயிரம் கால்நடைகள் வரை வெள்ளத்தில் சிக்கி இறந்து போயின.

## பாலம் திருத்தும் புலிகள்

மன்னார் பல்லவராயன் காட்டுப் பகுதியில் வெள்ளத்தால் சிதைந்த பாலம் ஒன்றை புலிகள் அமைப்பினர் திருத்தியமைத்து வருகின்றனர்.

40 அடி நீளமான அப்பாலம் திருத்தப்பட்டால் மன்னார்-கிளிநொச்சி போக்குவரத்து இலகுவாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

பொதுமக்களும் பாலம் திருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

## அகதிமுகாம்களில் அமெரிக்கத் தூதர்

(காரைதீவு நிருபர்)

அமெரிக்க தூதுவர் ரெறிகிற்றா ஷாபர் சமீபத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்தார். அவ்வமயம் காரைதீவு விபுலானந்த அகதி முகாமிற்கும் விஜயம் செய்தார்.

விஜயத்தின்போது அம்பாறை மேலதிக அரச அதிபர் பி.வி அமரசேகர, காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன், முகாம் அதிகாரி கே. இராஜரட்ணம் சகிதம் பலர் முகாமை பார்வையிட்டனர்.

1993 டிசம்பருக்குள் அம்பாறை மாவட்ட அகதிகள் யாவரும் மீளக்குடியமர்த்தப்படுவார்களென்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் இன்னமும் காரைதீவு முகாமில் வளத்தாப்பிட்டி, அம்பாறை, மூவாங்கலை தமிழ் அகதிகள் சுமார் 2000 பேர் தங்கியுள்ளனர்.

## படகுச் சேவையும் பயணிகள் கவலையும்!

(மன்னார் நிருபர்)

தற்போது கற்பிட்டி சிறு துறைமுகத்திலிருந்து மன்னாருக்கு ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் படகுச் சேவையும், கப்பல் சேவையும் நடைபெற்று வருகின்றது. இந்தக் கப்பல் சேவையும், படகுச் சேவையும் தொடர்ந்தும் பல குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றமை குறித்து பல பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இங்கு சேவையில் ஈடுபடும்' கப்பலில் சாதாரண பயணிகளுக்கு 100 ரூபாய் அறவிடப்படுகின்றது. இந்தப் பயணிகளை தாழ்வுபாடுகரையில் இறங்குவதற்கு மேதிகமாக இன்னும் 30 ரூபாவினை செலுத்த வேண்டியுள்ளது.

கரையில் ஓர் இறங்கு துறை அமைக்கப்படாமையால் கரைக்கு சற்றுத் தொலைவில் கப்பல் நிறுத்தப்பட்டு, அதிலுள்ள பயணிகள் முதலில் ஒரு பெரிய படகில் ஏற்றப்பட்டு 20 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. இந்தப் படகும் கரைக்கு வர முடியாததால் மற்றுமொரு சிறு படகில் ஏற்றப்பட்டு அவர்களிடமிருந்து 10 ரூபாவும் அறவிடப்படுகின்றது. அவ்வாறே கற்பிட்டி-தாழ்வுபாடு படகுச் சேவைகளில் எதுவித வசதிகளும் செய்யப்பட வில்லை. கடற் பயணமே தஞ்சம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ள இவ்வேளையில், சேவையில் ஈடுபடும் படகுகளில் பயணிகளுக்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுதல் முக்கியமாகும்.

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
072-26088, 078-61933

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த புதுவருட—தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
*187, செட்டியார் தெரு, கொழும்பு 11,*
*போன்: 421398*



லோண்டரி ஒன்றிற்குப் பொறுப்பாளர் தேவை. ஸ்திரி வேலையில் தேர்ச்சி அவசியம். சிறந்த ஊதியம் வழங்கப்படும்.
No. 75/5, Maha Sandiyago Mawatha,
Mutuwal, Colombo-15.



விளம்பரத்தால் வியாபாரத்தைப் பெருக்குங்கள்.
Advertising Manager
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.



HAPPY NEW YEAR
### நரைமயிர் கறுப்பாகிறது
### புதுமை ஆனால் உண்மை

வட இந்தியாவில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவரால் 10 வருடகாலமாக பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்டது.
மெடிக்கல் ஒயில் விலை ரூபா 280/=
நீங்கள் விரும்பிய எண்ணெயுடன் கலந்து பாவிக்கலாம்.

**கிடைக்குமிடங்கள்:**
UVA MEDICALS , UDAPUSSELLAWA.
CITY DRUGS, NO. 93, OLCOTT MAWATHA, (OPPOSITE RAILWAY STATION) PETTAH
SISIRA MEDICAL- KANDY ROAD, KIRIBATHGODA.
PRAME MEDICAL, 46- PERADENIYA ROAD, KANDY.
LANKA MEDICALS, MAIN STREET, RATNAPURA.
GOMES PHARMACY, BALANGODA
ARAVINDA TRADING CO., 47, STATION ROAD, GAMPOLA
ROYAL TRADE CENTRE, NUWARAELIYA.
UVA PHARMACY, BANDARAWELA.
RENUZA, WELIMADA
LANKA CHEMIST, EDIRIWEERA STORES, STATION ROAD, BADULLA.
HAPUTALE PHARMACY, HAPUTALE.
SERENDIB PHARMACY, 400, MAIN STREET, PANADURA.
METROY PHARMACY, 66, MAIN STREET, PELMADULLA.
WIJEMANNA GROCERIES, NO.43, PANADURA ROAD, HORANA.
SHIHAB ENTERPRISES, 69, TALAWAKELLE.
CENTRAL MEDICAL STORES, 74, MAIN STREET, HATTON.

இத்தைலத்தை விற்பனை செய்வதற்கு வியாபாரிகள் தேவைப்படுகிறார்கள்.

காலவர்ண கேஷா லேப்ப (UP போமியுறா)





### தங்க நகைச் சேமிப்புத் திட்டம்

தங்க நகைப் பிரியர்களே! உங்களின் நகைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மிக இலகுவான வழி மாதாந்தம் ரூபா500/=, ரூபா 300/=, ரூபா 150/= மட்டுமே தவணை முறையில் செலுத்துங்கள். மாதாந்தம் சிறப்புப் பரிசு பெறும் அதிஷ்டம்.

பரிசு பெற்றவர்:
ரூபா 150க்கான திட்டத்தன்கீழ் 15.12.93 அன்று எமது இரண்டாவது குலுக்கலில் நுவரெலியா பொலிஸில் கடமையாற்றும் செல்வன் எம். குழந்தைவேல் ரூபா 3,600/= பெறுமதியான தங்க நகைகளைப் பரிசாகப் பெற்றார். இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலதிக விபரங்கட்கு:
SUREST COMBINE
20 DAILY FAIR COMPLEX, NUWARA - ELIYA.


## தருவது அயலகச் செய்திகள் ஏழுமலை

# உட்கட்சி மோதல்கள் உக்கிரம்!

# உற்சாகமடைகிறார் செல்வி ஜெயலலிதா!


*சமீபத்திய தேர்தல்களில் பாரதீய ஜனதாக் கட்சி பரிதாபமான தோல்வியை சந்தித்திருப்பதால் மதவாத அரசியல் மறுபரிசீலனைக்கு உள்ளாகியிருக்கிறது.*

*பாபர் மசூதி இடிப்பைச் சொல்லி வாக்குத்தேடும் பாரதீய ஜனதாவின் கனவு பொய்த்துவிட்டது.*

*தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் பாரதீய ஜனதாவின் தோல்வி சிந்திக்கவைத்திருக்கிறது.*

*மண் குதிரையை நம்பி மோசம் போகாமல் தப்பிக்கொண்டோமே என்று நினைக்கிறார்.*

*இந்தியப் பிரதமரை தேடிச் சென்று சந்தித்து பேசிவிட்டு திரும்பியுள்ளார்.*



கலைஞர்

*ஆனால் தமிழக காங்கிரசின் தற்போதைய தலைமை மீண்டும் ஜெயலலிதாவோடு கூட்டு வேண்டாம் என்று பிடிவாதமாகக் கூறுகிறது. முன்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை வானளாவப் புகழ்ந்தவர் தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.வாழப்பாடி ராமமூர்த்தி.*

*இப்போது திரு. ராமமூர்த்தியும்-ஜெயலலிதாவும் கீரியும்-பாம்பும் போல மாறிவிட்டனர்.*



ஜெயலலிதா

*தமிழக காங்கிரஸ் தலைவரை மாற்றுங்கள். அப்போதுதான் மீண்டும் கூட்டு என்கிறார் ஜெயலலிதா.*

*ஆனால் ஜெயலலிதாவுக்கு நிலமை சாதகம்.*

*தமிழக காங்கிரஸ் கமிட்டிக்குள் மீண்டும் கோஷ்டி மோதல்கள் வெடித்துள்ளன.*

*தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிரான அணியில் இருப்பதாகக் கூறப் படுகிறது.*

*அதனால் தமிழக காங்கிரஸ் தலைவர் கூட்டுவேண்டாம் என்று சொல்வதை இந்தியப் பிரதமர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்றே தெரிகிறது.*

*தி.மு.க பிளவு, காங்கிரஸ் கோஷ்டி மோதல் என்பவை ஜெயலலிதாவின் நாற்காலியை ஆடாமல் வைத்திருக்க உதவுகின்றன.*

■

*இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் துணைவியார் திருமதி சோனியா காந்தி அரசியலில் குதிப்பாரா இல்லையா? என்பது முன்னர் விவாதிக்கப்பட்ட விடயம்.*

*பின்னர் விவாதங்கள் மறைந்துவிட்டன. எனினும் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் இப்போதும் சோனியா காந்தி மீது மரியாதை கொண்டுள்ளார்கள்.*

*அரசியலில் இருந்து ஒதுங்கி பொது நிகழ்ச்சிகளில் கலக்காமல் இருந்துவந்த திருமதி சோனியா காந்தி சமீபத்தில் உத்தர பிரதேசத்தில் உள்ள அமேதி தொகுதிக்குச் சென்றுள்ளார்.*

*ராஜீவ் காந்தியின் தொகுதியான அமேதிக்கு, அவர் மறைந்த பின்னர், இப்போதுதான் திருமதி சோனியா முதல் தடவையாக சென்றுள்ளார்.*

*அங்கு கால்நடைப் பராமரிப்பு நிலைய தொடக்கவிழாவில் அவர் கலந்து கொண்டார்.*

*திருமதி சோனியா காந்திக்கு உற்சாகமான வரவேற்புக் கொடுக்கப்பட்டது.*

*அவரும் ராஜீவ் காந்தி பாணியில், வரவேற்க வந்திருந்த மக்கள் மத்தியில் புகுந்து அவர்களுடன் பேசினார்.*

*கூடியிருந்த மக்கள், தீவிர அரசியலில் ஈடுபடுமாறு கோசமிட்டனர்.*

*இந்த நிகழ்ச்சி திருமதி சோனியா அரசியலின் பக்கம் திரும்பக் கூடுமோ என்ற கேள்வியை மீண்டும் எழுப்பியுள்ளது.*

■

*திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமைச் செயலகமாக சென்னையில் இருப்பது அண்ணா அறிவாலயம்.*

*இப்போது தி.மு.க பிளவுபட்டிருப்பதால் அண்ணா அறிவாலயத்தை கைப்பற்றும் முயற்சியில் வை.கோபால்சாமி குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.*

*அறிவாலயம் தி.மு.கவின் பொதுச் சொத்து. எனவே அங்கு போவோம் என்கிறார் வை.கோ.*


*தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் கலைஞருக்கும் இடையே இரகசிய உறவு இருப்பதாகவும் வை.கோ குற்றம் சாட்டியுள்ளார்.*

*வை.கோபால்சாமி அணியினருக்கு சார்பாக தமிழக அரசும், பொலிசாரும் நடந்து கொள்வதாக கலைஞர் மு.கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.*

*திருச்சியில் கட்சிக் கொடி ஏற்றும் விவகாரத்தில் கலைஞர் அயிணினரும், வை.கோ அணியினரும் மோதிக்கொண்டனர்.*

*பொலிசார் கண்ணீர்புகை அடித்து கூட்டத்தைக் கலைத்தனர். பொலிசார் ஒரு தலைப்பட்சமாக நடந்ததாக தி.மு.க பொதுச் செயலாளர் திரு. அன்பழகன் கண்டனம் தெரிவித்திருந்தார்.*

*கட்சிக் கொடி நிறம் கொண்ட*



வை.கோ.

*கரையுள்ள வேஷ்டி கட்டும் பழக்கம் தி.மு.க தொண்டர்களிடம் காணப்படுவதுண்டு.*

*ஆனால், வை. கோபால்சாமியின் கூட்டங்களில் பெரும்பாலும் இளைஞர்களே கலந்துகௌ்கின்றனர். கரை வேஷ்டிகள் குறைந்து, பெரும்பாலானவர்கள் ஜீன்ஸ் போட்டவர்களாகவே காணப்படுகின்றனர். படித்தவர்களாகவும் உள்ளனர் என்கிறார்கள் அவதானிகள்.*

■

## புகார் பெட்டி

### பொது வைத்தியசாலையில் புதுத் தமிழ்

கொழும்பு பொது வைத்திய சாலை மருந்தகப்பகுதியிலுள்ள விளம்பரப் பலகையில் சுமார் ஆறு இடங்களில் "னவ்த்தி பதிவேடுதல்" என்று எழுதப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் இதுதான்- "வைத்திய பதிவேடுகள்." இதன் பின்னராவது திருத்தி எழுதுவார்களா!

பாலமுனை வாஹிட்.

### அக்கறைப்படவேண்டிய வீதி!

அக்கரைப்பற்று மத்திய பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னுள்ள 'விகாரை வீதி' சுமார் ஐந்து மாத காலமாக மூடப்பட்டு வீதியின் முன்பு குப்பைகள் கொட்டப்படுகின்றன. இப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக குப்பைகள் அழுகி துர்நாற்றம் வீசுகின்றன. இது நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு பெரிதும் உதவுகிறது.

இவ்வீதியை கவனத்தில் கொள்ளுமாறு கருங்கொடித்தீவு நகர சபைக்கு பலமுறை அறிவித்தும் பயன் இல்லாது போய்விட்டது.

இவ்வீதி மூடப்பட்டுக் கிடப்பதனால் சந்தைக்குச் செல்லும் மக்கள் அருகிலுள்ள விகாரையைக் கடந்து பொத்துவில் வீதிக்குச் சென்று அங்கிருந்தே சந்தைக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கவலைக்குரிய வீதியை இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண் திறந்து பார்ப்பார்களா? மக்கள் படும் அவஸ்தையைப் போக்குவார்களா?

சாரங்கன்-அக்கரைப்பற்று-09.

தற்பொழுது பெய்துவரும் அடைமழையின் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்தாந்தீவு என்னும் கிராமத்தில் நீர் தேங்கி நிற்கிறது.

பள்ளிவாசல் வளவு, வைத்தியசாலை வளவு பாதைகளின் இரு ஓரங்கள், சிலரின் வீட்டு வாசலில் நீர் தேங்கி காட்சியளிக்கிறது. இதைப் பார்த்த ஊர் பிரமுகர்கள் சிலர் சிரமதானம் ஒன்றை சென்ற 21.12.93ல் ஆரம்பித்தனர்.

இச்சிரமதானம் அதிக பலன் அளிக்கவில்லை. காரணம் அதிகளவு நீர் இருப்பதனால் நீரை வெளியேற்றுவதற்கு பழைய வாய்க்கால்கள் மண்ணினால் மூடப்பட்டுள்ளது. ஊர் மக்கள் முடிந்தளவு இவ்வாய்க்கால்களை துப்பரவு செய்து நீரை சிறு கடலுடன் சேர்த்து விட்டனர்.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வேலையை இன்னும் திறம்பட செய்வதற்கு முயற்சி எடுத்து இங்கு நீர் தங்காத படி முயற்சி எடுக்கும்படி ஊர் மக்களின் சார்பில் வேண்டுகிறேன்.

எம்.ஏ.ஏ.ஜுனூத்-கொத்தாந்தீவு.

### தேவை ஒரு மணிக்கூட்டு கோபுரம்

கல்முனையில் 'றவுண்ட்டெபவுட்' என்று அழைக்கப்படும் இடத்தில் ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட வேண்டுமென்று நீண்ட நாளாக நேசக் கரம் நீட்டுகின்றனர் இங்கு வாழ் மக்கள்.

வர்த்தகத்திற்கும் வாணிபத்திற்கும் பேர்போன கல்முனை நகருக்கு உள்ளூர் வெளியூர் வாசிகள் தத்தம் வேலையின் நிமித்தம் வருவது வழக்கம்.

நான்கு சந்திகளைக் கொண்ட இவ் றவுண்டெபவுட்டுக்கு அருகாமையில்தான் கல்முனை நியூ மார்க்கட்டும் அமைந்துள்ளது.

அங்காடி வியாபாரிகளும் ஆங்காங்கே கொட்டில் அமைத்து தமது வியாபாரங்களையும் இங்கேதான் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கெல்லாம் இங்கு ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் இருந்தால் பெரும் பிரயோசனம் அளிக்கும். பொது மக்களுக்கும் இது பேர் உதவியாக இருக்கும்.

எனவே காலம் தாழ்த்தாது நேரம் காட்டும் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

### படுவான்கரை மக்களின் அவல நிலை

கிழக்கிலங்கைக்கு மட்டுமல்ல இலங்கை முழுவதுக்கு(ம்)மே நெல்லுற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடம் படுவான்கரை. இலங்கையின் நெல் உற்பத்தியில் கிட்டத்தட்ட கால் பங்கு வீதமான நெல்லைப் பெறுவதே இப்பகுதியில்தான். இங்கே வாழ்பவர்களில் பெரும்பாலானோர் (98%) விவசாயிகள் ஆகும்.

மறைந்த ஜனாதிபதி திரு.ஆர்.பிரேமதாசா அவர்களின் இலட்சியப்படி இப் பாமர மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களின் காலடியில் சேவை செய்யவென்று பிரதேச செயலகம், தபால் நிலையங்கள் (5), கமநலச் சேவை அலுவலகம், கிராம அபிவிருத்திச் சங்கம், பிரதேச சபை, நீர்பாசன திணைக்களம், கூட்டுறவுச்சங்கங்கள் (10), பாடசாலைகள் (23), வைத்திய நிலையங்கள், கல்வித் திணைக்களம் ஆகியவற்றை மண்முனை மேற்குப் பிரதேசத்தில் நிறுவினார்.

இதன்படி அண்ணளவாக 75ற்கும் மேற்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் கடமை புரிகின்றனர். இவர்கள் யாவருமே மண்முனை மேற்குப் பிரதேசத்திற்குச் செல்வதென்றால் வலையிறவுப் பாலத்தின் வழியாகவே செல்ல வேண்டும். இப்பாலம் அண்ணளவாக 1 கி.மீ நீளமுடையது. மார்கழி மாத மழைகாலத்தில் இப்பாலத்திற்கு மேல் 4-5 உயரத்தில் வெள்ளம் பாயும். அதுமட்டுமல்ல இப்படிப்பட்ட பாலம் போடப்பட்டு இருப்பது கிறவலினாலேயே. மழைகாலத்தில் இது கரைவதால் போக்குவரத்து மிகவும் சீர்கெட்டுப் போய்விடுகின்றது. அத்துடன் பஸ் சேவையோ மிகவும் மோசமான நிலையில் உள்ளது. சில நாட்களில் பஸ் சேவையே இருக்கமாட்டாது. இந்த நாட்களில் மக்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களும் லொறி, துவிச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் என்பவற்றின் மூலம் ஏன் சில சமயங்களில் நடையிலும் கூட செல்வதுண்டு. 10-12 மைல் தூரம் இவ்வாறு கஷ்டப்பட்டுச் சென்று எப்படி மக்களுக்குச் சேவை செய்வது? இதை ஜனாதிபதி எமது தமிழ்/முஸ்லீம் அமைச்சர்கள் மற்றும், போக்குவரத்து சேவையினர் கவனித்து உதவி செய்யுமாறு வேண்டுகின்றேன்.

### மழைவந்தால் போதும்-மின்சாரம் போகும்
### கிண்ணியாவின் அவலம்

கிண்ணியா பிரதேச் பகுதியில், மழை வந்தால் மின்சாரம் செயலிழந்து விடுகின்றது. அது செயல்பட இரண்டொரு நாட்களும் செல்லுகின்றன. இதுபற்றி பொதுமக்கள் பெரிதும் கவலையடைகின்றனர்.

கிண்ணியா பிரதேச பல வீதிகளில் தெரு மின்விளக்குகள் இருந்தும் அவையும் செயலிழந்து காணப்படுகின்றன.

கிண்ணியா,இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இரவு பகல் கடமைகளில் இருந்தும் விமோசனம் இல்லை, உரிய நேரத்திற்கு அவர்கள் சேவைகள் கிடைப்பதாகத் தெரியவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் ஆவன செய்யுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

கிண்ணியா நிருபர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நாரதர்

# தொலைதூரத்தில் தீர்வுகள் தொடும் தூரத்தில் யுத்தம்!

தேர்தல்களை நோக்கியே இனி தெற்கின் அரசியல் அரங்கில் காட்சிகள் தோன்றும்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஏன் காணவில்லை? என்று எதிர்க்கட்சிகள் சிலவற்றின் மேடையிலே கேள்விகள் உரமாய் எழுப்பப்படும்.

கேள்விகள் எழுப்புவோர் தீர்வுகளைப் பற்றி மட்டும் சொல்ல மாட்டார்கள்.

தாம் பதவிக்கு வந்தால் யுத்தம் இருந்த இடம் தெரியாமல் போகும். இனப்பிரச்சனை காணாமல் போகும் என்றெல்லாம் வாக்குறுதிகள் மைதானங்களை நிரப்பப் போகின்றன.

அப்படி என்ன தந்திரம் அல்லது மந்திரம் வைத்திருக்கிறார்கள் என்று திருவாளர் பொது ஜனம் சிந்திக்க வேண்டும்.

மர்மக் கதைபோல முடிவை சஸ்பென்சாக வைத்திருக்காமல் மக்கள் அரங்கின் முன் தனது தீர்வுத்திட்டத்தை அரசியல் கட்சிகள் முன்வைக்க வேண்டும் என்று திருவாளர் பொதுஜனம் கேட்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு யுத்த முனையில் இராணுவத்தினருக்கு ஏற்படும் தோல்விகள் எதிர்க்கட்சிகளுக்கு பிரச்சார இலாபம்.

அரசாங்கத்தால் புலிகளை ஒடுக்க முடியவில்லை. யுத்தத்தில் வெல்ல முடியவில்லை. யுத்தம் நடத்தத் தெரியவில்லை என்று உரத்துச் சொல்ல முடியும்.

தேர்தல் சமயத்தில் புலிகள் ஒரு பெரிய தாக்குதலை நடத்திவிட்டால் தேர்தலின் முடிவுகளையும் அது பாதிக்கக்கூடும்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் கொல்லப்பட்டது எதிர்க்கட்சிகளுக்கு சாதகமாகவே அமைந்தது.

அதற்காக எதிர்க்கட்சிகள் புலிகளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

பகிரங்கமாக சொல்லாமல் போனாலும் உள் மனதிற்குள் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதில் சந்தேகம் இல்லை.

ஒருவேளை புலிகள் அமைப்பினர் அக் கொலைக்கு உரிமை கோரியிருந்தால் கூட, "இது பிரேமதாசாவுக்காக பிரபாகரன் விடும் கதை. நம்பவேண்டாம்" என்று எதிர்க்கட்சிகள் சில எழுந்து சொல்லியிருக்கக் கூடும்.

யாழ்ப்பாணத்திலும், வெளிநாடுகள் சிலவற்றிலும் புலிகள் அமைப்பினரின் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் லலித் கொல்லப்பட்டது நியாயமே என்று வலியுறுத்துவது போன்ற கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

லலித் அத்துலத்முதலி சுடப்பட்டது கிருலப்பனைக் கூட்டத்தில்.

அதற்கு முன்னர் அவர் கலந்து கொண்ட கூட்டத்தில் "நாம் யானையை வீழ்த்துவது சுலபம். ஆனால் புலியைத் தப்பவிடக்கூடாது. குறிவைக்க வேண்டும்" என்று கூறினார் எனவும், ஆனால் கிருலப்பனையில் அவருக்கே குறிவைக்கப்பட்டது என்றும் புலிகள் அமைப்பினரின் பத்திரிகைகள் எழுதின.

அந்தப் பத்திரிகைகள் வெளியிட்ட கருத்துக்கள் மறைமுக உரிமை கோரல்களாகவே அமைந்தன.

ஆயினும் எதிர்க்கட்சிகள் அது பற்றி அறிந்துகொண்டபோதும், அறிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.


முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் அத்துலத் முதலி கொலை விவகாரம் மெல்ல மெல்ல மறக்கப்பட்டது.

தற்போதும் ஜனாதிபதியாக பிரேமதாசா இருந்திருந்தால் லலித் அத்துலத் முதலியின் பெயரை எதிர்க்கட்சியினர் அடிக்கடி உச்சரித்திருப்பார்கள்.

முன்னர் சிறிதளவு சந்தேகம் இருந்திருந்தால் கூட இப்போது பெரும்பாலும் தெரிந்த விசயம் லலித் கொலைக்கு புலிகளே காரணம் என்பது.

ஆனாலும் அதை எதிர்க்கட்சிகள் வெளியே சொல்லப் போவதில்லை.

எனவே, லலித் அத்துலத் முதலியின் வாழ்க்கை வரலாறு எழுதப்படும்போது அவர் யாரால் கொல்லப்பட்டார் என்பது ஒரு புதிராகவே விடப்படும்.



இதுதான் துரதிஷ்டம். எந்தவொரு பிரச்சனையும் பரந்த நோக்கில், உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்ற திசையில் கையாளப்படுவதை பாழாய்ப் போன அரசியல் தடுத்து விடுகிறது.

அதனால் மக்களும் ஒரு குழப்பமான மனநிலைக்குத் தள்ளப் படுகிறார்கள்.

தேர்தல் வெற்றிக்கு உண்மை உதவாது என்று தெரிந்தால் அதனை பேசாமல் இருப்பதே அரசியல் தந்திரம் என்றாகிவிட்டது.

லலித் கொலையானால் என்ன? இனப்பிரச்சனை என்றால் என்ன? அரசியல் லாபத்தின் அடிப்படையிலேயே அவை நோக்கப்படுகின்றன.

எதிர்வரப்போகும் தேர்தலிலும் இனப்பிரச்சனையும், யுத்தமும் எதிர்க் கட்சிகளால் அரசைக் குறை கூறுவதற்கு கிடைத்த சாதனங்களாகவே பயன் படுத்தப்படும்.

அரசியல் தீர்வை முன்வையுங்கள் என்று அரசை எதிர்க்கட்சிகள் வற்புறுத்துவது ஒரு அரசியல் தந்திரம்.

ஆளும் கட்சி ஒரு தீர்வை முன்வைத்தால் உடனே அதனை அக்குவேறு ஆணிவேறாக அலசி, அதனை விமர்சித்தே பிரச்சாரம் செய்ய ஒரு வாய்ப்புக் கிடைக்கும்.

ஆனால், ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிகளின் தந்திரம் தெரிந்தேயிருக்கிறது.

தான் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்தால் அதனை எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு எழுத்தாக பார்த்து விமர்சிக்கலாம் என்று தெரிந்து வைத்திருக்கிறது.

எனவே, ஆளும்கட்சியும் எதிர்வரும் தேர்தலில் காத்திரமான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதில்லை.

ஆக, மொத்தத்தில் அரசியல் துணிச்சல் மிக அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும் காலகட்டத்தில் அதனை கண்டுபிடிப்பது கஷ்டமானதாகிவிட்டது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஏமாற்றமான முடிவு திரு. மங்கள முனசிங்கவை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தது. தமிழ் பேசும் மக்களை நம்பிக்கையீனங்களுக்கு மேலும் இட்டுச் சென்றது.

புற்று நோய்போல பரவியுள்ள பிரச்சனைக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு அறுவைச் சிகிச்சை நடத்த முடியவில்லை.


அரசியல் கட்சிகளுக்குள் மனம் திறந்த போக்கும், பரந்துபட்ட பார்வையும், அரசியல் துணிச்சலும் இல்லாதபோது சர்வகட்சி தீர்வு என்பது வெறும் கனவாகவே இருக்கும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு தீர்க்கமான அரசியல் தீர்வை முன்வைத்திருந்தால் அதன் மூலம் எதிர்க்கட்சிகளுக்கு சொந்த அரசியல் லாபம் ஏற்பட்டிருக்க முடியாது.

அரசாங்கம் இனப்பிரச்சனையை தீர்க்கவில்லை. ஆளும்கட்சியிடம் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை என்று பிரச்சாரம் செய்வது எப்படி?

எனவே, பாராளுமன்ற தெரிவுக்குழு என்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா விரித்த புத்திசாலித்தனமான வலையில் இருந்து தப்பிக்கொள்ள காலத்தை இழுத்தடித்து, விவாதங்களால் சலிப்படையவைத்து ஒருவாறு எதிர்க்கட்சிகள் தப்பிக்கொண்டன.

எதிர்க்கட்சிகள் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் எதிர்ப்பில்லாமல் அத்திட்டத்தை நிறைவேற்றிவிடலாம். அவ்வாறு முன்வைக்க முடியாவிட்டால்கூட அரசியல் தீர்வு எங்கே என்ற கேள்விகளுக்கு பதில் சொல்ல பாராளுமன்றத் தெரிவுக்குழுவைச் சுட்டிக்காட்டலாம் என்றே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா நினைத்திருப்பார்.



லலித் கொலை எதிர்க்கட்சிகளுக்கு அரசியல் லாபம். புலிகளது மறைமுக உரிமை கோரல்களை அவை கண்டுகொள்ளவில்லை.

ஆக, மொத்தத்தில் தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் ஒருவரைச் சொல்லி ஒருவர் தப்பிக்கொள்ளவே பார்க்கிறார்கள்.

இதில், இன்னொரு விசயமும் இருக்கிறது. யார் குத்தியாவது அரிசியாகட்டும் என்று இருக்கிறார்களோ என்றால் அதுவும் இல்லை.

நீ தீர்வை வை என்று சொல்லுவார்கள். அவ்வாறு தீர்வை வைத்தால் உடனே துள்ளுவார்கள். எல்லாம் போச்சு, தமிழர்களுக்கு கொடுக்கக் கூடாததையெல்லாம் கொடுத்துவிட்டார்கள் என்பது போல பேசத் தொடங்கிவிடுவார்கள். பிறகென்ன, தேர்தலுக்கு சிறந்த பிரச்சாரம் கிடைத்த மாதிரித்தான்.

அதனால் அரசாங்கம் யோசிக்கிறது. அவசரப்பட்டு தீர்வை முன்வைத்துவிட்டு பிறகு எதற்கு கையைப் பிசைந்து கொண்டு நிற்க வேண்டும் என்று.

பிரதான எதிர்க்கட்சிகளும் யோசிக்கின்றன. அரசியல் தீர்வை முன்வைத்தால் வாக்கு அறுவடைக்கு பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்று.

எனவே எதிர்வரப்போகும் தேர்தலை முன்னிட்டு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் முன்வைக்கப் போகும் வேலைத்திட்டங்களில் இனப்பிரச்சனை பற்றிய குறிப்புக்கள் இருக்கலாம். ஆனால் தீர்வுகள் இருக்காது.

நவசமசமாஜ கட்சி போன்றவை இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். ஆனால் அக்கட்சிகளால் பெரியளவில் வெகுஜன செல்வாக்கை பெறமுடியாது. எனினும் அவற்றின் அரசியல் துணிச்சலை பாராட்டியே ஆகவேண்டும்.

இந்த ஆண்டு அரசியல் அரங்கில் தேர்தலே முக்கிய காட்சி என்பதால் அரசியல் தீர்வுகள் பற்றிய எதிர்பார்ப்புக்களை ஒரு கொஞ்ச காலத்திற்கு மூட்டை கட்டி வைத்துவிடலாம் போலத் தோன்றுகிறது.

ஆனால், வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தம் இடைக்கிடையே விடுமுறை எடுத்துக்கொண்டு தொடர்ந்தும் மனித உயிர்களை விரயமாக்கும் வேலையைச் செய்யும்.

தீர்வுகள் தொலைதூரத்தில். யுத்தமோ தொடும் தூரத்தில்.

■

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள் மீண்டும் பிளவு வருமா என்ற கேள்வி பரவலாய் எழுந்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் திரு.தொண்டமானுக்கும், பொதுச்செயலாளர் திரு.செல்லச்சாமிக்கும் இடையே சமீபகாலத்தில் ஏற்பட்ட பனிப்போர் ஒன்றும் பரகசியமல்ல.

இன்று பனிபோர் விலகி படு சூடான அரசியல் மோதலாக பகிரங்கத்திற்கு வந்துவிட்டது.

கடந்த வருடம் அமைச்சர் தொண்டாவின் 81வது பிறந்தநாள் விழாவின் போது அமைச்சர் செல்லா ஒரு செய்தி விடுத்திருந்தார்.

இரண்டு முறை இ.தொ.கா பிளவுபட்ட போதும் தான் தலைவரது பக்கமே நின்றதாக அச் செய்தியில் கூறியிருந்தார்.

இப்போது அமைச்சர் செல்லாவே பிரிந்து சென்றுவிடுவாரோ என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உட்கட்சிப் பிரச்சனைகள் பத்திரிகைகள் வாயிலாக பகிரங்கத்திற்கு வந்தபோதே பிளவுக்கான பாதை திறந்துவிட்டது போலவே தோன்றியது.

முதலாம் இடத்தில் இருப்பவருக்கும், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவருக்குமான முரண்பாடுகள் பிளவுகளாகிவிடுவதால் சம்பந்தப்பட்ட அமைப்புக்களது பலமே வீழ்ச்சியடைகிறது.

சம்பந்தப்பட்ட அமைப்புக்களது உறுப்பினர்கள் விரக்தியடையும் நிலையும் ஏற்படும். கோஷ்டி பிரிப்புக்களை பயன்படுத்தி தவறான சக்திகள் தலையெடுக்கும்.

தமிழ்நாட்டில் தி.மு.கவுக்குள்ளும் தற்போது அந்த நிலைதான் ஏற்பட்டுள்ளது.

கட்சியை தனது குடும்பச் சொத்துப் போல் கலைஞர் நினைக்கிறார் என்ற எண்ணத்தை அவரது நடவடிக்கைகள் வளர்த்துவிட்டுள்ளன.

அதனால் கலைஞருக்குப் பின்னர் கட்சியை நடத்தக்கூடிய தலைமை இல்லாமல் போய்விட்டது.

இங்கே புலிகள் அமைப்புக்குள்ளும் தலைவருக்கும் பிரதித்தலைவருக்கும் இடையே ஏற்பட்ட விரிசல் பிரபாகரனுக்கு பின்னர், இயக்கம் என்னாகும் என்ற கேள்வியை அந்த அமைப்புக்குள் மெல்ல தோற்றுவிக்கிறது.

கூட்டுத்தலைமை, முடிவுகளை கலந்துபேசி மேற்கொள்ளுதல், தவறுகளை திருத்துதல் என்பன வடக்கு-கிழக்கு அமைப்புக்கள் மத்தியில் மறைந்த போதுதான் நோக்கங்களே திசைமாறிப் போயின.

யார் யாரோ எல்லாம் தங்களை மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

அமைப்புக்களை உடைப்பது சுலபம். பின்னர் அவ்வாறான ஒரு அமைப்பை உருவாக்குவது அத்தனை சுலபமல்ல.

இ.தொ.கா தலைவர்கள் தொண்டாவும், செல்லாவும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள்.

தனி மனித கௌரவங்கள், பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்ற பிடிவாதங்கள் தமக்கு இடையிலே புகுந்துகொள்ளாமல் தமது தொழிற்சங்கப் பலத்தை கட்டிக்காக்க வேண்டும்.

இ.தொ.கா என்னும் அமைப்பு தொடர்பாக முரண்பாடுகள் உள்ளவர்கள் கூட ஒரு விசயத்தை தற்போதைக்கு மறக்கக்கூடாது. சரியோ, தவறோ இ.தொ.காவே இன்று மலையக தமிழ் மக்களது அரசியல் பலமாக இருக்கிறது.

அதன் பலம் இப்போது உடைவது மலையக தமிழ்மக்களுக்கு நன்மை தராது.

மறுபுறம், இ.தொ.காவின் உள்பிரச்சனைகளில் அவசரப்பட்டு கருத்துச் சொல்லும் சக கட்சிகள் நா காப்பது நலம்.

ஏனெனில், பிளவுகளுக்கு அவர்களே காரணம் என்ற கருத்து ஏற்பட்டுவிடும். அதனால் கட்சிகளுக்கிடையேயான உறவில் நீண்டகால கசப்புக்கள் நிலைத்துவிடக் கூடும்.

இப்போதே அவ்வாறான ஒரு கருத்து ஏற்பட்டுவிட்டது என்றே நினைக்க முடிகிறது.

■



# அதிரடி அய்யாத்துரை

பிரான்சிலை ஒரு பிறந்தநாள் விழா. பிள்ளையின் தகப்பனார் கையிலை ஒரு பெட்டி மாதிப் பார்சலோடை வந்தாராம். கூடியிருந்தவைக்கு யோசனை. என்ன பரிசாய் இருக்கும் எண்டு. அவர் பெட்டியை பிரிச்சு வெளியிலை எடுத்த பொருளைக் கண்டதும் எல்லாரும் விறைச்சுப் போச்சினம். அது கத்தி. பிறகு கூர்ந்து பார்த்தா தங்கத்தால் செய்த கத்தி. அதொண்டும் இல்லை. பிள்ளைக்கு 21வது பிறந்தநாள். கேக்வெட்டேக்கை சாதாரண கத்தியாலை வெட்டினா குடும்ப கௌரவம் என்னாகும். அதுதான் 21 பவுணிலை கத்திசெய்து கேக் வெட்டினவையாம். சந்தனம் மெத்தித்தான் போச்சு.

ஐரோப்பிய நாடொன்றிலை லொத்தர் குலுக்கினவையாம். எங்கட இலங்கைத் தமிழர் ஒருத்தருக்கு கார் விழுந்திருக்குது. அவர் உடனை சொன்னாராம், "இந்தக் கார் லொத்தர் கார். இதை நான் தொண்டு நிறுவனத்துக்கு கொடுக்கப்போறன்" கேட்டவைக்கு ஆச்சரியம். பெரிய மனசை பாராட்டினவையும், வாழ்த்தினவையும் எண்டு எக்கச்சக்க மரியாதை. மரியாதையளை வாங்கிக்கொண்டு காரிலை ஏறிப் போனவர் போனவர்தான். திரும்பிவரவும் இல்லை. காரைக் குடுக்கவும் இல்லை. பாத்தியளோ கதையளை. சிந்திக்காதையுங்கோ வேதனை வரும். சிரியுங்கோ. அதுபோதும்.

பண்டிகைக் காலப் பட்டாசுக் கடைகள் தலைநகரிலை கலகலப்புத்தான். அதிலை பாருங்கோ சில பட்டாசுக்கடையலைப் பார்க்கேக்கை தப்பித்தவறி ஆயுதம் விக்கிற கடைக்கு வந்திட்டமோ எண்டு சந்தேகம் வருகுது. கண்ணிவெடியள், கிரனைட்டுக்கள் மற்றும் பல ரக வெடிகள் எண்டு பல உருவங்களிலை பட்டாசுகள் வந்திருக்குது. ஆயுதக் கவர்சிக்கு தெற்கிலையும் மவுசுதானாக்கும்.

யாழ்ப்பாணத்திலை இரெண்டெழுத்தார் நடத்தும் காவல்துறையிலை பழைய பென்சனியர் பொலிஸ்காரர் சிலரையும் சேர்த்தவையாம். அவை ஜாலியா அங்கை இஞ்சை சம்திங் வாங்கி பொக்கற்றுக்கை போட விசயம் மேலை போட்டுது. இப்ப நிப்பாட்டியாச்சுதாம். மிஞ்சிப்போனா ஒஃபீஸ் வேலையோட சரி. கீழை இறங்க விடுறேல்லையாம்.

புது வருசத்துக்கு வடக்கு-கிழக்கிலை வெடிச்சத்தம் கேட்கும்தானே. அங்கை இருந்து வந்து கனடாவிலை இருக்கிற நாங்கள் வெடிச்சத்தம் போடாட்டி என்ன மரியாதை? இப்பிடி நினைச்சு கிறிஸ்மஸ் புதுவருட சந்தோச உற்சாகத்திலை இரண்டு கோஷ்டிகள் கனடாவிலை டுமீல்.. டுமீல். தமிழன் தமிழனை துரத்திற வேலை அங்கை போயும் நடக்க வேணுமோ?

எங்கட கண்ணதாசன், திருநாவுக்கரசர் மூலமாய் கடன் வாங்கி எழுதினபாட்டு "ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதோரே கண்ணா" இப்பநான் நாவுக்கரசர் பாட்டுத் தாறன் பாருங்கோ:


"ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆர் ஒருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணா தாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே"

இதை நாட்டு நிலவரம், அரசியல் நடப்புக்கள் எண்டு எதனோடும் யாரும் பொருத்திப் பார்த்தால் அதற்கு அய்யாத்துரை பாத்திரவாளியல்ல.

■

உலக ரவுண்டப்

# இராக்கை நம்பலாமா? ஐ.நா.சபை யோசிக்கிறது



குவைத் நாட்டின்மீது ஆக்கிரமிப்பை ஆரம்பித்தமைத் தொடர்ந்து இராக்கின்மீது ஐக்கியநாடுகள் பொருளாதாரத் தடையினை விதித்திருந்தது. இதனால் இராக் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். அந்நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியைத் தரும் எண்ணையையும் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் இராக் உள்ளது.


இராக்கின் அதிபர் சதாம் ஹுசைன் தொடர்ந்து அணுஆயுதங்களுட்பட பல பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொருளாதாரத் தடையும் எண்ணை விற்பனைத் தடையும் கடந்த மூன்று ஆண்டுகளாக அமுலில் உள்ளன.

அபிவிருத்திக்கான முயற்சிகள் என்ற பெயரிலேயே பயங்கர ஆயுதங்களை இராக் உற்பத்தி செய்கிறது என்று கருதிய உலக நிறுவனம், அவற்றினைப் பார்வையிட அனுமதி கோரியது. ஆனால் சதாம் அதற்கு இத்தனை காலமும் மறுத்து வந்தார்.

இப்பொழுது ஐ.நா. பார்வையாளர்கள், இத்தகைய 'அபிவிருத்தி நிலை'யங்களை பார்வையிட இராக் இணக்கம் தந்திருக்கிறது. அத்துடன் அத்தியாவசிய பொருட்களுக்கான தடையினையும் நீக்கி எண்ணை விற்பனைக்கான உரிமையினையும் வழங்குமாறு அந்நாடு கோரிக்கை விடுத்திருக்கிறது.

இராக்கின் தற்போதைய மனமாற்றத்தில் ஐ.நா.வுக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்காவும் இது விடயத்தில் சற்றுக் கடுமையான நிலையில் இருப்பதாகவும் தெரிகிறது. ■

## நீளமோ நீளம் விசித்திரப் பூச்சி



அடித்தடியின் மீது ஒரு குச்சியினை வைத்துள்ளதோ என்று கருதுவீர்கள். ஆனால் இது வெறும் குச்சியல்ல. உயிருள்ள ஒரு பூச்சி. பெரும்பாலும் செடிகளில் காணப்படும் இவை எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஏதுவாக இத்தோற்றத்தினை இயற்கை வழங்கியிருக்கிறது.

சில பூச்சிகள் தாங்கள் வாழும் சூழலுக்கேற்ப தங்கள் உடலை இயற்கையாக மாற்றுகின்றன. சில பச்சை வர்ணப்பூச்சிகள் பச்சை இலைகளில் ஒட்டிக்கொண்டு வாழும். இலைகளுக்கும் பூச்சிகளுக்குமிடையில் பேதம் கண்டு பிடிப்பதே கடினம்.

குச்சி போன்று காணப்படும் இப்பூச்சியை ஆங்கிலத்தில் 'வோக்கிங் ஸ்ரிக்' (Walking stick) 'ஊன்று தடி' என்று கூறுகிறார்கள். 'தாவரவியல் பெயர் சற்று நீளமானது- டையோஃபெறாமேரா ஃபெமோராட்டா' என்பதாகும். இவை போன்ற பூச்சிகள் உலகின் பல நாடுகளில் காணப்படுகின்றன. படத்தில் காணப்படும் இவ்வகை ஏறத்தாழ 3 அடி-(36அங்குல) நீளம் வரை வளருமாம். இது ஒரு அடி ஒரு அங்குல நீளம் கொண்டது.

இப்பூச்சிகளில் ஒரு நல்ல பழக்கமுண்டு. நமது அடுப்படிக்குள் நுழைந்தாலும் நமது உணவினை இவை தீண்டுவதில்லை. செடிகளில் ஒட்டிக் கொண்டு மரப்பட்டைகளையே உண்டு 'மெலி'கிறது.

## "யன்னலை மூடாதே" சீனாவில் உரிமைக்குரல்

பிற நாடுகளிலிருந்து செய்திகள் மக்கள் சீனாவுக்குள் நுழைந்துவிடாமல் போடப்பட்டிருந்த மூங்கில் திரை நீக்கப்பட்டு அந்நாட்டு மக்கள் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள சில ஆண்டுகளாகத்தான் அனுமதிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பிறநாட்டுத் தொலைக்காட்சிகளைப் பார்க்கும் அவாவும் அதிகரித்தது.

தனியார் துறையும் அங்கு வளர்ச்சியடையத் துவங்கியதும் மக்களின் தகவல் அறிவும் ஆர்வத்துக்கேற்றபடி தொலைக்காட்சி பார்க்கும் மக்கள் தொகையும் பெருகியது. பிற நாட்டு தொலைக்காட்சிகளைக் கண்டு களிக்கும் மக்களுக்கு உதவும் பொருட்டு, செய்மதிகளுடன் தொடர்பு கொண்டு காட்சிகளை ஈர்க்கும் 'டிஷ்' அன்ரனாக்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் அதிகரித்தன. ஹொங்கொங் நகரில் இருந்து ஒளிபரப்பாகும் 'ஸ்டார் ரி.வி' மூலம் பிபிசி செய்திகள்; எம் ரி வி இசை, ஆங்கிலத்திரைப்படங்கள் ஆகியவற்றைப் பார்க்கும் சீன மக்களின் தொகையும் கணிசமாக அதிகரித்துவிட்டது. குறிப்பிட்ட சில மாதங்களுக்குள்ளாகவே 500,000 டிஷ் அன்ரனாக்கள் விற்பனையாகியுள்ளன. சீன அரசாங்கத்துக்கு இதனால் பெரும் தலையிடி ஏற்பட்டிருக்கிறது. 'சோஷலிச கலாசாரப் பாரம்பரியத்துக்கு இடையூறு ஏற்படுகிறது' என்ற காரணத்தைக் காட்டி, பல 'டிஷ் அன்ரனா' உற்பத்தி நிறுவனங்களை மூடி விடும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



"சீனாவுக்குள் வரும்- எங்களுக்கு விருப்பமானவற்றைத் தடை செய்ய அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை. தொடர்ந்தும் இருளில் மூழ்கிக்கிடக்க நாங்கள் தயாரில்லை" என்று உரிமைக்குரல்கள் பெய்ஜிங்கில் கேட்க ஆரம்பித்துள்ளன. வானலைகள் மீது தடைகள் போடுவது இனியும் சாத்தியமல்ல. தங்கள் தனிப்பட்ட உரிமைகள் சுதந்திரங்கள் பற்றி அலட்சியமாய் இருக்க சீனர்களும் தயாராய் இல்லை. ■

## சோப் பவுடரால் வந்த வினை

ரோமாபுரியில் 'கொக்கேன்' என்ற போதைப் பொருள் வைத்திருந்ததாகக் கைதான ரஸ்டி ட்றிக்லண்ட் என்ற 23 வயதானவருக்கு நீதிமன்றம் 12 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தது.

6 மாதம் தண்டனையை அனுபவித்த ரஸ்டி வைத்திருந்தது போதைப் பொருளல்ல, அது சோப்பவுடரே என்பதனை காலம் கடந்து கண்டறிந்த பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

தன்னிடமிருப்பது கொக்கேன் அல்ல, வெறும் சோப்புப்பவுடரே என்று ரஸ்டி வாதாடினார். அந்தப் பவுடரைப் பரிசீலனை செய்த பகுப்பாய்வாளர் அதனை போதைப் பொருள் என்று சாதித்தமையினால் நிரபராதி 6 மாதம் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது. ரஸ்டி மறு பரிசீலனைக்கு விண்ணப்பித்திருந்தார். உண்மை புரிந்ததும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ●

# பொட்டம்மானின் பொறுப்பில் விசாரணை! பிரமுகர்களை சந்தித்து பிரபா விளக்கம்!!

**மாத்தையா மீது விசாரணை நடப்பதைப் புலிகள் அமைப்பின் பாரிஸ் கிளையினர் ஒப்புக் கொண்டுள்ளனர். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தேசத்துரோக குற்றத்திற்கான தண்டனை வழங்கப்படும் என்று கூறியுள்ளனர். புலிகள் அமைப்பின் உள் முரண்பாடுகள் பற்றி கனடா செந்தாமரை வெளியிட்ட தகவல்களின் தொடர்ச்சி இது.**

மாத்தையாவின் வீட்டுக் கதவை சுமார் 14-15 வயது மதிக்கத்தக்க சிறுவன் தட்டியிருக்கிறான். வெளியே வருமாறு பணித்திருக்கிறான். கோபமுற்ற நிலையில் மாத்தையாவும் இந்தச் சிறுவனைத் தள்ளி கையால் அடிக்க முற்பட்டிருக்கிறார்.

உடனே பிரதி-தளபதி பால்ராஜ் இறங்கிச் சென்று அந்தப் போராளியை பேசித் துரத்திவிட்டு 'அண்ணே! ஒருக்கா வாங்கோ அண்ணே!! எங்களோட' என்று மரியாதையாகக் கேட்டிருக்கிறார். மாத்தையாவும் மறு பேச்சுப் பேசாமல் மௌனமாக அவருடன் சென்று சூசை, சொர்ணம், பால்ராஜ் ஆகியோருடன் ஒரே வாகனத்தில் ஏறி சென்றிருக்கிறார்.

அச்சமயம் மாத்தையாவின் மனைவி (கல்பனா-இயக்கப் பெயர்) பால்ராஜிடம் "இவரை எங்கே கொண்டு போகிறீர்கள்?" என்றுகேட்டுள்ளார். மாத்தையாவின் மனைவி விடுதலைப்புலி மகளிர் படைப் பிரிவின் முதலாம் அணியைச் சேர்ந்தவர் என்பதும் இந்தியாவில் பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதற்கு பால்ராஜ் "அக்கா, தலைவர் உத்தரவின் பேரில் இவரைப் பொட்டம்மானிடம் கூட்டிக்கொண்டு போகிறோம்" என்று கூறியுள்ளார்.

மறுநாள் மாத்தையாவின் மனைவி பொட்டம்மானைச் சந்தித்து மாத்தையாவைப் பற்றி விசாரித்துள்ளார். அப்போது உளவுப் பிரிவுத் தலைவரும் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவருமான பொட்டு என்ற பொட்டம்மான் சாவகச்சேரி கல்வயலில் மாத்தையா தங்கியிருக்கிறார் என்றும் தனது நேரடிப் பொறுப்பில் விசாரணை செய்யப்படுவார் என்றும் மிகவும் மரியாதையாகவே அவர் கவனிக்கப்படுவார் என்றும் கூறியுள்ளார்.

அவரைச் சந்திக்க விரும்பிய போது தற்போதைக்கு அது முடியாது என்றும் விசாரணைகள் முடிவடைய குறைந்தது ஆறுமாத காலமெடுக்கும் என்றும் அதற்குப் பின்னர் அது சாத்தியப்படும் என்றும் பதில் அளித்துள்ளார்.

பின்னர் பொட்டம்மான் கீழான உளவுப் பிரிவினர் வந்து மாத்தையா மாறி மாறித் தங்கியிருந்த கோப்பாய், சுதுமலை, புதுக் குடியிருப்பு வீடுகளைச் சோதனையிட்டுள்ளனர். கூரை ஓடுகளைப் பிரிப்பது முதற்கொண்டு முற்றத்தைக் கொத்திப் பார்த்தது வரை கடுமையான சோதனை நடைபெற்றது. இதன் பின்னர் மாத்தையாவின் மனைவி தனது இரு பெண்குழந்தைகளையும் கடைசியாகப் பிறந்த ஆண் குழந்தையையும் கொண்டு வல்வெட்டித்துறை சென்றுவிட்டார்.



இந்திய அமைதிப்படை உயர் அதிகாரியோடு மாத்தையாவும் நரேஸ், மற்றும் குமரப்பாவும்.

### பிரபாகரன் விளக்கம்

மாத்தையா மற்றும் ஏனையோரின் கைதுகளை அடுத்து மெல்ல மெல்ல தகவல் வாய்மொழியாகப் பரவ ஆரம்பித்தது. அத்துடன் வதந்திகளும் தலை விரித்தாடின. இதே வேளை இப்படியான கதைகளில் ஈடுபடுவோரை உளவுப்படையினர் எச்சரித்தும் தண்டித்துமே வந்தனர். இதனால் ஓர் இறுக்கமான சூழ்நிலையே நிலவியது. ஆனால் நாளடைவில் கிளாலி, புலோப்பளை போர், பின்னர் பூநகரித் தாக்குதல் என்று பல நிகழ்வுகள் நடக்க, நடக்க மாத்தையா விவகாரம் மழுங்கடிக்கப்பட ஆரம்பித்தது.

ஆனால் இக்காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் வழமைக்கு மாறான ஒரு வித்தியாசமான அணுகு முறையை கையாண்டார். சில பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், மதகுருமார், மதப் பெரியோர்கள், கல்விமான்கள், முன்னாள் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், ஊர்ப் பிரமுகர்கள் என்று பலதரப்பட்ட மக்களை- தத்தமது மட்டங்களில் அபிப்பிராயம் உருவாக்கக் கூடியோரை (Opinion makers) சிறு சிறு குழுக்களாகச் சந்தித்துப் பேசினார். இவர்கள் எல்லோருமே விடுதலைப் புலிகளின் நெடுங்கால ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை அழைத்துப் பேசிய திரு பிரபாகரன் மாத்தையா தொடர்பாகவே உரையாடினார். மாத்தையா மீதான 10 பக்கக் குற்றப் பத்திரிகை வாசித்துக் காட்டப்பட்டது. இதில் பிரதான குற்றச்சாட்டு இந்திய உளவுப் பிரிவின் சதிக்கு உடந்தையா இருந்தமையே. பிரபாகரனையும் மேலும் 11 முக்கிய புலிகள் உறுப்பினர்களையும் கொன்றொழிக்கும் சதிக்கும் மாத்தையாவும் துணை போனார் என்பதே இதன் சாராம்சம்.

மேற்படி குற்றப் பத்திரிகை மாத்தையாவுக்கும் பல வாரங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டதாயும் ஜுலை 31ம் திகதிக்கிடையில் பதில் தரவேண்டும் என்றும் மாத்தையா கேட்கப்பட்டதாகப் பிரபாகரன் சொன்னார். இக் காலக்கெடு முடிவடைந்த போதிலும் மாத்தையா எவ்வித பதிலையும் தரவில்லை என்றும் கூறிய பிரபாகரன் தனது தரப்பில் பிரதிநிதி ஒருவர் மாத்தையாவைத் தொடர்பு கொண்டபோது தேவையென்றால் பிரபாகரன் வந்து கேட்கட்டும் என்று மாத்தையா சொன்னதாகப் பிரபாகரன் கூறியுள்ளார். மாத்தையாவின் நிலைப்பாடு விளங்காத நிலையில் இயக்கம் செங்குத்தாகப் பிளப்பதைத் தவிர்க்கவே பாரிய சுற்றிவளைப்புக் கைதுகள் நடந்ததாகவும் இதனால் ஓர் இக்கட்டான நிலை தவிர்க்கப்பட்டதாகவும் திரு.பிரபாகரன் தெரிவித்தார்.

மாத்தையா மீதான விசாரணைகள் முற்றுப் பெற்றதும் அது மக்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களுக்கும் பகிரங்கமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்த பிரபாகரன் இன்னொன்றையும் குறிப்பிடத் தவறவில்லை. இந்தியாவுடன் சேர்ந்து போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க முனையும் எவருக்கும் ஒரே தண்டனை தான். அது ரெலோவாக இருந்தாலென்ன, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆக இருந்தாலென்ன மாத்தையாவாக இருந்தாலென்ன? தண்டனை ஒன்றுதான். இதுவே பிரபாகரன் கூற்று. அத்துடன் இச் சதி எப்படி அம்பலமானது என்பது பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. பிரபாகரனின் இச் செயல்பாட்டின் மூலம் படிப்படியாக யாழ்ப்பாண மக்களிடத்தில் உண்மை நிலைமை பற்றிய விளக்கம் மலர்ந்தது. இந்தியாவின் சதித்திட்டம் அம்பலமாகியது. இவ்வாறு பரவலாகத் தகவல்கள் அடிபடத் தொடங்கின. நறுக்கும் துணுக்குமாக வந்த இத்தகவல்களைப் பலமுறை சரி, பிழை பார்த்துப் பொறுமையாகத் தொகுத்தே இச்செய்திக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

### இந்தியாவின் குறிக்கோள்

இந்தியப் படைகள் புலிகளுடன் போரிட்ட காலத்திலேயே மாத்தையா - பிரபாகரன் பற்றிய பல முரண்பட்ட தகவல்கள் இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகின. ஒருவர் கடும் போக்காளர் மற்றவர் மென்போக்காளர் என்று மாறி மாறி செய்திகள் வந்தன. இருவருக்குமிடையில் பிளவு என்றும் செய்திகள் வந்தன.

(மிகுதி அடுத்த முரசில்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது — இராஜதந்திரி

# இன்றைய தேவை ஓர் அமைதிவழி அரசியல் தீர்வே!

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் அரசியல்வாதிகளின் பங்களிப்புக்கள் அசமந்தப் போக்காக இருக்கக்காணப்படுகின்றன. அரசியல் பேசுவோர் தாம் சார்ந்த அரசியல் கட்சிகள், மற்றும் தமது சொந்த விருப்பு-வெறுப்புக்களை முதன்மைப்படுத்தியே இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தை அணுகி வருகின்றனர்.

இதனால் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பிரதேசம் தொடர்ந்து ஒரு 'ரணகள'மாகவே இருந்து வருகின்றது. கடந்த பத்து வருடகாலத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் இந்த முயற்சிகள் யாவும் பகட்டுத்தனமானவையாகவும், ஒரு சிலரின் விருப்பு-வெறுப்புக்களை மட்டுமே பிரதிபலிப்பனவாகவும் விளங்கியிருந்தன.

பேச்சுக்களிலும், சமரச முயற்சிகள் என்று கூறப்பட்ட நடவடிக்கைகளிலும் இறங்கியிருந்தோர், 'எரிகிற வீட்டில் அகப்பட்டதைப் பிடுங்கிச் செல்வது' போல நடந்து கொண்டனரே தவிர நேர்த்தியான, இதய சுத்தியான தீர்வு முயற்சிகள் எதிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

இந்நிலையில் அரசியல்வாதிகளின் இனப்பிரச்னைத் தீர்வு குறித்த முயற்சிகளில் பொதுமக்கள் நம்பிக்கை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அத்துடன் 'இரத்தக்காவு' எடுத்து வரும் வடக்கு- கிழக்குப் பிரச்னையை இன்றைய அரசியல்வாதிகளால் தகுந்த வகையில் தீர்த்து வைக்க முடியாது என்ற முடிவுக்கே வரவேண்டியவர்களாகப் பொதுமக்கள் காணப்படுகின்றனர்.

இந்த ஆண்டு (1994) ஒரு தேர்தல் ஆண்டாக இருக்கப் போவதாக ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்க அறிவித்துள்ளார்.

ஆனால் ஆளுங்கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் தமது தேர்தல் பிரசாரங்களின் தொனிப் பொருளாகக் கொள்ளப் போகும் விடயங்கள் எத்தகைய கோணத்தில் அமைந்திருக்கும் என்பது தெளிவற்றதாகவே இருக்கின்றது.



“அரசு, தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட அனைத்து தரப்பினரும் சமரசத் தீர்வுக்கு முன்வரவேண்டும்.”

-கலாநிதி ஜயதேவ உயங்கொட-

ஆளுங்கட்சியினர் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான உறுப்பினராகவும் விளங்கிய திரு. அனுரா பண்டாரநாயக்காவைத் தம் பக்கம் சேர்ந்துக் கொண்டுள்ளனர். இதன்மூலம் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், அதன் பிரசாரங்களுக்கும் அநுரா மூலமாகவே 'சாட்டை' கொடுப்பதற்கு ஆளுங்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

மறுபுறத்தே எதிர்க்கட்சி அணியில் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா ஒரு புதுமுகமாக இருக்கின்றார்.

கடந்த தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளிட்ட எதிரணியினரின் பிரதான பிரசாரகர்களில் ஒருவராக திரு அநுரா பண்டாரநாயக்கா விளங்கியிருந்தார். ஆனால் இத்தடவை எதிரணியினரின் பிரசாரங்களில் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்காவே முக்கியம் பெறவிருக்கிறார்.

இது தவிர கடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றில் மறைந்த ஜனாதிபதி திரு. ரணசிங்க பிரேமதாசா, விரிவான தேர்தல் பிரசாரங்களை இரவு, பகலாக மேற்கொண்டிருந்தார்.

அவரது பிரசாரங்களுக்கு பக்கபலமாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதான உறுப்பினர்களாக இருந்த மறைந்த திரு.லலித் அத்துலத்முதலி, மற்றும் இன்றைய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கட்சித் தலைவர் திரு.காமினி திசாநாயக்கா ஆகியோர் விளங்கியிருந்தனர்.

ஆனால் இன்று திரு.காமினி திசாநாயக்கா எதிரணியில் இருக்கக் காணப்படுகின்றார். எனவே அவரும் எதிரணியினரின் ஒரு பிரதான பிரசார இயந்திரமாகவே இயக்குவார் என்று எதிர்பார்க்க முடியும்.

எதிர்வரும் தேர்தல்களில் மலையக மக்களின் வாக்குகளைப் பெறுவதிலும் ஆளுங்கட்சியினரும், எதிரணியினரும் தம்மாலான முயற்சிகளில் பெரிதும் ஈடுபடுவர்.

மலையக மக்களைப் பெருமளவு கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) கட்சியின் தலைவர் திரு. எஸ். தொண்டமான் அண்மையில் ஆளுங்கட்சியினருடன் முரண்பட்டிருந்தார். தமது மக்களின் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து, திரு.தொண்டமான் ஆளுங் கட்சியினருடன் கருத்து மோதல்களில் குதித்திருந்தார்.

ஆனால் அரச தரப்பினர் திரு. தொண்டமானுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். கூடவே ஐ. தே.கவுக்கும், இ.தொ.கவுக்குமிடையே பிளவு ஏற்படுவதையும் இந்த இரகசியப் பேச்சுக்கள் மூலம் தவிர்த்திருந்தனர்.

திரு.தொண்டமான் மலையக மக்களின் கோரிக்கைகள் தொடர்பாகவே அரசுடன் முரண்பட்டிருந்தார். ஆனால் அரச தரப்பினருடனான இரகசிய பேச்சுவார்த்தைகளையடுத்து, தமக்கும், ஆளுங்கட்சியினருக்குமிடையிலான உறவு திருப்திகரமாக இருப்பதாக அறிவித்திருந்தார்.

அத்துடன் ஐ.தே.க, இ.தொ.கா. உறவில் பிளவு ஏற்பட்டுவிடாது எனவும் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

திரு.தொண்டமானும், அரசதரப்பினரும் எதைப் பேசினார்கள்? எத்தகைய இணக்கத்துக்கு வந்தார்கள்? திரு. தொண்டாவின் கோரிக்கைகள் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளப்பட்டன? என்ற கேள்விகள் விடைகாணப்படாதவையாகவே இருக்கின்றன.

திரு.தொண்டமான் தமது கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எவ்வளவு தூரம் வெற்றிகண்டார் என்பது தெளிவற்றிருக்கின்றது. ஆனால் அரச தரப்பினர் திரு. தொண்டமானைத் தம் பக்கம் வைத்திருப்பதில் வெற்றிகண்டுள்ளனர் என்பதே தற்போது தெட்டத் தெளிவாக இருக்கின்றது.

இந்நிலையில் தேர்தல் பிரசாரங்களில் திரு. தொண்டமான் தலைமை தாங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு மலையக மக்களின் கோரிக்கைகளை முதன்மைப்படுத்தியதாக இருக்குமா? அல்லது அரசின் புகழ் பாடுவதாக இருக்குமா? என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தென்னிலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளும், தமது கட்சிப் பூசல்களுக்கு முதன்மை கொடுத்துப் பிரசாரங்களில் ஈடுபடும் தன்மையே எதிர்வரும் தேர்தல் காலங்களின் போது நிலவும் என்று எதிர்பார்க்கலாம்.

நாட்டின் பிரதான பிரச்னையாக இருந்து வரும் வடக்கு-கிழக்கு சர்ச்சையை அரச தரப்பினரும் எதிர்கட்சியினரும் எவ்வளவு தூரம் முதன்மைப்படுத்துவார்கள் என்பது தெளிவற்றிருக்கின்றது. ஏனெனில் கடந்த காலங்களில் அரச மற்றும் எதிர்க்கட்சிகள் வடக்கு-கிழக்கு சர்ச்சையை கையாண்ட விதத்தை நாட்டினர் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற அமைப்பை உருவாக்கி, எதிர்க்கட்சிப் பிரமுகரான திரு. மங்களமுனசிங்கவையும் அதன் தலைவராக நியமித்து வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.

ஆனால் இப்பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் எதுவித ஆரோக்கியமான தீர்வையும் எட்டவில்லை.

இதன் மூலம் பாராளுமன்றத்தில் உள்ள ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் வடக்கு-கிழக்கு சர்ச்சை தொடர்பாக ஒரு துடிப்புள்ள அணுகுமுறையைக் கொண்டிராதது புலனாகியிருந்தது.

இவ்வாறு அரசியல் ரீதியிலான அணுகுமுறைகள் வடக்கு-கிழக்கு விவகாரத்தைத் தீர்த்து வைப்பது தொடர்பாக நம்பிக்கை தரக்கூடியவகையில் காணப்படாதிருக்கும் இத்தருணத்தில், புத்திஜீவிகள் மட்டத்தில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள ஜே.ஆர்.ஜயவர்த்தன ஞாபகார்த்தக் கட்டிடத்தில் வடக்கு-கிழக்கு நிலவரத்தை மையமாகக் கொண்ட கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவகம் (North- East Economic Development Society-NEEDS) என்ற அமைப்பு இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது.

அமைதிக்கான வழி (Path to peace) என்ற தலைப்பிலேயே 'நீட்ஸ்' (NEEDS) அமைப்பினரின் இக்கருத்தரங்கு விளங்கியிருந்தது.

தமிழ், சிங்கள புத்திஜீவிகள் (Intellectuals) பலர் இக்கருத்தரங்கில் தமது கருத்துக்களை வழங்கியிருந்தனர்.

கலாநிதிகள் நீலன் திருச்செல்வம், ஜயதேவ உயங்கொட, சரவணமுத்து, திரு. ஜெஹான் பெரேரா, மற்றும் வண.பத்தேகம சமித்த தேரோ, வண. திஸ்ஸபாலசூரிய ஆகியோர் இக்கருத்தரங்கில் இன்றைய வடக்கு-கிழக்கு நிலவரம் மற்றும் அது தொடர்பான இலங்கை அரசியல் நிலவரம் என்பன குறித்து விரிவுரைகளை வழங்கியிருந்தனர்.

அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும், வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு போதியளவு முக்கியத்துவம் வழங்கத் தவறியிருக்கும் இத்தருணத்தில் புத்திஜீவிகள் மட்டத்திலான, 'நீட்ஸ்' அமைப்பினரின் கருத்தரங்கு, அரசியல் சாராத நடுநிலையாளருக்கு களம் அமைத்ததாகவே காணப்பட்டிருந்தது.

கலாநிதி ஜயதேவ உயங்கொட, திரு.ஜெஹான் பெரேரா ஆகியோர் பெரும்பான்மை இன புத்திஜீவிகள் மட்டத்தில் விரிவுரைகள், மற்றும் பத்திரிகைகள் வாயிலாக குறிப்பிடத்தக்களவு பங்களிப்புகளை வழங்கி வருபவர்களாகக் காணப்படுகின்றனர்.

கலாநிதி ஜயதேவ உயங்கொட கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஒரு விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் இவரது அரசியல் பின்னணி தென்னிலங்கையின் கிளர்ச்சிவாதத்தோடு சம்பந்தப்பட்டிருக்கக் காணப்பட்டது.

ஆனால் தற்போது தென்னிலங்கையின் முக்கிய அரசியல் விமர்சகர்களில் ஒருவராக இருந்து வரும் கலாநிதி உயங்கொட 'நீட்ஸ்' அமைப்பினர் நடத்திய கருத்தரங்கில் இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்னையை நடைமுறை ரீதியாக அணுகியிருந்தார்.

“வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான தீர்வைக் காணவேண்டிய பொறுப்பு ஒரு சாராரை மட்டும் சார்ந்ததாகக் காணப்படவில்லை. அனைத்துத் தரப்பினரதும், அரசியல் சக்திகளினதும் பங்களிப்பு வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக ஏற்படுவது இன்றியமையாததாகின்றது.

“வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான அரசியல் தீர்வைக் கொண்டுவரும் பொறுப்பு அரசை மட்டும் சார்ந்ததாகக் காணப்படவில்லை. இன்று வடக்கு-கிழக்குப் பகுதியில் ஒரு பிரதான போராட்ட சக்தியாக விளங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒரு தீர்வை எட்டுவதற்கான அரசியல் முயற்சிகளில் குதிக்க வேண்டியவர்களாகவே உள்ளார்கள். இது தவிர புத்திஜீவிகள் மட்டத்தில் மட்டுமல்லாது, வர்த்தக சமூகத்தினர் மட்டத்திலும் அரசியல் தீர்வு குறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்” என்று கலாநிதி உயங்கொட தமது உரையில் வலியுறுத்தியிருந்தார்.

கலாநிதி உயங்கொடையைத் தொடர்ந்து உரையாற்றிய திரு.ஜெஹான்பெரேரா தென்னிலங்கையில் வடக்கு-கிழக்கு நிலவரம் தொடர்பாக நிலவும் சூழ்நிலைகள் பற்றி விளக்கமளித்திருந்தார்.

திரு. ஜெஹான் பெரேரா தாம் சந்தித்த இராணுவ அதிகாரிகள் பற்றிக் குறிப்பிட்டதோடு, வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வு எட்டப்படுவதையே அந்த இராணுவ அதிகாரிகளும் விரும்பியிருந்தனர் என்று தெரிவித்திருந்தார்.

இழப்புக்களுடன் மீண்டும் முகாம்களுக்குத் திரும்புவதைவிட ஒரு சமரசத் தீர்வை நாடுவதே மேலான நடவடிக்கை என்று அந்த இராணுவ அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் திரு. ஜெஹான் பெரேரா குறிப்பிட்டிருந்தார்.

திரு.பெரேரா தொடர்ந்து உரையாற்றுகையில், “தென்னிலங்கையின் கிராமப்புற மக்கள் அமைதியான சூழலில் வாழ்பவர்கள்; அத்துடன் அமைதியை விரும்புபவர்கள். இந்நிலையில் இம்மக்கள் மத்தியிலிருந்தும் இன்றைய இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

“இத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அரசியல்வாதிகளைவிட, பௌத்த மதகுருமாரே கூடுதலான அளவு பங்களிப்பை வழங்கவேண்டும்.

“ஏனெனில் தென்னிலங்கையின் கிராமப்புறங்களில் அரசியல்வாதிகளைவிட, பௌத்த மதகுருமாரே மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.” என்று திரு.ஜெஹான் பெரேரா தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

கலாநிதி நீலன் திருச்செல்வம் அரசியலில் ஈடுபட்டவராயினும், ஒரு புத்திஜீவியாகவே தம்மை இனங்காட்டுவதில் அவர் அக்கறை கொண்டவராகக் காணப்படுகின்றார்.

“இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்னை அரசியல் ரீதியாகமட்டுமல்ல நாட்டின் கல்வி, போக்குவரத்து ஆகியவற்றிலும் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.” என்று கலாநிதி. திருச்செல்வம் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த ஆண்டில் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டவற்றையும் ஞாபகப்படுத்தியிருந்தார்.

“திரு. ரணில் விக்கிரமசிங்க பாரிஸ் மகாநாட்டில் இலங்கை இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இன்று இலங்கையில் ஆட்சியாளர்கள் 'இனப்பிரச்னை எதுவும் இல்லை. பயங்கரவாதமே நிலவுகின்றது' என்று குறிப்பிடுவதன் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்னையின் தார்ப்பரியத்தையே கொச்சைப்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர்.” என்று கலாநிதி திருச்செல்வம் தெரிவித்திருந்தார்.

இலங்கைப் பாராளுமன்றம் தரமான உறுப்பினர்களால் களை கட்டியிருந்த காலத்தில், அவர்களின் பேச்சுக்களைக் கேட்கவென்றே பலர் பாராளுமன்றத்துக்குப் படையெடுத்திருந்தனர்.

ஆனால் இன்றைய பாராளுமன்றத்தின் நிலை கவலைக்குரியதாகவே இருக்கின்றது. நல்ல தத்துவார்த்த அரசியல் ரீதியிலான பாராளுமன்றப் பேச்சுக்களை செவிமடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

“இராணுவத் தரப்பினரும் அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றனர்”

-திரு. ஜெஹான் பெரேரா-

இந்நிலையில் பாராளுமன்றத்தின் நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இடம்பெறும் சமூக, அரசியல், பொருளாதார விடயங்கள் சார்ந்த கருத்தரங்குகள், பலதரப்பட்டவர்களுக்கு நன்மையளிப்பனவாகவும் நல்ல கருத்துக் கண்ணோட்டங்களைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன.

கலாநிதி ஜயதேவ உயங்கொட இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வுக்கு அரச தரப்பினர் மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் உட்பட அனைத்து தரப்பினரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டுமென்று 'நீட்ஸ்' அமைப்பினரின் கருத்தரங்கில் குறிப்பிட்டிருந்தார்.

கலாநிதி உயங்கொடவின் இக்கருத்து மிகவும் கருத்தில் எடுக்கப்படவேண்டியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் வடக்கு-கிழக்குப் பிரச்னையைப் பொறுத்தவரை ஒரு பலம் மிக்க எதிரணியினராகவே காணப்படுகின்றனர்.

ஆனால் இந்த எதிரணித் தன்மையை அவர்கள் ஆயுதரீதியாகவே கொண்டுள்ளனர். அரசியல் ரீதியாக எதனையும் முன்னெடுப்பவர்களாக அவர்கள் காணப்படவில்லை.

வடக்கே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரன் உட்பட, அந்த இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் மேடையில் தோன்றுகின்றனர்.

ஆனால் அவர்கள் அரசியல் ரீதியிலான நடைமுறைகளைப் பற்றிப் பேசுவதை விட, தமது இராணுவ நடவடிக்கைகளுக்கு முக்கியமளித்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவின் ஆரம்பம் கொழும்பு மாநகரில் வைத்தே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி என்று அவர்களின் அரசியல் பிரிவுக்குப் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த அரசியல் பிரிவின் இன்றைய நிலைப்பாடு தெளிவற்றதாகவே இருக்கின்றது. அத்துடன் அதன் ஆரம்பகாலத் தலைவரான மாத்தையா என்றழைக்கப்படும் திரு.கோபாலசாமி மகேந்திரராசா தற்போது எங்கிருக்கின்றார் என்பது மர்மமாகவே இருக்கின்றது.

ஊர்ஜிதமற்ற தகவல்கள் திரு.கோ. மகேந்திரராசாவின் உயிருக்கு புலிகளின் தலைமைப்பீடத்தினால் ஆபத்து எற்பட்டுள்ளதென்றே தெரிவித்து வருகின்றன.



அத்துடன் திரு. மகேந்திரராசா குறித்து வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள், புலிகள் தம்மிடையே எவ்வளவு தூரம் புரிந்துணர்வுகளைக் கொண்டிருக்கின்றனர்? என்ற கேள்வியை எழுப்புவனவாகவும் இருக்கின்றன.

புலிகள் இராணுவ ரீதியாகத் தம்மை ஒரு பலம் மிக்க அமைப்பாக நிரூபித்துள்ளார்கள். ஆனால் அரசியல் ரீதியாக அவர்களின் பங்களிப்பு காத்திரமற்றதாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகவே தாம் போராடி வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் கூறிவருகின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்கில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் யுத்தக் கெடுபிடிகளால் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாகவும், ஒரு கௌரவமான அரசியல் தீர்வையே எதிர்பார்ப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் தம்மை ஓர் இராணுவ சக்தியாக நிரூபித்திருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர், அரசியல் ரீதியாகவும் தமது பலத்தை நிரூபித்து தமது தரப்பிலும் தாம் நடமாடும் பிரதேசங்களிலும் அழிவுகளையும், இழப்புக்களையும் தவிர்ப்பதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முகப்பொலிவுக்கு முத்தான யோசனை!
# வீட்டிலிருந்தபடியே
# வியப்பான அழகு பெறலாம்



செலவு அதிகமின்றி சாதாரண களிமண்ணைப் பயன்படுத்தி இளமைதரும் முகக்காப்பினைஅறிமுகம் செய்துள்ளார்கள்.

இம்முறையினை அனுசரித்தால் 40 வயதான பெண்ணின் முகம் 20 வயது இளமங்கையின் முகப் பொலிவைப் பெறும் என்று உறுதி கூறப்பட்டுள்ளது.

பால், தேன், அப்பச்சோடா, முட்டை மஞ்சட்கரு, பெட்ரோலிய ஜெலி ஆகிய வற்றுடன் களிமண்ணினையும் சேர்த்துத் தயாரிக்கப்படும் குழம்பினை முகத்தில் பூசிவந்தால் முகத்திலுள்ள சருமம் புதுப் பொலிவினைப் பெறும்.

காய்ந்து செயலிழந்து போகும் உயிர்மங்கள் மீண்டும் துடிப்படைகின்றன. முகத்தில் சுருக்கங்களும் குழிகளும் அகன்று விடுகின்றன.

பருக்களால் ஏற்படும் அடையாளங் களும் கறுப்புப் புள்ளிகளும் நீங்கி விடுகின்றன.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த சரும ஆய்வாளர் இம்முறையினை 1930ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்.

ஐரோப்பாவிலுள்ள பல நாட்டு மங்கை யரும் இதனால் பெரும் பயனடைந்தனர். ஆனால் புதுப்புது செயற்கைப் பூச்சுகளும் களிம்புகளும் சந்தைகளில் விற்பனைக்கு வரத் தொடங்கியதும், இயற்கையாக- இல்லங்களில் சுலபமாகச் செய்து பயன்படுத்தப்பட்ட இம்முறையினை நவ நாகரிக மோகம் கொண்ட மங்கையர் கைவிட்டு விட்டனர்.

ஆனால் இன்று இந்த முறைக்கு மீண்டும் கிராக்கி ஏற்படத் தொடங்கி யிருக்கிறது.

களிமண் பண்டைய மக்களால் பலதரப் பட்ட நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

களி மண்ணுடன் தேன் சேர்ந்தால் உயிர்மங்கள் நீர்த்தன்மையினை உறிஞ்சு வதற்கு உதவும். சருமத்தின் மீது படிந்து உள் வாங்கப்படும் அழுக்கினை வெளியேற்ற அப்பச் சோடா உதவுகிறது.

பால் முகத்தின் மேற்புறத்தினை மென்மையடையச் செய்யும். அதே வேளையில், பெட்ரோலியம் ஜெலியும் முட்டையின் மஞ்சட் கருவும் சருமத்தில் நீர்ப்பிடிப்பும் பளபளப்புத்தன்மையும் அதிகரிக்க வசதியளிக்கின்றன.

தனது முகம் சோபை இழந்து வருவதைக் கண்ணுற்ற இத்தாலியிலுள்ள ரோம் நகரைச் சேர்ந்த 47 வயதான டெமெற்றியா அல்பொன்டிகா என்ற பெண் பல நவீன மருத்துவமுறைகளைக் கையாண்டும் பயன் கிடைக்காமற் போகவே களிமண் முகக் காப்பு முறையினை ஒரு மருத்துவரிடம் கேட்டறிந்தார்.

பயன்படுத்தி 2 வாரங்களின் பின்னர் அதே மருத்துவரிடம் சென்ற போது "எனது முகத்தில் காணப்பட்ட வியத்தகு மாற்றத்தைக்கண்டு மருத்துவரே அதிசயித்தார்." என்கிறார் டெமெற்றியா.

இத்தகைய மாற்றம் பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை முறையினால் மட்டுமே ஏற்படும். வேறு எத்தகைய நவீன முறைகளினாலும் இத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்த முடியாது என்று அந்த மருத்துவர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் பேர்ரோல்ட் ஹெளஸ்-மான், டெமிற்றியாவுக்கு வகுத்துக் கொடுத்த களிமண் முகக்காப்புக்குத் தேவையான பொருட்கள்:

**தீமை பயக்காத சுத்தமான களிமண் 1/2 இறாத்தல்**
**பசும்பால் 1/2 கோப்பை**
**சுத்தமான தேன்- 3 தே.கரண்டி**
**அப்பச்சோடா -1 மேசைக்கரண்டி**
**முட்டையின் மஞ்சட் கரு-1 முட்டை**
**பெட்ரோலியம் ஜெலி- 1/2 கோப்பை**
**ஒலிவ் எண்ணை- 1 தே.கரண்டி**
**செய்முறை:**

ஒரு அகலமான பாத்திரத்தில் இத்தனை பொருட்களையுமிட்டு விரல்களால் நன்றாகப் பிசைய வேண்டும். எல்லாம் சரிசமமான பசைப்பருவமாகப் பிசையப்பட்டதும் முகம், கழுத்து புயம் மற்றும் முன் கைகளில் பூசிக் கொள்ள வேண்டும். அரைமணி நேரம் விட்டுவிட்டு மென்மையான சுடு நீரினால் கழுவ வேண்டும். நன்றாகத் துடைத்தபின்னர் குளிர்ந்த நீரினால் மறுதடவை கழுவிக்கொள்ளுங்கள்.

வாரத்தில் மூன்று தடவைகள் இக்காப்பினை இட்டுக் கொண்டால் போதும். உங்கள் வயதில் 20 வயதைத் தாராளமாகக் குறைத்துக் கொள்ளலாம். இக்காப்பினைப் போடும் அன்றைய தினம் அதிக வெய்யில் படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

## சமைப்போம் சுவைப்போம்

-தருவது சுகந்தினி-

### கறி பண்

**தேவையானவை:**
**சீனி-1.தே.கரண்டி**
**மா-1 கிலோ**
**மாஜரின்-4 அவுன்ஸ்**
**ஈஸ்ட்- 3 1/2தே.க**
**உப்பு- அளவாக**
**நீர்-4 கப்**

ஈஸ்ரையும் சீனியையும் முக்கால் கப் இளஞ்சூடான நீரில் கலந்து சிறிதளவு மாவினையும் தூவி ஒரு துணியினால் மூடி கால் மணிநேரம் வைக்கவும். மாவையும் மாஜரினையும் நன்றாகப் பிசையவும். அத்துடன் ஏற்கனவே கரைத்து வைத்திருந்த ஈஸ்ற் கலவை யையும் சிறிதளவு உப்பையும் கலந்து பிசைந்து ஒரு எனாமல் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். இறைச்சி அல்லது மீன் அல்லது உருளைக்கிழங்கை அதிக நீர்ப் பிடிப்பில்லாத கறி தயாரித்துக் கொள்ளவும்.

பிசைந்த மாவினைத் தட்டி அதனுள் கறியினை வைத்து உருண்டையாக மூடவும். மாவின் முனைகளை ஒட்டுவதற்கு முட்டை வெள்ளைக் கருவினை நன்றாக அடித்து அதனைத் தடவி 'பேக்' செய்து கொள்ளலாம்.


**கவனிக்கவும்-**

சென்ற முரசில் (32) சமைப்போம் சுவைப்போம் பகுதியில் ஐஸ்கிரீம் செய்யும் முறையே விளக்கப்பட்டிருந்தது.

பால், உணவுப்பொருள் இவை தீய்ந்துபோய் பாத்திரத்தில் அடிப்பிடித்து விடலாம். இதனைப் போக்க எளிமையான வழி இருக்கிறது. அடிப்பிடித்த பாத்திரத்தில் வெங்காயத்தை சிறிது நீர் ஊற்றி வேக வைத்தால் அடிப்பிடித்தது நீங்கிப் பாத்திரம் சுத்தமாகிவிடும்.

கோதுமையை இலேசாக வறுத்து மாவாக அரைத்து காற்றுப் புகாத டின்களில் அடைத்து வைத்திருந்தால் பல மாதங்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்கும்.

## வீட்டுக் குறிப்புகள்



குழந்தைகளின் படுக்கை அறை சிறியதாக இருக்கிறதா? விதவிதமான போஸ்டர்களை ஒட்டி அழகுபடுத்த முடியவில்லையே என்று கவலைப் படுகிறீர்களா? உங்கள் குழந்தைகளுக்கு பிடித்தமான போஸ்டர் மற்றும் ஸ்டிக்கர்களை வாங்கிக் கொள் ளுங்கள். அறையின் கதவு, ஜன்னல் கதவு, மின்விசிறி, மேற்கூரை போன்ற வற்றில் ஒட்டி விடுங்கள். அறை புதுப் பொலிவுடன் மிளிரும்.



பூரிக்கு தொட்டுக்கொள்ள உருளைக்கிழங்கு மசாலா செய்வோம். அல்லது உருளைக்கிழங்கு மசாலாவை கெட்டியாக தயாரித்துக் கொள்ளும் போது, இரண்டு சப்பாத்திகளுக்கு இடையே இந்த மசாலாவை வைத்து வழக்கம்போல் தோசைக் கல்லில் போட்டு எடுங்கள். பிக்னிக் மற்றும் வெளியூர் செல்லும்போது எடுத்துச் செல்ல வசதியாக இருப்பதோடு சுவையாகவும் இருக்கும்.

# தலைமுடி செழிப்பாக தகுந்த வழிகள் சில



அழகான தோற்றத்திற்குத் தலை முடி ஒரு வகையில் உதவுகிறதுதான். இல்லையென்று சொல்ல முடியாது. தலைமுடி செழிப்பாக வளர்ந்தால் அது ஆரோக்கியத்திற்கு அறிகுறியாகவும் கொள்ளலாம். பெண்கள் தலைமுடி நீளமாக இருப்பதை விரும்புவார்கள். 'ஐயோ தலைமுடி கொட்டுகிறதே' என்று கவலைப்பட்டால், கவலைப்படுவதால் கொட்டுவது அதிகமாகுமாம். இது நல்ல ஜோக்காக இருக்கிறதே. அதற்காகத் தலைமுடி கொட்டினால் கவலைப் படாமல் இருக்க முடியுமா?

இப்போது எல்லாரும் 'போனிட் டெய்ல்' தான், ஃபாஷன் என்பதற்காக இல்லை. அவர்களுக்கு முடி அவ்வளவுதான்.

தலைமுடி கொட்டுகிறதே அதன் காரணம் என்னவென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

1. நீண்ட நாளைய நோய் ஏதாவது இருக்கு மானால், தலைமுடி பயங்கரமாகக் கொட்டும்.
2. உடம்பு பலவீனமாக இருந்தால் முதலில் முடிதான் கொட்டும்.
3. பொடுகு இருந்தால் முடி உதிரும்.

இதை எப்படித் தடுக்கலாம் என்று இப்போது பார்ப்போம். வியாதி இருந்தால் மருந்து சாப்பிட்டு கூடவே தலைமுடிக்கும் தேவையான போஷாக்கை டொக்டரிடம் கேட்டு அளிக்க வேண்டும்.

உடம்பு பலவீனமானதைத் தடுப்பது எமது மனதில் இருக்கிறது. அவரவர் வயதிற்குத் தகுந்தபடி நல்ல விகித உணவாகச் சாப்பிட வேண்டும். தினமும் சாப்பாட்டில் இரும்புச்சத்து மிகுந்த அரைக்கீரை, கறிவேப்பிலை இருந்தாக வேண்டும். அத்துடன் பால், தயிர், மோர் போன்றவை கண்டிப்பாக இருக்க வேண்டும். தினமும் தேங்காய்ப்பால், சாப்பிடுவதால் தலைமுடி நன்றாக வளரும்.

தலை சுத்தமாக இல்லாவிட்டாலோ, மற்றவர்களுடைய சீப்பை உபயோகப் படுத்துவதாலோ, தலையில் சீபம் என்ற ஹோர்மோன் அதிகமாகச் சுரப்பதாலோ தலையில் பொடுகு வருகிறது.

பொடுகை மருத்துவ ரீதியாகப் போக்க இன்னும் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. ஒன்று செய்யலாம். வெந்தயம் இருக்கிற தல்லவா? இரண்டு ஸ்பூன் எடுத்துக் கொள்ளுங்கள். அரைமணி நேரம் நீரில் உற வைத்துப் பிறகு நன்றாக அரைத்து அந்த விழுதை தலைமுடியில் வைத்து அழுத்தித் தேய்த்து பதினைந்து நிமிடம் கழித்து, வெதுவெதுப்பான வெந்நீரை விட்டு அலசினால் பொடுகு போய்விடும். தலைமுடி பளபளப்பாக வளரும்.

தலைமுடி உதிர்கிறதே என்று எதற்குக் கவலைப்பட வேண்டும்? ஒரு மனிதரின் தலையில் மூன்று இலட்சம் மயிர்க்கால்கள் இருக்கின்றன. அதை வளரவிடுவது எமது கையில் தான் இருக்கிறது. ஒரு மாதத்தில் பன்னிரெண்டு மில்லி மீற்றர் நீளம் வளருமாம்- ஆரோக்கியமான உடம்பு உள்ளவர்களுக்கு, அதனால் கவலையே படாதீர்கள்.

# லேடீஸ் ஸ்பெசல்

வாழ்வின் தாற்பரியம் புரியவே யில்லை. நமது எதிர்பார்ப்பு ஒன்றாகவும், நிகழ்வுகள் வேறொன்றாகவும் அமைவது மட்டுமே நிச்சயமாயுள்ளது. சுதந்திரம் வாங்கியது கூட நமது தந்திரம் விதைக்கப் படத்தானோ?

யோசனை என்பது சுயசிந்தனை, சுயபலம். சுயசிந்தனையும், சுயபலமுமே சுதந்திரம்! இது காலத்தால் மாறிய விந்தையேன்! நல்லது கெட்டது எங்கில்லை? அடித்தல் வன்முறையை மட்டுமே வளர்க்கும், பேச்சுக்கள் சலிப்பைத் தரும். தீர்வென்பது வெறும் வட்ட மேசை, சதுரமேசை மத்தியில் உணரப்படுவதில்லை வரைமுறைகள் விதைக்கப்படவில்லை இங்கு. வன்முறைகள் என்று போதிக்கப் பட்டதே அவலம். மனிதர்கள்



## சுயம் (வரம்)

-ஜெயந்தி -பம்பலப்பிட்டி-

மாற வேண்டும். முடியுமா?

தம்மையறிய முடியாத போது பிறரையோ, பிறர் உணர்வுகளையோ உணர முடியாது. பிறரையுணர முடியாத ஆளுமையில் நிறைவு மில்லை. வாழ்க்கையென்பது தொடர்பு கொள்ளுதல்! தொடர்பை ஏற்படுத்த உதவுவதே மொழி. அதுவே இன்று இங்கே தொடர் பறுக்கவும் பயன்படுவது துயரமுண்டாக்கு கிறது. மனிதன் பேசிப்பேசியே நாசமாகிறான். பேச்சென்பது மனிதர்களுக்குக் கிடைத்ததோர் வரம். மொழி ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு. ஆறாவது அறிவின் முதல் வெளிப்பாடு. தன்னை ஆறறிவுடையவனென்று மனிதன் பீற்றிக் கொள்வதில் அர்த்தமேயில்லை.

காமமும் கோபமும் தான் நிலை தடுமாற செய்பவை. காமத்தில் இயங்குபவன் முட்டாள்;

கோபத்தில் இயங்குபவன் வெறியன்.... யாரால் மறுக்க முடியும்? பிறப்பும், இறப்பும் கண்ணிமைப்பொழுது நிகழ்பவை. இவை எப்போது? எங்கே? என்கின்ற தேடலின் துயரத் தவிப்புத் தான் மனிதனை மதமென்னும் ஊன்றுகோலைத் தேடச் செய்ததென நினைக்கிறேன். எல்லாக் கர்வமும் எதிர்விளைவுகளால் நெஞ்சிலறை வாங்கும் போது கடவுள் பயம் எழுவதை யாராலுமே தவிர்க்க முடியாது. °

மனிதன் குனிந்து தன்னை-தன் மனதைப் பார்ப்பதற்குப் பதில் வெளியே தேட ஆரம்பித்ததில் தான் வீணாகிப் போனானோ?

இந்தத் தேசத்தில் அனைத்தையும் மாற்றிவிட்டார்கள்.

காமத்தையும், மனைவியையும் இணைத்து விட்டனர்.

"காமம் உணர்வு; மனைவி உறவு." உணர்வு பொங்குமிடத்தை உறவாக்கிக் கொள்ளும் விந்தையே வாழ்வாகி விட்டது. குடும்பத்தை ஆண் யுத்த பூமியாக்குவானாகில் அங்கே தந்திரப் போர் புரியப் பெண்ணால் முடியும். அழுத்தி வைக்கும் பெண்ணுக்கு விடுதலையென்பது ஆயிரம் யானை பலமான புத்தியைக் கிரகிக்கும் தன்மையை ஏற்படுத்தும்.


திருமணமென்பது அறிவையும் தாண்டி அதிர்ஷ்டத்தின் பெயரிலும் அமைவது. திருமணம்* வாழ்வின் பொதுவான கடமை மட்டுல்ல; அது குடும்ப கௌரவமும் கூட. தனிப்பட்ட சந்தோஷம் கருகிப் போனாலும் குடும்ப கௌரவம் அழிய விடக்கூடாதென்பதன் பொருட்டே பலர் தம்மை எரித்து, உணர்வு களைத் தீய்த்துக்கொண்டு நாட்டில் உலவுவதான உண்மை நெஞ்சைத் தீய்க்கிறது.

நம்மைச் சுற்றியுள்ள குடித்தனங்களைப் பார்க்கை யில் குளுமையான குடும்ப வாழ்விற்கும் கொடுப்பனவு தேவையோவென்று தோன் றுகிறது. திருமணமென்பதே பயம் தரும் தேசத்தில் சடங்கு முறைகளில் சந்தோஷம் எழுவதெப்படி? வாழ்வு வெறுமையாய்ப் போவது விதி! விதியை விதியென்று ஏற்பதே மதி. விதியுடன் முரண்படும் போதே வேதனை.... வேதனை அழுகையைச் சோர்வைக் கொடுக்கும். கற்பென்பது ஆணால் பெண்ணுக்கிடப்பட்ட வேலி. புத்திசாலிப் பெண் அதையே ஆபரணமாக்கி விடுகிறாள். தாலி பெண்ணுக்கு வேலியாம். அப்போ கற்பு...?

நாம் தெளிவடைய நிறைய அவகாசம் தேவை. என்றாலும் காத்திருப்போம் . காத்திருத்தல் எமக்குப் புதிதல்ல; பழகி இரத்தத்துடன் ஊறிவிட்ட விஷயம். எதெதற்கு என்றில்லை. சகல இடத்திலும், சகலரிலும் காத்திருப்புப் பழகியதொன்று. எதன் பொருட்டுமின்றி எங்கும் எந்த க்ஷணத்திலும் மலரத் துடிக்கும் அன்பிற்காக ஆதரவிற்காக அதன் மூலம் கிடைக்கப் போகும் சுவாசத் திற்காக இருதயம் இப்போதல்ல எப்போதோ காத்திருப்பு யாகம் நடாத்துகிறது.

மனிதனை மனிதன் ஸ்நேகிக்கும் காலம் என்று வரும்? மொழி, மதம், இனத்தைத் தாண்டி ஆறறிவுணர்வு மட்டுமே சிந்தையில் உழலும் காலம் என்று வரும்?? சுயம் தொலைத் தவர்களும், சுவாசம் மறந்தவர்களும் ஒன்று கூடிக் கைகுலுக்கும் காலம் என்று வரும்?? காத்திருப்போம்... அதுவரை காத்திருப்போம்.. காத்திருத்தலே நம் சுயம். வரமாக...!

# நீங்களும் தைக்கலாம்




## 5 அல்லது 6 வயது குழந்தைக்குக் காற்சட்டை

**காற்சட்டைக்கு அளவு எடுக்க வேண்டிய முறை:**

1. இடுப்பிலிருந்து முழங்கால் மூட்டு வரைக்கும் அளவு எடுக்கவும்.
2. இடுப்பு அளவு.

குறிப்பு: (1) உயரம் 13 அங்குலம்+1 அங்குலம் வெட்டு வாட்டத்திற்கு.

(2) அகலம்= உயரத்தின் அளவில் 1 1/2 மடங்கு அல்லது (13x 3/2)+1"=20 1/2 அங்குலம்.

Eயானது Dயிலிருந்து 3 1/2 அங்குலம். Fஆனது D2 5/8 அங்குலம். I(ஐ) ஆனது 3 1/2 அங்குலம் A யிலிருந்து இறங்கியிருக்கிறது.

Gஆனது Bயிலிருந்து 1 5/16 அங்குலம் உள்ளடங்கியது.

IG பின் இடுப்பு வளைவைக் குறிக்கிறது.

Hஆனது Bயிலிருந்து 2 5/8 அங்குலம் உள் அடங்கியும், 1 3/4 அங்குலம் கீழ் இறங்கியும் இருக்கிறது.

IHமுன் இடுப்பு வளைவைக் குறிக்கிறது.

IH,IG,GE,EF வளைவுகளையும் HE நேர்கோடுகளையும் கோடிட்டு வரைந்துகொள்க.

முதலில் பின் இடுப்புப் பாகம் IG, GE,EF முதலியவைகளை வெட்டிக் கொண்டு, பிறகு முன் இடுப்புப் பாகம், அதாவது IH,HE,EF வெட்டவும்.

**குறிப்பு:**

1. முன் புறம் திறந்தபடி பொத்தான் வைக்க வேண்டி இருந்தால், Iயிலிருந்து 4 அங்குலம் கீழ் வரையில் வெட்டிக்கொள்க.
2. கால் குட்டையாக இருக்க வேண்டு மானால், வேண்டிய அளவு சரியாக அமைய எப்பொழுதும் துணியை வெட்ட அளவு குறிக்கும் பொழுது முழு அளவு பிரகாரம் குறித்துக்கொள்ள வேண்டும். பிறகுதான் வேண்டிய அளவு காலைக் குட்டையாக்கிக் கொள்ள வேண்டும்.

**சித்திரத் தையல் கலை**

*விரைவில் சித்திரத் தையற் கலை பற்றிய விளக்கங்கள் லேடீஸ் ஸ்பெசல் பகுதியில் இடம்பெறவுள்ளன.*

தகவல் பெட்டி

# 3 அடி உயரமுள்ள தாய்!

## கர்ப்பம் தரித்தாள்-குழந்தையும் பெற்றாள்




மூன்று அடி உயரம் கூட இல்லை. குளோரியா கர்ப்பம் தரித்தாள்.

கருவைக் கலைத்துவிடுங்கள் என்று மருத்துவர்கள் எச்சரித்தனர்.

"கலைக்காவிட்டால் என்ன நடக்கும்?"

"பிரசவத்தின் போது சாக நேரிடும்."

குளோரியா பயப்படவில்லை. அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் வசிக்கும் குளோரியாவின் உயரம் 84 செ.மீற்றர் - மூன்று அடிக்கும் குறைவு.

கர்ப்பம் தரித்த குளோரியா தனது மனோபலத்தால் ஆரோக்கியமாய் இருந்து குழந்தை பெற்றார்.

மருத்துவர்கள் வியந்தனர்.

பிரசவத்திற்கு முன்னர் குளோரியா சொன்னாராம்:

"என் பிள்ளையின் இதயத்துடிப்பு எனக்குக் கேட்கிறது. அதை இழக்க நான் தயாராய் இல்லை."

குளோரியாவின் மகன் இப்போது வளர்ந்துவிட்டான். பெயர் அந்தோணி. வயது 17. "என் அம்மா எனக்கு மலையளவு அன்பைத் தந்துள்ளார்" என்று அந்தோணி கூறுகிறான்.

குளோரியாவுக்கு இப்போது 42 வயது.

பிரசவகாலத்தில் ஆஸ்பத்திரியில் இருந்த சமயம் நடந்த ஒரு நிகழ்ச்சியை இப்போதும் நினைவில் வைத்திருக்கிறார்.


"ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தைகளும் என் உயரத்தில் இருந்தமையால், என்னைக் கண்டதும் அழும் குழந்தைகளும் மகிழ்ச்சியோடு சிரிக்கத் தொடங்கிவிட்டன" என்று சொல்லிச் சிரிக்கிறார்.

உடல் உயரத்தைவிட குளோரியாவின் மன உறுதி மாபெரியது. மலையளவானது.

ஊனம் என்றவுடன் ஒடுங்கிக் கிடப்பவர்களுக்கு குளோரியா ஒரு பாடம். மன உறுதியிருந்தால் எதையும் சாதிக்கலாம். சாதனைகளும் படைக்கலாம்.



# பாடும் மீன் இங்கே! பேசும் மீன் அங்கே!! மெல்லிய ஒலி எழுப்பி பேசும் அழகே தனி!!



பாடும் மீன் பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம். அருட்திரு விபுலாநந்த அடிகளாரே "பாசி படர்ந்த மட்டக்களப்பு வாவியிலே மீன்பாடக் கேட்டேன்" என்று கூறியுள்ளார். இசை நுணுக்கங்களைக் கொண்ட தமது 'யாழ் நூலை'யே உருவாக்க பாடும் மீன்களே தனக்குத் தூண்டுகோல் என்று விதந்துரைத்துள்ளார்.

பாடும் மீன் இசையினை மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரியில் முன்பு இருந்த அமெரிக்க பாதிரியார் ஒருவரே ஒலிப்பதிவு செய்திருந்தார். இதில் ஒரு பிரதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைத் தட்டுக் களஞ்சியத்திலும் இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க பேசும் மீன்கள் பற்றிய புதிய செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது. பூனை வடிவங்கொண்ட 'காற்ஃபிஷ்' (Cat fish) வகை மீன்களே பேசுகின்ற தன்மை பெற்றுள்ளதாகத் தகவல் ஒன்று எட்டியிருக்கிறது.

பூனை வடிவங்கொண்ட இந்த மீன் எப்போதும் நீர் மட்டத்தின் மேல் தனது தலையை வைத்துக்கொண்டே நீரில் நீச்சலடித்துத் திரியும். அகன்ற வாயைக் கொண்ட இம்மீன் ஒருவகை ஒலியினை எழுப்பிய வண்ணமே திரியும். இவை நீச்சலடிக்கும் போது நீல வண்ணக் கோடு ஒன்றினை நீர்மட்டத்தில் வரைந்த வண்ணமே செல்லும்.

இந்த மீன் எழுப்பும் ஒலி மிக மெல்லியதாக கேட்கும். இதனை அவதானித்த டாக்டர் ஜொனாதன் பிளாண்ற் என்பவர் இம்மீன்களை வைத்து ஆராய்ச்சியில் இறங்கினார். இவை எழுப்பும் ஒலிகள் கிளிகள் எற்படுத்தும் ஓசைக்கு நிகரானவை என்பதனையும் கண்டுகொண்டார். மிக உன்னிப்பாகக் கவனித்த போது இம்மீன்களின் ஓசையுடன் சில சொற்களும் இணைந்திருப்பதைக் கண்டு அதிசயப்பட்டார். இம்மீன்கள் வழமையாக அடிக்கடி கேட்கும் வார்த்தைகளை, கிளிகளைப் போல் மீண்டும் கூறுகின்றன என்பதனைக் கண்டு கொண்டார்.

'ஜோஜியா விஸ்லேர்ஸ்' என்ற தலைப்பில் ஏற்கனவே ஒரு விஞ்ஞான சஞ்சிகையில் வெளியான கட்டுரையினை டாக்டர் பிளாண்ற் படித்திருந்தார். குருவிகளைப் போல் ஒலியெழுப்பும் தன்மை கொண்ட-தலையை நீரின் மேல் வைத்தபடி நீச்சலடிக்கும் மீன்களைப் பற்றி விரிவாக அக்கட்டுரை விளக்கம் தந்திருந்தது. இதன் அடிப்படையில் டாக்டர் பிளாண்ற் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக 'லௌசியானா ரோக்கேர்ஸ்' என்ற புதிய பேசும் மீன்களை இவர் உருவாக்கியுள்ளார்.

நியூ ஒர்லியன்ஸ்சில்தான் டாக்டர் பிளாண்ற் தனது ஆய்வகத்தை நிறுவியுள்ளார். பேசும் மீன்கள் நூற்றுக்கு மேற்பட்ட சோடிகள் தற்போது தம்மிடமுள்ளதாக அவர் கூறுகிறார். பல்லாயிரக்கணக்கில் இவற்றைப் பெருக்கவும் முடியும் என்று தெரிவித்துள்ளார்.

புதுவகை மீன் இனத்தை தான் உருவாக்கிவிடவில்லை என்றும் சாதாரண 'காற்ஃபிஷ்' இனத்தையே தமது ஆய்வுகூடத்தில் விருத்தி செய்துள்ளதாகச் சொன்னார்.

மனிதர்கள் கூறும் வார்த்தைகளை ஓரளவு அவ்வாறே இம் மீன்கள் கூறிவிடுவதாகக் கூறும் டாக்டர் பிளாண்ற் சில உச்சரிப்புகள் வித்தியாசமாக இருப்பதாகவும் கூறுகிறார். குறிப்பாக 'CH' என்ற ஒலி 'SH' என்றுதான் வருவதாகச் சொன்னார்.

# சூரிய ஒளியால் பறக்கும் விமானம்

சூரிய ஒளியால் இயங்கும் அடுப்புக்களிலிருந்து கார்கள் வரை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன.

சூரிய ஒளியால் இயங்கும் விமானத்தை உருவாக்கினால் என்ன?

அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகள் மூளையைக் கசக்கினார்கள்.

அமெரிக்க கலிபோர்னியாவில் உள்ள எட்வேர்ட் விமானப்படை விஞ்ஞானிகள் அதில் வெற்றி கண்டுவிட்டனர்.

60 சதவீதம் சூரிய ஒளியால் இயங்கும் 'பாத்பைண்டர்' என்ற விமானம் உருவாக்கப்பட்டுள்ளது.

30 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் கொண்ட அந்த விமானத்தின் எடை 195 கிலோ.


சுமார் 200 மீற்றர் உயரே பறந்து தொடர்ந்து 40 நிமிடம் பறந்துவிட்டு பத்திரமாக தரையிறங்கிவிட்டது.

மேலும் பரிசோதனைகள் நடக்கின்றன. "21 ஆயிரத்து 500 அடி உயரத்தில் சூரிய ஒளியால் பறக்கும் விமானத்தை தயாரிப்போம்" என்கிறார்கள் அந்த விஞ்ஞானிகள்.

இவரை யாராவது தூக்கி தண்ணீரில் எறிந்துவிட்டார்களோ என்று நினைக்கிறீர்களா? யாரால்தான் தூக்க முடியும். அண்ணர் தன் எடையைக் குறைக்க தண்ணீரில் தானே குதித்துவிட்டார். எடை குறைப்புக்கு இதுவும் ஒரு ஐடியா. உடல் பருத்தவர்கள் உடனே முயலவும்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



பிரபு-ரேவதி,படம்-பிரியங்கா



## பிறந்த நாள் கண்ட பிரபு

டிசம்பர் 31ம் திகதியன்று பிறந்த நாள் கொண்டாடினார் பிரபு.

பாரதிராஜாவின் திருவிழா, பாலசந்தரின் ஜேட் என்று இரு படங்களிலும் நடிப்ப... ஹீரோவாகும் அருமை கிடைத்துவிட்ட திருப்தியில் இருக்கிறார்.

'ஜேட்' படத்தை கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபா செலவில் பாலசந்தர் தயாரிக்... இந்தித் திரையுலகின் கவர்ச்சி நாயகி மீனாட்சி சேஷாத்திரி பிரபுவின் ஜோடியா... போகிறார். பிரபுவின் நூறாவது படம் ராஜகுமாரன். பிரபு நடித்துவரு... படங்கள், பிரியங்கா, திருவிழா, ஜேட் இன்னுமுதல.

பிரபுவின் சாதனைப்பட்டியலில் சில. சின்னத்தம்பி 329 நாட்கள் ஓ... கோழி கூவுது இரண்டும் 200 நாட்கள் ஓடி வெற்றி கண்டன. சி... 25 வாரமும், நீதிபதி 141 நாட்களும், ... தோன்றில் மன்னன் 25 வாரமும் ஓடி ... படைத்தன.

நூறுநாட்கள் ஓடிய படங்கள் 33. பி... அதிக படங்களுக்கு இசை அமை... இளையராஜா. மொத்தம் 46 படங்கள்.



உயிருள்ள சித்திரத்தின்
சாலிழிப் பார்வையினால்
மதுக் கோப்பையானது
மனது!
கோப்பை நிரம்ப
உன் நினைவு!
போதை அதிகம்தான்!!

## சத்யராஜின் பேர்வான்

ஏர்போர்ட் நன்றாக வந்திருப்பதால் சத்யராஜ் திருப்தியாக இருக்கிறார்.

நம் பேர்வான் என்றொரு படத்தில் சத்யராஜ் நடிக்கப் போவதாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

திமுகவின் பேர்வாள் என்று முன்பு கலைஞர் கருணாநிதியால் குறிப்பிட்ட வை.கோபாலசாமி படத் தொடக்கவிழாவை ஆரம்பித்து வைப்பதால் வைகோ ஆதரவுப் படமோ என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

'நம் பேர்வாள்' படத்தை மணிவண்ணன் இயக்கப் போகிறார். பிரபல தயாரிப்பாளரும் சத்யராஜின் நண்பருமான கோவை ... படத்தை தயாரிக்கிறார்.



படம்
ஏர்போர்ட்

சத்யராஜ்

## காதோடு சொல்லுகிறோம்

★ கன்னிப... நடித்துள்ளார் ... காலஹாசனை ...

★ கவிஞர் கண்ணதாசன், ... நடித்திருக்கிறார்கள். அவர்க... ஐ விடலன் என்ற படத்தில் நடிக...

★ ஒடப் பந்தய வீராங்கனை அஸ்வினி ந... பெண்ணொன்ன. தற்போது மௌனி இயக்... வருகிறது. இப்படம் விரைவில் தமிழுக்கு மொழி...

★ எல்லாமே என் ராசாதான் படத்தில் இரண்டாவது கத... நடித்துவரும் இவர் விரைவில் இந்திப்படமொன்றில் நடிக்கவுள்ள...

★ இதயம், உழவன் போன்ற படங்களை இயக்கியவர் கதிர். தற்போது இவ... வெளியிடப்பட்டுள்ளது. இப்படத்திற்கான நடிக-நடிகையர் தேர்வு நடைபெற்றுவ...

★ தீபாவளியன்று வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது பொலில் வாக்க... ஒரு படத்தைத் தயாரித்து நடிக்கவுள்ளார்.

★ எங்கள் குரல், புருஷன் எனக்கு அரசன் ஆகிய படங்களைத் தயாரித்தவர் என்.என்.சந்திரன் ... முறையாக இயக்குகிறார்.

★ இப்போது ஓடிக்கொண்டிருக்கும் படத்தில் ஆக்ஷன் ... அதிரடி ... அசத்திவிட்டதால் தன் மார்க்கெட் மறுபடி உயரும் என்று நினைக்கிறாராம் ... நடிகை.

★ ... நிலைமைப்படம் நன்றாக ஓடினால் தன் மார்க்கெட் மீண்டும் உயரும் என்று நினைக்கிறார் ... எல்லாரும் பெரிய நடிகர்கள் ... செய்ய தயாராக தனது திறமையைக் காட்ட முடியவில்லையே என்ற புலம்பலும் தொடர்கிறது.

★ ... நடிகை சட்டம் படிக்கிறார். ... இல்லாமல் போனால் வழக்காடி உழைக்கலாம் என்று நம்பிக்கையும் ... கொடுத்திருக்கிறதாம்.

★ முன்னெழுத்து நடிகர் கதை எழுதி நடித்துவரும் பெரிய நதி பெரும் எதிர்பார்ப்பை கிளப்பியிருக்கிறது. ஆனால் படத்தில் நடிப்பவர்களுக்கு படத்தின் கதையே தெரியவில்லை. அவரிடம் போய் கதை கேட்க முடியுமா என்கிறார்கள்.

★ இசைக்கு மான என்று தேடி ஓடிய இயக்குநர் பாரதிராஜா இப்போது இசையமைப்பாளர் மீது கோபமாய் இருக்கிறாராம். இசை ராஜாவின் நட்பை மீண்டும் தேடிப் போய் பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டு மீண்டும் கூட்டுச் சேரும் சந்தேகம் உண்டாம்.

இளையராஜாவின் பாடல் ஒன்றை ... ராஜா அருகில் இருந்தாலே ... அடிக்க ஆளே கிடையாதப்பா.

★ 'ஆரணமணைக்கிளி' நாயகி ... நடிக்க முடிவு செய்துவிட்டாராம் ... சரிதான் என்கிறார்கள்.

★ குட்டி நடிகர்களில் அதிக சம்பளம் ... தாடி இயக்குநரின் ... என்று சொல்லும் சரிதான் ...

★ கல்லை தல அல்லாமல் இசைராஜ... நிறுத்தவில்லை. ...

## மாறியது திட்டம்

பழ பிரமாதமான விளம்பரங்களோடு பார்த்திபன் இயக்கி, கதை எழுதி அதற்கு வசனம் தயார்செய்து ஆரம்பித்த படம் ...

இப்போது படப்பிடிப்பை தள்ளி வைத்துவிட்டார். படத்தை மகாராஷ்டிரத்தில் எடுக்க இருந்தோம். அங்கு நில நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. அதனால் படப்பிடிப்பை ஒத்திவைத்துள்ளோம் என்று பார்த்திபன் சொல்லுகிறார்.

இப்போது 'சரிகமபதநி' என்னும் படத்தின் வேலைகளை ஆரம்பித்துவிட்டார். படம் பாக்ய ... அமையுமாம்.

## ஒப் கிடையாது!

ஓட்டப்பந்தய வீராங்கனை அஸ்வினி நாச்சப்பா சினிமாவுக்கு வந்த பிறகு விளையாட்டை முற்றாகவே மறந்து விட்டார்.

ஒரு படத்தில் மட்டுமே நடிப்பேன் என்று சொன்னவர் சினிமா உலகின் புகழ் மூலமாக மயங்கிப் போனார்.

சண்டைக்காட்சிகள் உள்ள படங்களில் நடிப்பதில் அஸ்வினிக்கு ஆர்வம். அரெஸ்ட் வாரண்ட் படத்தில் 10 சண்டைக்காட்சிகள். டூப் போடாமல் வெளுத்து வாங்கியிருக்கிறாராம்.

## இயக்குநர் மாற்றம்

சத்யராஜ்-மீனா ஜோடியாக நடிக்க காளிங்கராஜன் என்ற படத்தை ஆர்.வி. உதயகுமார் இயக்குவதாக இருந்தது. இப்போது ஒரு மாற்றம். மணிவண்ணன் அந்தப் படத்தை இயக்கப் போகிறார்.

## இவர்களும் பாடு...

நடிகர்கள் சொ... பாடுவது அதிகரி... போகிறது. வாங்க ... என்னும் படத்திற்காக ... இசையமைப்பில் ... ஆகியோர் சொந்... பாடியுள்ளனர். இப்... தாராளமான இயக்கு...

## வேஷ்டியை விடமாட்டேன்!

இன்று எல்லாக் கதாநாயகர்களும் ஜீன்ஸ் போட்டுத்தான் நடிக்கிறார்கள். நான் ஒருத்தன் மட்டுமாவது வேஷ்டி சட்டை போட்டு நடிக்கிறேனே என்கிறார் ராஜ்கிரண்.

நகர்புற கதையாக இருந்தாலும் வேஷ்டி சட்டை போட்டுதான் நடிப்பேன். அதுதான் தமிழ்நாட்டு கலாசாரம் இருக்கிறது என்கிறார் ராஜ்கிரண்.

## முத்தம் தர சம்மதம்

அமராவதி படநாயகி சங்வி ஒரு துணிச்சலான பேட்டியளித்திருக்கிறார்.

முத்தக்காட்சி மற்றும் நீச்சல் காட்சியில் நடிப்பீர்களா? இது கேள்வி. சங்வியின் பதில்.

"சம்மதம்தான். ஒரு படத்தின் கதைக்கு அந்த முத்தக்காட்சிதான் திருப்புமுனையாக அமைய வேண்டுமானால் தாராளமாய் முத்தம் கொடுத்து நடிப்பேன். அதில் எனக்குத் தயக்கம் கிடையாது. நீச்சல் காட்சியில் நடிக்கவும் ஓ.கே."

## பாலுவின் கோபம்

இந்திய தணிக்கை முறைமீது கோபத்தோடு பேசுகிறார் பாலுமகேந்திரா.

"நாம் தேவையில்லாமல் பழமைவாதிகளாக இருக்கிறோம். அன்றாட நடப்புக்களைப் பார்க்க மறுக்கிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே காதல் கலை பற்றிய 'காமசூத்ரா' விளக்க நூலை உலகுக்கு தந்தவர்கள் நாம். ஆனாலும் கதைக்கு மிக அவசியம் என்றாலும் கூட, பெண்ணின் மார்பைக்கூட காட்ட முடியாமல் இருக்கிறோம். இந்த இரட்டை வேஷம்தான் பழமையில் இருந்து மாறுவதைத் தடுத்து வருகிறது. நம்மில் இல்லாத ஒன்றை இருப்பது போல பாவனை செய்கிறோம்" இப்படி பொரிந்து தள்ளியுள்ளார் பாலுமகேந்திரா.

## இது-நடிகை ... வரைந்த பிர...



www.padippakam.com

# சினிவிசிட்

## "94 புகழ் தரும்"

வைதேகி வந்தாச்சு படத்தின் மூலம் அறிமுகமாகி இதுவரை 13 படங்களில் நடித்துவிட்டார் சரவணன்.

14 வது படம் அர்ஜுனன். 94ம் வருடம் என் புகழ் ஓங்கும் நல்ல கதையம்சம் உள்ள படங்களைத் தேர்ந்தெடுத்து நடிக்கப் போகிறேன் என்கிறார் சரவணன்.

அர்ஜுனன் பிரமாதமாக வரும் என்று பட விநியோகஸ்தர்கள் மத்தியில் பேசப்படுகிறது. அதனால் சகல பகுதிகளுக்கும் படம் விற்பனை யும் ஆகிவிட்டது.



சில்க்ஸ்மிதா

## இராவணனும் நல்லவனே!

தைப்பொங்கல் திருநாளுக்கு இராவணன் திரைக்கு வரவேண்டும் என்று கடுமையாக உழைக்கிறார்கள்.

இதிகாச இராவணனைப்போல் இந்த இராவணனும் நல்லவன். இவனை சிலர் வில்லனாக நினைத்தாலும் படம் பார்ப்பவர்கள் அப்படி நினைக்கமாட்டார்கள் என்கிறார் மன்சூர் அலிகான்.

படத்தில் மன்சூர் அலிகானுக்கு ஜோடியாக அரண்மனைக்கிளி நாயகி அசானா நடிக்கிறார்.



படம்- சேதுபதி ஐ.பி.எஸ் விஜயகாந்த்-காவேரி



## மினி சினி

★ ஆனந்தி பிலிம்ஸ் தயாரிப்பில் பிரபு நடிக்கும் திருவிழா படத்தை இயக்குகிறார் பாரதிராஜா. இந்தப்படத்திற்கு முன்பு புதுமுகங்களை வைத்துச் சொந்தமாகப் படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் பாரதிராஜா. இதற்கு இளையராஜா இசையமைக்கவுள்ளார்.

...ஒரு சில படங்களில் பாடியுள்ள இசையமைப்பாளர் தேவா, நெப்போலியன் ...னாக நடிக்கும் தாமரை படத்திற்காக பாடலொன்றை இயற்றியுள்ளார்.

...வத்திலே படத்தின் மூலம் அறிமுகமாகி, 130க்கும் மேற்பட்ட படங்களில் ...இவர் விரைவில் ஒரு படத்தை இயக்க இருக்கிறார். அந்தப் படத்தில் ...யகனாக நடிக்க வைக்க முயற்சிகள் நடந்து வருகின்றன.

...வைரமுத்து மற்றும் சில பாடலாசிரியர்கள் படங்களில் ஓரிரு காட்சிகளில் ...ரிசையில் கடைசியாகச் சேர்ந்திருப்பவர் புலவர் புலமைப்பித்தன். இவர்

...ப்பா நடித்து, மௌலி இயக்கிய படங்கள் அண்ணி, ஆனெண்ண ...அண்ணி நடிக்கும் படம் 'அரெஸ்ட் வாரண்ட்' கன்னடத்தில் தயாராகி ...றப்படவுள்ளது.

...மியாக நடித்து வருகிறார் செண்பகம். சில மலையாளப்படங்களில்

...தை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் படத்திற்கு லவ் ஸ்டோரி என்று ...றது.

...இந்த வெற்றியால் பூரிப்படைந்திருக்கும் விஜயசாந்தி, தமிழில் அதிரடியான

...து இவர் பொம்மனை கீரிச்சா போச்சு என்ற படத்தை தயாரித்து, முதல்

...வில கேட்ட பாடுக்கு ...வளாரம் 'இனா ...க ஜாலில் தமிழில் ...மின் ஆகாவிட்டால் ...வது சகலகலாவல ...ம், விட்டுச் சூப்பர் ...து வசப்படுவதை ...காட்ட வேண்டிய

பாசத்தை அவர் தனமீது காட்டவில்லையாம். தன்னிடம் சொல்லாமல் புதிய இசை வடிவம் அமைத்ததும் சகலைபாருக்கு வருத்தமாம். கங்கையார் தொடர்ந்து வரை சொருமிதால் பிரிந்தவர் மீண்டும் சேரும் வாய்ப்பு ஏற்படாதது இல்லை.

★ 'கலைவ' நடிகை நுனிக்களை திருப்பு விழாவுக்கு போகவேண்டுமென்றால் பத்தாயிரம் ரூபாய்க்கு பட்டுப் புடவை கொடுக்க வேண்டும். பணம் இருபத்தி ஆயிரம் அதுவும் காதுக்கு பெட்ரோல் செலவு தனி. பட்டியலைப் பார்த்த கடைக்காரர்கள் 'ஆளை விடு தாயே' என்று ஓட்டம் பிடிக்கிறார்களாம்.



• அர்ஜுன் - பானுப்பிரியா

படம் - நீதியின் குரல்

## சோம்பல் முறிந்தது!

'சின்ன ஜமீன்', 'காத்திருக்க நேரமில்லை' இருபடங்களும் தகராறு செய்யாமல், வசூலுக்கும் பாதகம் இல்லாமல் ஓடிக்கொண்டிருப்பதால் கார்த்திக் மீண்டும் சோம்பல் முறிந்து எழுந்திருக்கிறார்.

கார்த்திக் என்ற பெயர் கேட்டால் முகம் திருப்பிய தயாரிப்பாளர்கள் சிலர் கூட இப்போது அவர் பக்கம் திரும்ப ஆரம்பித்துள்ளார்களாம். இது தாண்டா சினிமா உலகம்.

## பொய்த்தது நம்பிக்கை!

உழவன் படத்தில் பிரபு-பானுப்பிரியா ஜோடி படம் தன் பெயரை மீண்டும் பேசவைக்கும் என்று பானுப்பிரியா நம்பியிருக்கிறார்.

ஆனால் உழவன் தியேட்டர்களை விட்டு ஓடிவிட்டதில் இப்போது வருத்தத்தோடு இருக்கிறார்.

பிரபுவின் சமீபத்திய படங்களில் உழவன்தான் பலத்த அடி வாங்கியிருக்கிறது.

## அசத்தும் கமல்

தேவர் மகனில் சக்திவேல் என்ற பாத்திரம் மூலம் அழுத்தமான முத்திரை பதித்தவர் கமல்.

குணா மூலமாக சிறந்த இயக்குநர் என்று பேசப்பட்டவர் சந்தானபாரதி.


பதினாறு வயதினிலே, கிழக்கே போகும் ரயில் போன்ற படங்கள் மூலம் வெற்றிப்பட தயாரிப்பாளராக அறியப்பட்டவர் எஸ்.ஏ.ராஜகண்ணு.

இந்த மூன்று பேரும் இணைந்து உருவாகிவரும் படம் மகாநதி.

கிருஷ்ணசாமி என்ற பாத்திரத்தின் மூலமாக மகாநதியில் அசத்தப் போகிறார் கமல்.

கமலுக்கு ஜோடி சுகன்யா. இசை இளையராஜா.

மகாநதியை பொங்கல் வெளியீடாக திரைக்கு கொண்டுவர முயற்சி நடக்கிறது.



கமல்ஹாசன் படம்- மகாநதி

## வாசு இயக்கும் சாது!

'ஜென்டில்மேன்' படுபயங்கரமாக வசூல் குவித்து விட்டதால் பிரபல தயாரிப்பாளர்களது பார்வை அர்ஜுன் மீது விழுந்திருக்கிறது.

நட்சத்திர இயக்குநர்களும் அவரை வைத்து படம் எடுக்க விரும்புகிறார்கள்.

இயக்குநர் வாசு அர்ஜுன் நடிக்க ஒரு படத்தை இயக்கப் போகிறார்.

'சாது' என்று படத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திப் படம் ஒன்றிலும் அர்ஜுன் நடிக்கப் போகிறார்.

தமிழில் வெள்ளிவிழாக் கண்ட படமான 'அரண்மனைக்கிளி' தெலுங்கில் தயாராகிறது. ராஜ்கிரண் தமிழில் நடித்த பாத்திரத்தில் அர்ஜுன் நடிக்க, ஜோடியாக வள்ளி படப் புகழ் பிரியா ராமன் நடிக்கப் போகிறார்.

## பாண்டியனின் மறுபிறப்பு

கிழக்குச் சீமையிலே படத்தின் மூலம் மீண்டும் தனது பெயர் பேசப்படுவதாகச் சொல்கிறார் பாண்டியன்.

பாரதிராஜாவால் மண்வாசனை படத்தின் மூலம் அறிமுகமாகி எண்பதைத்து படங்களுக்கு மேல் நடித்துவிட்டேன்.

இனி வீழ்ச்சி இல்லை. மீண்டும் குருநாதர் மூலமே மறுபிறப்பு ஏற்பட்டுள்ளது என்கிறார் பாண்டியன்.

## இளையராஜாவுக்கு வை.கோ பாராட்டு

வை.கோபால்சாமி தலைமையில் மதுரையில் இசைஞானி இளையராஜாவுக்குப் பாராட்டுவிழா நடந்தது.

விழாவில் அரசியல் பேசப்படவில்லை. என்றாலும் வை.கோபால்சாமி திரையுலக வட்டாரத்தையும் தன் கைக்குள் கொண்டுவர திட்டமிட்டுள்ளார் என்பது தெரிந்துவிட்டது.

இந்திய உப ஜனாதிபதியைச் சந்தித்த வை.கோபால்சாமி இளையராஜாவுக்கு இந்தியஅரசு விருது கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

## பிரசாந்த் வாங்கிய நாய்க்குட்டி!

இளம் நடிகர் பிரசாந்த் நாய் வளர்ப்பதில் பிரியம் உள்ளவர். சமீபத்தில் ஒரு 'அல்சேஷியன் நாய்' வாங்கியுள்ளார். விலை 18 ஆயிரம் ரூபாய். டைசன் என்று பெயர் சூட்டியுள்ளார்.

## மீண்டும் அநுராதா

சில்க் சுமிதா வலை வீசிய போது அதற்குள் புகுந்து எதிர் நீச்சல் அடித்தவர் அநுராதா.

திருமணம் முடித்தவுடன் ஆட்டம் வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டார்.

இப்போது மீண்டும் திரையுலகை எட்டிப்பார்க்கிறார்.

புருஷனை கைக்குள்ளே போட்டுக்கணும் படத்தில் நடிக்கிறார். ஆனால் ஆட்டமெல்லாம் கிடையாது ஜனகராஜின் ஜோடியாக நகைச்சுவை வேடத்தில் நடிக்கிறார்.

## அடக்கவழி என்ன?

அடங்காப்பிடாரியாக இருக்கிறாள் மகள். அவளை அடக்க நினைத்த தந்தையோ ஒரு காளையின் உதவியை நாடினார். அவனுக்கோ காதலிக்கவே தெரியவில்லை. என்ன செய்வது? தந்தையே அவனுக்கு காதலிக்க கற்றுக் கொடுக்கவேண்டி ஏற்படுகிறது.

இப்படியொரு காட்சியை "மாமா உன் பொண்ணைக் கொடு" படத்திற்காக படமாக்கியுள்ளனர்.

விக்னேஷ், புதுமுகம் சுற்பகம் ஜோடியாக நடிக்கின்றனர்.

## ரஜனியின் விருப்பம்

இமயமலைக்குப் போய் திரும்பிவந்துவிட்டார் ரஜனிகாந்த்.

தனது அடுத்த படமான 'வீரா' தொய்வில்லாத வித்தியாசமான படமாக இருக்க வேண்டும்.

அதற்கேற்ற கதை அமைந்தால் மட்டுமே படப்பிடிப்பு ஆரம்பமாகவேண்டும் என்று உறுதியாக கூறிவிட்டாராம்.

நீண்ட இடைவெளியின் பின் தான் கொடுக்கப் போகும் படம் ரசிகர்களை பூரணமாகத் திருப்திப்படுத்த வேண்டும். ஏமாற்றிவிடக்கூடாது என்று நினைக்கிறார் ரஜனி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

பாப்பா முரசு சிறுகதை

# சீனு கற்றுக்கொண்ட பாடம்

வேணுவும், சீனுவும் இணைபிரியாத தோழர்கள். எங்கு போனாலும் சேர்ந்தே போவார்கள். சேர்ந்தே படிப்பார்கள். ஆனால் குணத்தில் இருவரும் வட துருவமும், தென் துருவமுமாக இருந்தனர்.

வேணு தாராள மனப்பான்மை கொண்டவன். சீனு படு கஞ்சன்.

வேணு ஏழைகளைக் கண்டு மனம் இரங்குவான். சீனு பணக்காரர்களை மட்டுமே நேசிப்பான்.

வேணு கடவுள் பக்தியுள்ளவன். சீனுவுக்கு பக்தியென்பதே துளிகூடக் கிடையாது.

கடன் வாங்குவது, ஓசி வாங்குவது இதெல்லாம் வேணுவுக்குப் பிடிக்காது. சீனு தேவையில்லாமல் கடன்வாங்குவான். ஓசி கேட்பான். வேணு உண்மையே பேசுவான். சீனு நிறைய பொய் பேசுவான்.

தனது நண்பனை எப்படியாவது திருத்த வேண்டுமென்று வேணு நினைத்தான்.

வேணுவுக்கு அவனது அப்பா புதிய சேட் ஒன்று வாங்கிக் கொடுத்தார். அதை வேண்டுமென்றே சீனுவுக்குப் பரிசாக்க் கொடுத்தான். அவனும் அதைக் கிடைத்தது லாபம் என வாங்கிக் கொண்டான்.

அவன் அதை அணிந்து கொண்ட போது அவனுடைய அம்மா, "ஏண்டா சீனு, உனக்கு இந்தச் சட்டையை அப்பா தைத்துத் தரவில்லையே ஏது?" என்று கேட்டாள். அம்மாவிடம் உண்மை சொல்லாமல், "அம்மா! பள்ளிக்கூடத்தில் ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு கிடைத்தது என்று சொன்னேன் அல்லவா. அந்தப் பரிசுத் துணி இதுதான். இன்று தான் தைத்து வாங்கி வந்தேன்," என்றான்.

"ஏண்டா ஓட்டப்பந்தயத்தில் பிரைஸ் வாங்கியதாக அன்று சொல்லவில்லையே, உன் நண்பனுக்கல்லவா கிடைத்தது என்று சொன்னாய்," என்று சந்தேகத்துடன் கேட்டாள் அம்மா. அதற்கு வேறொரு பொய்யைச் சொல்லிச் சமாளித்துக் கொண்டான்.

ஒரு நாள் சீனுவும், வேணுவும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு



அரசமரத்தடியில் உள்ள பிள்ளையார் கோவில் வந்ததும், வேணு பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போட்டான். "நீயும் போடடா, அப்போது தான் பரீட்சையில் நீ பாஸ் பண்ணுவாய்," என்று வேணுசொல்ல, சீனு சிரித்தபடி, "அப்படியானால் நான் இன்று முதல் புத்தகங்களையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டுத் தோப்புக் கரணம் மட்டும் போடுகிறேன்.

"பாசாகி விடலாம் என்கிறாயா?" என்று குறுக்குக் கேள்வி கேட்டான் சீனு. "பிறகு உன் விருப்பம்", என்று வேணு சும்மா இருந்து விட்டான்.

மற்றொரு நாள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது கண் இல்லாத பிச்சைக்காரன் இவர்களிடம் பிச்சை கேட்டான். வேணு பத்து சதத்தை போட்டு விட்டு 'ஐயோ பாவம்,' என்றான்.

"இப்படியெல்லாம் பிச்சை போடுவதால்தான் நாட்டில் பிச்சைக்காரர்கள் அதிகரித்துக்கொண்டே போகிறார்கள்," என்று கூறிக்கொண்டு அப்பிச்சைக்காரனை "போ..போ" என்று துரத்தினான் சீனு.

இப்படியிருக்கும் சீனுவை திருத்தியே தீருவேன் என மனதிற்குள் சபதம் செய்து கொண்டான் வேணு. அதற்காகச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சீனு திடீரென்று வேணு வீட்டிற்கு ஓடி ஓடி வந்தான். அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொண்டிருந்தது.

"என் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையடா. அப்பாவும் ஊரில் இல்லை. டொக்டரிடம் போகலாம் என்று அம்மா சொல்கிறார். நீயும் கூட வாடா," என்றான்.

வேணு அவசரமாகப் புறப்பட்டுச் சீனுவோடு போனான்.

அவனது அம்மாவை அழைத்துக் கொண்டு ஓட்டோவில் ஏறி டொக்டரிடம் போனான். சீனு கூட அழுது கொண்டே வந்தான்.

டொக்டர் "என்ன உடம்பிற்கு?" என்று கேட்டார். சீனு சொன்னான். டொக்டர் உடனே ஊசி போட்டு, மருந்து கொடுத்து, "சரியாகப் போகும். இன்று மட்டும் ஓய்வு எடுத்துக்கொள்ளட்டும்." என்று சொல்லி அனுப்பினார். டொக்டரிடம் அம்மா பத்து ரூபாயைக் கொடுத்தார்.

திரும்பிப் போகும் போது வேணு தோப்புக்கரணம் போட்ட பிள்ளையார் கோவில் வந்தது. வேணு ஓட்டோவை நிறுத்தச் சொல்லி பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போட்டான். சீனுவும் சேர்ந்து தோப்புக்கரணம் போட்டதை வேணு ஆச்சரியமாகப் பார்த்தான்.

ஓட்டோவில் போகும் போது இருவரும் பேசிக்கொண்டே போனார்கள். "என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு மட்டும் தோப்புக்கரணம் போட்டாயே ஏன்?" வேணு கேட்டான்.

"அம்மாவுக்கு உடம்பு நல்லா ஆக வேண்டும் என்று வேண்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டேன்," என்றான் சீனு.

"டொக்டர் உடம்புக்கு என்ன? என்று கேட்ட போது உன் அம்மா பொய் சொல்லியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?"

"என்னடா இப்படிக் கேட்கிறாய்? தவறான மருந்து கொடுத்திருப்பார். உடம்பு குணமாகியிருக்காது."

"பத்து ரூபாய்க்குப் பதிலாக டொக்டரிடம் ஒன்பது ரூபாய் கொடுத்திருக்கலாமே? ஒரு ரூபாய் மிச்சமாயிருக்குமே." சீனு ஒன்றும் பேசவில்லை. "டொக்டர் பணக்காரர்களுக்குத்தான் வைத்தியம் செய்வேன் என்று சொல்லியிருந்தால் என்ன நடந்திருக்கும்?"

சீனு அழுதேவிட்டான். "வேணு என்னை மன்னிச்சிடடா. இனிமேல் பொய் சொல்லமாட்டேன். ஏழைகளை ஏச மாட்டேன். கஞ்சத்தனம் செய்யமாட்டேன். கடவுளை நம்புவேன்," என்றான்.

---

## பலாப்பழம்

மணக்குது பலாப்பழம்
மணக்குது பலாப்பழம்
மணக்குது பலாப்பழமே!
சுளை பல கொண்டு
சுவைபல கண்டு
சுவைத்திடும் பலாப்பழமே!

முள்ளினால் தோலை
கிள்ளினால் போல
கொண்டது அப்பழமே!
தெள்ளிய மனதுக்கு
தேன்சுவை தந்து
தித்திக்கும் பலாப்பழமே!

முக்கனி பெயர் கொண்ட
முக்கிய பழங்களில்
முதலிடம் கொண்டதுவே!
ஐக்கிய தேசத்தில் அறுசுவை அளித்திடும்
அப்பழம் சிறந்ததுவே!

-நன்முனையூர் கையூம்-
வீரத்திடல் அல்.ஹிதாயா வித்தியாலயம், கல்முனை.

---

## விடுகதைகளும் விடைகளும்

1. நீண்ட பிரயாணம் செய்வான். நீண்டு காணப்படுவான். அவனில் ஏவராவது சிக்கிப்பட்டால் சிரித்து இறப்பான். சிரித்து இறக்க வைப்பவன் யார்?
2. இருவர் நீண்டு வளர்கிறார்கள். இவர்களில் கழிவே இல்லை. இவர்கள் இருவரும் யார்?
3. மலைபோல உடம்பு இருக்கும். இவர்களின் கண்களே மிகவும் சிறியவை. இவர்கள் யார்?
4. ஒருவன் இருக்கிறான். அவனை எரிக்கும் போது காற்றின் எதிர்திசையை நோக்கி அவன் புகையைவிடுவான். அவன் யார்?
5. மழை பெய்து வெள்ளம் வற்றினாலும் ஒருவரின் நீர்வற்றாது. அவர் யார்?
6. ஒரு மடையன் இருக்கிறான். நல்லதை விட்டு கழிவைஎடுப்பான். அவன் யார்?

1. மின்சாரம் 2. தென்னைமரம், பனைமரம் 3. யானைகள் 4. கடலிலிருந்து எடுக்கும் அம்பர் 5. தேங்காய் 6. பால்வடி..

சிராஜ் நகர் ஏ.எப். லரீப், என்.எல்.ஜெய்சர்.

1. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி ஒன்று வாலினால் தண்ணீரை வற்ற வற்றக் குடிக்குது. அது என்ன?
2. அட்டைக்கரி பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள். அது என்ன?
3. ஆள் இரண்டு இருக்கு. ஆசனம் ஒன்று. அது என்ன?
4. அடித்தால் விலகாது. அணைத்தால் நிற்காது. அது என்ன?
5. ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு. அது என்ன?
6. காட்டுக்குள்ளே துளி இரத்தம் அது என்ன?

1. எண்ணெய்த்திரி 2. பனங்காய் 3. கருவேலமுள் 4. தண்ணீர் 5. நிலா 6. குண்டுமணி

க. நிரோசாந்தினி
பாண்டிருப்பு.

1. சமையலுக்கு ஆகும் பூ. தலையிலே சூடிக்கொள்ளாப் பூ. என்ன பூ?
2. கடலுக்குள் போகும் கட்டச்சிக்கு ஆயிரம் கண். அவள் யார்?
3. வித்தன் கண்ட பறவை. அத்தனை இடத்திலும் பறவை. அது என்ன?
4. பாரில் வந்து சேருமுன் பத்து மாதம் சிறைவாசம். அது என்ன?
5. பெண்ணுக்குப் பெயராகும். நோய்க்கு மருந்தாகும். அர்ச்சிக்கும் பொருளாகும். அது என்ன?
6. வட்டமாய் இருக்கும். வண்ணம் பல காட்டும். மங்கையர் கையில் கொஞ்சி விளையாடும். அது என்ன?

1. வாழைப்பூ 2. வலை 3. விமானம் 4. குழந்தை 5. துளசி 6. வளையல்

செல்வி: ஆர். றினோஸா
பாத்திமா பாளிகா வித்தியாலயம்
பொத்தானை-07.

## கணித விநோதம்

1×8+1=9
12×8+2=98
123×8+3=987
1234×8+4=9876
12345×8+5=98765
123456×8+6=987654
1234567×8+7=9876543
12345678×8+8=98765432
123456789×8+9=987654321

ஹிஸான் றஸீஸ்
ஹேனமுல்லை, பாணந்துறை.

---

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.01.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 23
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 20

பரிசுக்குரியவர்:
செல்வி. நம்மதா வேல்முருகு
வின்சன்ற் மகளிர் பாடசாலை
மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

க.சி. நிரேம் ஆனந்
இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி, திருமலை.

கே.ஆர். உமேஷனன்
பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை, ஹேறனை.

ஐ. தியவதனி
தரவல எஸ்டேட், டிக்கோயா.

டிலேஸ் கிறிஸ்டோபர்
மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

எஸ். சௌமியா
அசோகா வித்தியாலயம், கண்டி.

செ. சுஜிகரன்
கொழும்பு-13.

பி.எம்.எம். மாஜித்
மத்திய மகா வித்தியாலயம், மூதூர்.

செல்வன் சஜீவ் காண்டீபன்
கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம் மட்டக்களப்பு.

வேனி ஷெரோன் பர்னாந்து
நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு-13.

நஸீஹா ஹமீத்
புனித மரியா கல்லூரி, திருகோணமலை.


---

## அறிவோம் மனதில் பதிவோம்


இங்கிலாந்தில் கோலிக்குண்டு விளையாட்டுக் கழகம் உள்ளது. இதன் சார்பில் கோலிக்குண்டு சம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் லென் ஸ்மித் என்பவர் 15 முறை சம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.




அமெரிக்காவில் விஸ்கான்சின் நகரில் உள்ள யெர்க்ஸ் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் 62 அடி நீளமுள்ள மிகப் பெரிய தொலை நோக்கி (ரெலஸ்கோப்) உள்ளது. இது சிக்காகோ பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமானது. இந்தத் தொலைநோக்கி 100 ஆண்டுகள் பழமையானது. என்றாலும் இன்றும் நல்ல நிலையில் அது இயங்கி வருகிறது.



சாணக்கியர், நெப்போலியன், இங்கிலாந்து மன்னர் மூன்றாம் ரிச்சட் மூவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. மூவருமே பற்களுடன் பிறந்தவர்கள்.



ஒலிம்பிக் குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்களிலேயே மிகச் சிறியவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஜக்கி பீலட்ஸ். 1924ம் ஆண்டு 'ஃபெதர் வெயிட்' பிரிவில் விளையாடிய போது இவரது வயது 16. இப்போது 17 வயது நிறைந்தவர்கள் தான் குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.




ஒலிம்பிக் குத்துச் சண்டைப் போட்டிகளில் மூன்று முறை தங்கப் பதக்கங்களை வென்றவர்கள் இருவர்தான். ஹங்கேரியைச் சேர்ந்த சவுத்பா லாஸ்லோ 1948,1952, 1956ம் ஆண்டுகளிலும் கியூபாவைச் சேர்ந்த டியோபிலியோ ஸ்டீபன்சன் 1972, 1976,1980ம் ஆண்டுகளிலும் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

தென் அமெரிக்காவில் ஆர்ஜென்டினா நாட்டில் வளரும் 'ஓம்பு' என்ற மரத்தைக் கோடாரியால் வெட்ட முடியாது. அந்த மரத்தின் தன்மை இறப்பர் போல இருப்பதால், கோடாரி உள்ளே செல்லாமல் அதிர்ந்து வெளியே வரும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஹீரோ கோப்பை - றிச்சர்ட்சன் குமுறல்

ஹீரோ கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் தோல்வி கண்ட மேற்கிந்திய தீவு அணி கப்டன் ரிச்சி ரிச்சர்ட்சன் குமுறி இருக்கிறார்.

என்ன சொல்கிறார் ரிச்சி?

"கிரிக்கெட் ஜென்டில்மேன்கள் விளையாட்டு. அதில் ஏமாற்றுவேலைகள் இருக்கக்கூடாது. கிரிக்கெட் விளையாடும் போது உங்களுக்கு ஏற்ற, உங்களுக்கு சாதகமான சூழ்நிலையை நீங்களே உருவாக்கிவிடக் கூடாது. எல்லோருக்கும் பொதுவான வகையில் ஆடுகளம்(பிட்ச்) தயாரிக்கப்படவேண்டும். அப்போதுதான் நியாயமான கிரிக்கெட் ஆடமுடியும்.



"ஆனால், சில நாடுகள் தங்கள் அணிக்குச் சாதகமான 'பிட்ச்' தயாரிக்கின்றன. இது மோசமான ஏமாற்று வேலையாகும்.

"நாங்கள் விரும்பினால் எங்கள் நாட்டில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு

## ஸ்போர்ட்ஸ்

சாதகமான 'பிட்ச்'சைத் தயார் செய்து வெற்றிகளைக் குவிக்க முடியும். நாங்கள் அவ்வாறு செய்வதில்லை.


"கல்கத்தாவில் நடந்த 'ஹீரோ கோப்பை' இறுதிப் போட்டியின் போது, ரசிகர்கள் செய்த அட்டகாசம் எங்கள் பொறுமையைச் சோதிப்பதாகவும், எரிச்சல் அடையச் செய்வதாகவும் அமைந்தது. எங்கள் வீரர் மீது போத்தல்களையும் பட்டாசையும் வீசியபோதே நாங்கள் வெளிநடப்பு செய்து இருப்போம்.

"விளையாட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் அமைதியாக இருந்தோம்.

"இனிமேலாவது போட்டி அமைப்பாளர்கள் வீரர்களது பாதுகாப்பில் அக்கறை செலுத்துவது நல்லது."

இவ்வாறு தனது மனக்குமுறலை வெளிப்படுத்தியிருக்கும் ரிச்சி ரிச்சர்ட்சன் இந்தியர்கள் சிறப்பாக விளையாடினார்கள் என்றும் பாராட்டியுள்ளார்.

# கரண்ஸியில் தூங்கும் ஸ்டெபி கிராப்



உலக டென்னிஸ் வீராங்கனைகளில் இன்று முதலிடத்தில் இருப்பவர் ஸ்டெபி கிராப்.

கவர்ச்சியும், துல்லியமான கவனிப்போடு கூடிய வேகமும் நிறைந்தவர்.


ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபி கிராபின் இந்த ஆண்டு வருமானம் என்ன தெரியுமோ?

96 கோடியே 80 இலட்சம் ரூபாய். வரி போக மிஞ்சியிருப்பது 79 கோடியே 20 இலட்சம்.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 16 சதவீதம் அதிகமாகச் சம்பாதித்துள்ளார்.

போட்டி ஆட்டக்காரியான மோனிகா செலஸ் கத்திக்குத்தில் காயம் அடைந்தது ஸ்டெபிக்கு லாபம். சாம்பியன் பட்டமும் எளிதாகக் கிடைத்தது. பரிசுப் பணமும் குவிந்தது. தொடர்ந்து நடக்கும் போட்டிகளிலும் வெற்றிகளும் பணமும் குவிகிறது.

# தேன் கிண்ணம்



### தமிழாலே பொங்கல் வைப்போம்

தை மகள் வந்தாள் வரவேற்போம்!
தமிழ் மகளே வருக! வருகவென்று! அத்
தை மகளே வியக்கும் வண்ணம்
தமிழாலே பொங்கல் வைப்போம்!
தை மகளே வந்தாள் வரவேற்போம்
தமிழ் மகளே வருக! வருகவென்று!
பொங்கலில்லை புத்தாடை இல்லை!
மங்கலங்கள் எல்லாம் மறந்து போச்சு!
இங்கெல்லாம் மரணபயம் வெடியோசை
எங்ஙனம் பொங்கிநாம் மகிழ?
தைமகளே வந்தாள் வரவேற்போம்
தமிழ் மகளே வருக! வருகவென்று!
அடுகளத்தில் உழவு செய்தோம்!
அகதிமுகாம் விதை விதைத்தோம்!
அனாதைகளை நடவு செய்தோம்!
அறுவடைக்கு என்ன செய்வோம்?
தை மகளே வந்தாள் வரவேற்போம்!
தமிழ் மகளே வருக! வருகவென்று!
பானையைக் கல்லில் வைத்தோம்!
பாலாகக் கண்ணீர் விட்டோம்!
பகலிரவு பயந்து இருந்தோம்!
பச்சரிசிக்கு என்ன செய்வோம்?
தை மகளே வந்தாள் வரவேற்போம்!
தமிழ் மகளே வருக வருகவென்று!
துவக்கோசை ஒழிய வேண்டும்!
தூது போக யாரும் வேண்டும்!
சிவந்தமண் கழுவ வேண்டும்!
சீர் பெற்று நாம் வாழ வேண்டும்!
தை மகளே வந்தாள் வரவேற்போம்!
தமிழ் மகளே வருக வருகவென்று!
பாட்டொன்று பாடி விட்டால்!
பாலாறு பொங்கிடுமா? இந்த
நாட்டிலே அமைதி தோன்றிலே
நமக்குப் பால்பொங்கும் நாள்!
தைமகள் வந்தாள் வரவேற்போம்!
தமிழ் மகள் வருக வருகவென்று!

-முகில்வண்ணன்-

### எதிர்காலச் சோகம்

வருடமே
வரவேற்கிறேன்...
நிகழ்கால
யன்னல்களால்
என்
இருட்டு வாழ்க்கையை
உதறிப்போடுகிறேன்.
முரசுகள் வரை
அடித்து
உதறிய
வேதனைகளை
வெளியேற்றி
உன்னை
வரவேற்கிறேன்
வருடமே...
வா..
நீ
வரங்களோடு
வரமாட்டாய்!
புதிய சோகங்களை
பதியம் போட்டு
பதுக்கிக் கொண்டு
வருவாய்..
எனக்குத் தெரியும்
ஒவ்வொரு முறையும்
சந்தோஷங்களை
தொலைத்துவிட்டு
வேதனைகளோடு
மட்டுமே
நீ
வெளியே
வருவாய்
வா..

-காஸிம் பி.அகமத்--பொத்துவில்.

### எக்காலம்?

இந்தத் துயர்ப்பிறவி இங்கே முடிகிறதே,
எந்தப் பிறவி இனி எங்குவரும்--எக்காலம்?
முந்தைப் பிறவியினால் மூண்ட துயரமிதேல்,
வந்திடுமோர் நற்பிறப்பை வாழ்த்துவதும் எக்காலம்?
மீண்டும் பிறப்பெடுத்தே மெதுவாக ஊரடைந்து
தீண்டிமணல் நடந்து திரிவதுவும் எக்காலம்?
விட்ட பொருள் யாவும் வீட்டோடிருப்பதனைக்
கட்டாயமாய்க் கண்டே கண்குளிர்வதெக்காலம்?
அள்ளும் துலா நீரால் அழகுப்பயிர் விளைத்தே
உள்ளம் மகிழ அதில் உலவி வரல் எக்காலம்?
முல்லைச் சொதி காய்ச்சி முழுநண்டுக் கால் உடைத்து
நல்ல இறால் பொரித்து நாமுண்ணல் எக்காலம்?
கொள்ளை அடித்தோரை கூடவே நின்றோரை
வள்ளலாய் வந்தோரை வாழ்த்துவதும் எக்காலம்?
எந்தத் தொடக்கமுமே என்றேனுமோர் முடிவைத்
தந்த சரித்திரங்கள் தாம் படிப்பதெக்கலாம்? -அகதிக் கவிராயர்-



### பிரிய சினேகிதிக்கு....!

உயிராய்
இருக்கிறேன்,
சினேகிதியே!
நீ-நலமா?
உன்னவர்
நலமா?

என் விசுவாசங்களில்
உன்-திருமண
அழைப்பிதழ்
மட்டுமே-என்னோடு.

தேசம்
கடந்து போனாய்
சரி,
நேசத்தையுமா?

காலமாற்றம்
நட்பையும்
நசுக்கி விட்டதா?

நட்பை
புரியவைத்த
நட்பின்
சிற்பி-நீ

உன்னை
நான்,
செதுக்கலாமா?

கீட்ஸின்
கவிதைகளுள்
முகம் புதைத்து
கரம்-பற்றியபோது
காதலா
இருந்தது?
நட்பல்லவா!
மறந்ததேன்?
நண்பியே.

உன் நெஞ்சில்
நிலைத்திருந்து
நிறம்மாறிப்-போன
நியதியா
நான்?

காலம்
கடக்கும்-கனிவாய்
உனக்கொரு
பதில்தரும்!
காத்திரு-பின்
மடல் எழுது.

ஸ்ரீவரணி-வாழையூர்.



### காயங்கள்

என்-
ஜீவ நிலைகளிலே
சௌந்தர்யமானது
உன்-
அன்பை உட்கொண்ட
அந்த நாள்தான்.

உன்-
சந்திப்புக் கிடைத்த
உணர்வுகளாலே
என் இதயம்
உன் பெயரைத்தான்
"படக் படக்" என்று
படித்துக் கொள்கிறது.

காதலி....
நீ-
பர்தாவுக்குள் ஒளிக்கும்
பார்வைகளில்
என் மீதான
காதலின் சம்மதத்தைக்
கண்டேன்;
அந்த-
மூடிய பர்தாவுக்குள்ளே
காதலின் ஸ்பரிசத்தால்
நீ-

புன்னகைப்பதை
உன்-
ஓரப் பார்வைகள்
எனக்கு
உச்சரித்துக்காட்டுகின்றன.

என்-
இளமையின் தேடல்
வேகமாகிய போது
உன்-
சின்ன விழிகளிலே
சிறையானேன்;
இன்றும் கூட
வெளியேற முடியாது
கைதியாகத்தான்
காத்துக்கொண்டிருக்கிறேன்.

என்-
சொப்பனங்களிலெல்லாம்
விசாலமாக்கப்பட்டிருப்பது
உன்-
முகத்தின் விலாசம்தான்;
ஒவ்வொரு இரவிலும்
கனவுகளாலே
காயப்பட்டுக்
கொண்டிருக்கிறது
என் இதயம்.

அன்பே!
இனியும்-
பார்வைகளாலே
பதில் சொல்லாதே!
உன்-
சம்மதத்தில்தான்
என்-
ஆத்மாவில் உண்டான
காயங்கள் ஆறும்!

-காத்தான்குடி அனு-



### மலை வாசிகள்!

என்னில் உன்னி
வெடிக்கும் ஒரு பொழுது
அந்தச் சூரியப் பிரவாகம்
தாக்குவதான உஷ்ணம்.

தோல் கருகி
மலையேறும் அவர்கள்
என் இதயத்தை நெரிக்கும்
உச்சி வேளை.

"இவர்களில்லை யென்றால்..."
ஒரு தெறிப்பாய்
என்னில் சூழ்வதான
எண்ணங்கள்.

அவர்களின் வியர்வையின்
உக்கிரம்
தெரிகிறது.
மாங்காய்த்தீவின்
உப்புக்கள் கரைவதாய்

உணர்வு
என்றாலும் உரிமைகளால்
ஒடுக்கப்பட்ட
அவர்களை எண்ணிய போதே
கண்ணீர் உத்தரவில்லாமல்
வருகிறது.

அக்குறணை ஹரீரா அனஸ்.



# இந்த வாரம் உங்கள் பலன்

(09.01.94 முதல் 15.01.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், வெள்ளி, செவ்வாய் |
| மகரம் | - சனி, புதன் |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |

சந்திரன் விருட்சிகம், தனு, மகரம் இராசிகளில இவ்வாரம்
14.01.94இல் மகரச் சூரியன

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | எடுத்த கருமம் வெற்றி, நீடித்த பயணம். | காலை 8 மணி |
| திங்கள்- | கௌரவம், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, குடும்பக் கலகம். | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தனலாபம், கடன் தொல்லை. | பி.ப 3 மணி |
| சனி- | செலவு மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் இலாபம், கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மகிழ்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, இனசன விரோதம். | பகல் 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் துயரம், மனக்கவலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை,வெளியிட வாசம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கௌரவம், அரச சன்மானம். | காலை 9 மணி |
| புதன்- | காரியசித்தி, புகழ். | பி.ப 3 மணி |
| வியாழன்- | பணவரவு, குடும்பச் சிக்கல். | காலை 10 மணி |
| வெள்ளி- | பிள்ளைகளால் கஷ்டம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| சனி- | வெளியிடப் பிரயாணம், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | கடின உழைப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர் சகாயம், உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| புதன்- | பொருள் வரவு, பூமியால் இலாபம். | பகல் 11 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, ஆடம்பர வாழ்க்கை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பணத்தட்டுப்பாடு, கௌரவம் இழப்பு. | பி.ப 2 மணி |
| சனி- | மனக்குழப்பம், அரச விரோதம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள்; அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாசம், கௌரவம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | துன்பம் மிகுதி, யோசனை அதிகம். | காலை 7 மணி |
| புதன்- | அந்நியரால் நன்மை, அதிகாரப் பேறு. | பகல் 1 மணி |
| வியாழன்- | தனலாபம், வெளி வட்டாரப் பழக்கம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் முயற்சி, கல்வியில் மந்தம். | பகல் 12 மணி |
| சனி- | பணவரவு, காரியானுகூலம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | ஆடம்பர வாழ்வு, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| திங்கள- | வெளியிடப் பயணம், வீண் முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, பொருள் சிறப்பு. | பி.ப 3 மணி |
| புதன்- | குடும்பக் கலகம், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மன மகிழ்சி | பகல் 12 மணி |
| வெள்ளி- | எதிர்பார்ப்பு வெற்றி, கடன் பயம். | காலை 9 மணி |
| சனி- | வீண் செலவு, ஆதாயம் குறைவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 11 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியத்தடை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், ஆடம்பர வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 8 மணி |
| வியாழன்- | பயமிகுதி, தூர இடப் பயணம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | குறை கேட்டல், வீண் முயற்சி | காலை 10 மணி |
| சனி- | குடும்ப சந்தோஷம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -1

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசனக்கொண்டாட்டம், மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| திங்கள்- | தேகசுக நன்மை, காரியசித்தி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் சந்தேகம், மனக் குழப்பம். | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | தனலாபம், தார சுக நன்மை. | காலை 8 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், பொருள் வரவு. | பகல் 11 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, கடன் தொல்லை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 6 மணி |
| திங்கள்- | உறவினர் இழப்பு, கவலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- | முயற்சி அதிகம், பொருளீட்டல். | காலை 10 மணி |
| வியாழன்- | பணவரவு, காரியசித்தி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கடன் தொல்லை நீங்கும். | காலை 9 மணி |
| சனி- | செலவு அதிகம், கடன்படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய மேன்மை. | காலை 8 மணி |
| திங்கள்- | தனலாபம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | உறவினர் கலகம், வீண் பழி. | பகல் 12 மணி |
| புதன்- | குடும்பக் கஷ்டம், பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| வியாழன்- | தீராத நோய், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், ஆடம்பர வாழ்க்கை. | பகல் 11 மணி |
| சனி- | செலவு அதிகம், பணத் தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, பொருள் வரவுண்டு. | காலை 9 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், எதிர்பார்த்த உதவி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | குடும்பக் கஷ்டம், பொருள் நஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் முயற்சி, எதிர்பாரா செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- | தேக சுகம் பாதிப்பு, செலவு அதிகம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | முயற்சி மேன்மை, தனலாபம். | பகல் 11 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், மகிழ்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, மனக்குறை நீக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம, எதிர்பாரா உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் துயரம், இனசன உதவி. | காலை 9 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, அந்நியர் பகை. | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, வீண் சந்தேகம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | கௌரவம், தெய்வானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✝ விந்தைகள்

## விபத்தால் வளரும் மற்றொரு தலை!

## கட்டி வளர்வதை மருத்துவர்கள் கட்டுப்படுத்த முடியவில்லை



மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒரு மோட்டார் விபத்தில் சிக்கினான் எட்டே வயதான ஒரு சிறுவன். தலையில் பட்ட அடி உட்காயத்தினை ஏற்படுத்தியது. இதனால் அவனுடைய தலையின் பின்புறம் மற்றுமொரு தலை வளர்ந்துவிட்டது.

முறாட் பௌஸ் 1990ஆம் ஆண்டு ஒரு மோட்டார் வண்டியால் மோதி வீழ்த்தப்பட்டான். அங்கங்களின் வெளிப்புறத்தே தென்பட்ட காயங்களுக்கு மருத்துவம் பார்த்து பூரண குணம் ஏற்பட்டுவிட்டது. கை கால், உடம்பு முதலான பகுதிகள் எக்ஸ்றேப் படம் பிடிக்கப்பட்டது. எலும்புகளில் எதுவித உடைவுகளோ முறிவுகளோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. தலையில் பின்புறம் சிறிதளவு நோ இருந்தமையினால் அதற்கும் மருந்து தடவப்பட்டது.

பையன் வீட்டுக்கு வந்து சாதாரணமாகப் பள்ளிக்கூடம் சென்று வந்தான். அவ்வப்போது தலை வலிக்கிறது என்று சொல்வான். தைலம் தடவப்பட்டதும் சரியாகிவிடும். இதனை எவரும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

சிறிது சிறிதாக முறாட்டின் தலையின் பின்புறம் அசாதாரண வளர்ச்சி தென்பட்டது. மருத்துவர்கள், 'பயப்படத் தேவையில்லை குணமாகிவிடும்' என்று ஏதோ மாத்திரைகளையும் பூச்சுத் தைலங்களையும் கொடுத்தனுப்பி வந்தனர். ஆனால் இரண்டொரு மாதங்களுள் கட்டி மிக வேகமாக வளரத் தொடங்கிவிட்டது. மருத்துவர்களும் செய்வதறியாது தவித்தனர்.

துருக்கி நாட்டின் எர்ஸுறும் நகர மருத்துவமனையில் முறாட் அனுமதிக்கப்பட்டான். பரிசோதித்த டாக்டர்கள் முறாட்டின் தலையில் புற்றுநோய்க்கிருமிகள் மிக வேகமாகப் பெருகுவதைக் கண்டு திகைப்படைந்தனர். பெருகும் வேகமும் மிக அதிகமாகவிருந்தது.

சத்திரசிகிச்சை செய்து மேலதிக வளர்ச்சியைத் தடுக்கலாம் என்று கருதிய போதும் புற்றுநோய்க் கிருமிகளின் பாதிப்பு அவனுடைய மூளைவரை படர்ந்திருப்பதைக்கண்டு தயங்கினர். பல மருத்துவ நிபுணர்கள் கூடி ஆலோசித்த பின்னர் சத்திரசிகிச்சை இடம் பெற்றது. முறாட் தப்பிப் பிழைத்துக்கொண்டான். இத்தகைய ஒரு சிக்கலான நோய்ப் பாதிப்பை தாங்கள் இதுவரை கண்டதில்லை என்றனர் மருத்துவர்கள்.

முறாட் வீட்டுக்கு அனுப்பப்பட்ட அதே வேகத்தில் மீண்டும் மருத்துவமனைக்கே வந்து சேர்ந்தான். முன்பைவிட கட்டி மிக மிக வேகமாக வளரத் தொடங்கிவிட்டது. இத்தனைக்கும் முறாட் துளி கூடக் கவலைப்பட்டவனாகத் தோன்றவில்லை. எல்லோருடனும் நகைச்சுவையாகப் பேசிச் சிரித்துக்கொண்டே இருப்பானாம்.

அவனுக்கு இரண்டாவது சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

பயந்து பயந்துதான் அதனையும். மருத்துவ நிபுணர்கள் செய்தனர். பயந்தது போல் முறாட்டுக்கு வேறு எதுவித பாதிப்பும் இல்லை. ஆனால் கட்டியின் வளர்ச்சி தடுக்கப்பட முடியவில்லை.

இப்பொழுது துருக்கியிலுள்ள பலதரப்பட்ட நிபுணர்கள் கூடி ஆலோசித்து வருவதாகவும் மூன்றாவது- இறுதி சத்திரசிகிச்சையினைச் செய்து பார்த்துவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலகின் பல செய்தித் தாள்களிலும் இத்தகவல் வெளியாகியுள்ளது. முறாட் இந்த உபாதையிலிருந்து தப்பிப்பிழைக்க வேண்டும் என்று பலரும் பிரார்த்திப்பதாகத் தெரிய வருகிறது. ●

## மதுவும் மருந்தாகும்

## அளவோடு இருந்தால் நலமாகும்!



'குடி குடியைக் கெடுக்கும்' இது முற்றிலும் உண்மையான கூற்றுத்தான். ஆனால் மதுவையும் அளவுடன் பாவித்தால்அதனால் நன்மையும் உண்டு என்பதை மறுக்க முடியாது.

இருப்பினும் மதுவை மருந்தாகப் பாவிக்கத் தொடங்கி அதற்கு அடிமையாகி விடுவதனால்தான் அது குடியைக் கெடுக்கும் கொடியதாகி விடுகிறது.

வைன், பியர் மற்றும் கொக்டெயில் போன்ற மதுசாரம் குறைந்த மதுபானங்களை அளவோடு பயன்படுத்துவது உடலுக்கு நன்மை பயக்கும். பல நோய்கள் உடலைப் பீடிக்காமல் தடுப்பதற்கும் இரத்த ஓட்டத்தை வேகமாக்குவதற்கும் அளவாக மது பாவிப்பது தீமை பயக்காது.

இரத்த நாளங்களில் கொழுப்புச் சேர்வதனால் இரத்தம் இருதயத்துக்குச் செல்லும்பாதை அடைத்து விடுகிறது. இதனால் மாரடைப்பு ஏற்படுகிறது. உவைன், பியர் போன்றவை அளவாக உட்கொள்வதனால் இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பு அகற்றப்படுகிறது.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்று கூறுவார்கள். மித மிஞ்சிக் குடித்தால் அது அபாயகரமானதாகவே இருக்கும். சிலர் குடிக்கத் தொடங்கினால் போதை தலைக்கேறும் வரை குடித்துக் கொண்டே இருப்பார்கள். அளவான குடி போதை தராது. நரம்புகளுக்கும் உடலுக்கும் சுறுசுறுப்பையே தரும். அளவு கூடியவுடன் நரம்புகள் சோர்வடைந்து வலுவிழந்ததும் உடல் இயல்பாக இயங்கும் சக்தியை இழந்துவிடும். உடல் மட்டுமல்லாமல் புத்தியும் தடுமாறி செய்வதறியாத நிலை ஏற்படும்.

மதுபானம் மனிதனுக்குச் செய்யும் நன்மை தீமைகள் பற்றி நீண்ட நெடுங்காலமாகப் பலதரப்பட்ட ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை அறிய, கடந்த 20 ஆண்டுகள் திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகள் நடந்துள்ளன.

அமெரிக்காவிலுள்ள பொஸ்டனின் பிரிஜாம் மற்றும் பெண்களுக்கான மருத்துவமனை ஹாவார்ட் மருத்துவப் பள்ளியுடன் இணைந்து பல ஆய்வுகளை நடத்தியிருக்கிறது. 340 ஆண்களும் பெண்களும் இந்த ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டனர். மதுபானம் பாவிக்காதவர்களுக்கு இருதய நோய் வருவது குறைவு என்பதனை ஆராய்ச்சியாளர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். ஆனால், சிறிய அளவில் இருதயக் கோளாறு உள்ளவர்கள் குறைந்த அளவில், தினசரி மதுசாரம் குறைந்த மதுபானங்களைக் குடித்ததனால் அவர்களுக்குக் குணம் ஏற்பட்டதாகக் கண்டுள்ளனர்.

அதிகமாகக் குடிப்பவர்களுக்கு மாரடைப்பு கூடுதலாக எற்படுகின்றதுஎன்றும் இரத்தக் கொதிப்பு, ஈரலரிப்பு, உள்ளுறுப்புகளில் வீக்கம் போன்ற வியாதிகள் தோன்றுகின்றன என்றும் தெரியவருகிறது.

இந்த முடிவுகள் நியூ இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும் மது அருந்தாமையினால் கிடைக்கும் சுகம் மது அருந்துவதால் ஏற்படும் கோளாறுகளைவிட மேலானது. என்ற குறிப்பினையும் இந்தச் சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆயுளை அதிகரிக்க வேண்டுமா?

## ஜப்பானியர்களைக் கேட்டுப் பாருங்கள்!



நீண்டநாள் உயிர் வாழ வேண்டுமா? அதற்கான பல வழிவகைகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஜப்பான் நாட்டவர்கள்தான் உலகிலேயே நீண்ட காலம் உயிர்வாழ்கின்றனர். அவர்களுடைய இறப்புக்கான சராசரி வயது 79.

ஜப்பான் நாட்டு சுகாதார மற்றும் நல்வாழ்வுத் துறையினர் ஓர் ஆய்வினை மேற்கொண்டனர். 100 வயதுக்கு மேற்பட்ட 3000 பேரைத் தெரிவு செய்தனர். அவர்களுடைய ஆயுள் அதிகரிப்புக்கான இரகசியத்தைக் கேட்டறிந்தனர்.

இவர்களில் ஐந்தில் இரண்டு வீதமானோர் தங்கள் உணவுப் பழக்கமே ஆயுள் விருத்திக்குக் காரணம் என்றனர். அந்தந்த குறிப்பிட்ட நேரத்துக்கு உணவினை அளவாக உட்கொள்வதும், அதுவும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து உண்பதும் தங்களுடைய வாழும் காலத்தை அதிகரிக்க வைக்கிறது என்றனர்.

இவர்களில் கால்வாசிப்பேர் தாங்கள் ஒவ்வொரு நாளும் அளவோடு மதுபானம் பாவிக்கின்றனர் என்று கூறியுள்ளனர்.

இத்தகைய கருத்தைக் கூறியவர்களில் 9 சதவிகிதமானோர் பெண்கள்.

ஆனால் இவர்கள் பெரும்பாலும் தினசரி 180 மி.லீட்டர் அளவு தான் மது அருந்துவார்களாம். அதாவது ஒன்றரை கிளாஸ் உவைனுக்குச் சமமானது.


மூன்றில் ஒரு பங்கினர் தாங்கள் எந்த நிலையிலும் கவலைப்படுவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

43 சதவீதமானோர் தினசரி தேகப் பயிற்சியி லீடுபடுபவர்கள். அதிகமானோருக்கு கால் நடையே சிறந்த தேகப் பயிற்சியாக இருக்கிறது.

ஜப்பானில் 100 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. கடந்த வருடத்தைவிட 650 பேர் 100 வயதைக் கடந்து இன்று 4,802 பேர் சுகதேகிகளாக வாழ்கின்றனர். இதில் ஐந்தில் நான்கு பேர் பெண்கள்.




## கண்பார்வையைச்சீர்படுத்த லேசர் கதிர் சிகிச்சை



வயதாக ஆக ஏனைய உறுப்புகள் தளர்ச்சியடைவதைப் போல் கண் பார்வையும் மங்கத் தொடங்கி விடுகிறது. லேசர் கதிர் வீச்சின் மூலம், மங்கி வரும் பார்வையை மீண்டும் சீர்படுத்த முடியும் என்று கடந்த பல ஆண்டுகளாக இந்தச் சிகிச்சை முறையினைக் கண் மருத்துவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

விழித்திரையில் உள்ள இரத்த நாளங்கள் பழுதடைந்து இரத்தம் கசிவதனால் பார்வையில் தடங்கல் ஏற்படுகிறது. அண்மையில் பால்ரிமோர் நகரில் உள்ள ஹொப்கின்ஸ் வில்மர் கண் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக கண்களுக்குள் உள்ள இரத்த நாளங்கள் பழுதடைவதையும், காயங்கள் ஏற்படுவதையும் லேசர் கதிர்வீச்சின் உதவியுடன் குணப்படுத்த முடியும் என்று தெரிகிறது. கடந்த இரண்டு வருடங்களில் இங்கு இடம்பெற்ற இத்தகைய சிகிச்சைகள் 75 சதவீதம் பலனளித்திருப்பதாக அறிக்கை ஒன்று கூறுகிறது. ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## புதுமைத் தொடர்






# அத்தியாயம் இருபத்தெட்டு

# கண்ணே மதுமிதா






ஜீப்பின் வேகம் அதிகரித்துக்கொண்டிருந்தது. குலாம்ஷாவின் கோபம் ஆக்சிலேட்டரில் பாய்ந்தது.

நகரை விட்டு விலகி புறநகர்பக்கமாய் சென்றுகொண்டிருந்தது ஜீப்.

ஜீப்பின் பின்னால் இருந்த பொலிசாருக்கு குலாம்ஷா ஏன் இந்தத் திசையில் போகிறார் என்பது புதிராக இருந்தது.

குட்டு வெளிப்பட்டு, கையும் களவுமாய் மாட்டுப்பட்டு 'இனி என்னாகுமோ' என்று பயந்துகொண்டிருந்தார் டாக்டர் பாஸ்கரன்.

எங்கே தன்னை கொண்டு செல்கிறார். பொலிஸ் நிலையம் நகரில் இருக்கும் போது, அங்கு செல்லாமல் எங்கே கொண்டு போகிறார்கள் என்பது புரியாமல் கலங்கிக் கொண்டிருந்தார் டாக்டர் பாஸ்கரன்.

தெருவைக் கடந்து நாய் ஒன்று ஓடியது. ஆள் நடமாட்டம் கிடையாது. இரு புறங்களும் புதர்கள் இருந்தன. வலப்புறமாய் புதர்கள் மத்தியில் ஒரு வெளி தெரிந்தது. ஜீப் தெருவில் இருந்து இறங்கி அந்த வெளிக்குள் புகுந்து நின்றது.

குலாம்ஷா சாவி திருப்பி ஜீப்பின் இயக்கம் நிறுத்தினார்.

ஜீப்பைவிட்டு கீழே குதித்தார். முகத்தில் நூறுவீதமான கோபம் இருந்தது.

பின் புறமாய் வந்தவர் உள்ளே இருந்த டாக்டர் பாஸ்கரனை பார்த்து உதட்டிலே ஒரு புன்னகை காட்டினார்.

பாஸ்கரனின் முகம் பயத்தில் வெளிறிப் போய் இருந்தது. குலாம்ஷா சிரிக்க, பாஸ்கரன் மேலும் பயந்தார்.

"டாக்டர் பாஸ்கரன் கீழே இறங்குங்கள்."

பாஸ்கரன் புரியாமல் முழித்தார். ஏன் இறங்கச் சொல்கிறார். என்ன செய்யப் போகிறார்?

"என்ன டாக்டர் பயமாக இருக்கிறதா? இறங்குங்கள். தனியே சில விசயங்கள் பேச வேண்டியிருக்கிறது. பொலிஸ் நிலையத்தில் முடியாது. அதுதான் இங்கே. ம்.... இறங்குங்கள்... பிளீஸ்."

இறங்கினார். தளர்வு தெரிந்தது. முகத்தில் சந்தேகம் இருந்தது.

வாகனம் ஒன்று தெருவில் விரைந்து போகும் சத்தம் கேட்டது. அதுவும் ஓய காற்று வீசும் ஓசை தவிர வேறு சத்தம் கிடையாது.

பின்னால் இருந்து டாக்டர் பாஸ்கரன் இறங்கிய போது அவரோடு இறங்க முயன்ற பொலிஸ்காரர்களை குலாம்ஷா கை உயர்த்தித் தடுத்தார்.

"உள்ளேயே இருங்கள். கூப்பிட்டால் மட்டும் வந்தால் போதும்."

டாக்டர் பாஸ்கரனின் தோளில் கைவைத்து அணைத்தபடி ஜீப்பை விட்டு சற்றுத் தூரம் அழைத்துச் சென்றார் குலாம்ஷா.

பாஸ்கரனின் உடல் நடுக்கம் அவரது தோளில் கைவைத்திருந்த கரம் வழியே குலாம்ஷாவுக்குப் புரிந்தது.

"டாக்டர் பாஸ்கரன் இப்போது நான் சொல்வதைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள். குலாம்ஷா உங்கள் நண்பன்."

குலாம்ஷா சொல்ல பாஸ்கரனின் கண்களில் நம்பிக்கையீனம் தெரிந்தது.

"நம்பவில்லையா டாக்டர்? நீங்கள் பி.எம்.லாலின் நண்பர். நான் பி.எம்.லாலின் கையால் சில இலட்சங்களை வாங்கிக் கொண்டபின்அவரது நண்பன். சோ.... நீங்கள் எனக்கும் நண்பன்."

பாஸ்கரனின் கண்களில் சந்தேகத்தின் வீதம் ஐம்பதாகக் குறைந்தது.

"என்ன பாஸ்கர் இப்போதும் நம்பிக்கை வரவில்லை உங்களுக்கு? நோயாளி வைத்தியரை நம்ப வேண்டும். குற்றவாளி சட்டத்தரணியை நம்பவேண்டும். நீங்களும் இப்போது நோயாளிதான். பொலிஸ் உங்களுக்கு சிகிச்சை தரக் காத்திருக்கிறது பாஸ்கர்."

டாக்டர் பாஸ்கரனின் முகத்தில் பயத்தின் ரேகைகள் எட்டிப்பார்க்க,

"அப்படியானால்... நீ.. நீங்கள்... ரம்யாவை என்னிடமிருந்து....."

இடைமறித்து பாஸ்கரனின் சந்தேகம் புரிந்து,

"எதற்காக காப்பாற்றினீர்கள் என்று கேட்கப் போகிறீர்கள். அப்படித்தானே?"

பாஸ்கரன் ஆம் என்பதாய் சிலோ மோசனில் தலையாட்டினார்.

"அது ஒரு அட்டகாசமான நாடகம். பி.எம்.லாலும் நானும் இணைந்து இயக்கி நடித்த நாடகம்."

குழப்பமாய் குலாம்ஷாவைப் பார்த்தார் பாஸ்கரன்.

"பொலிஸ் உசாராகிவிட்டது டாக்டர். வைத்தியின் சாவு பொலிசை ஓயவைக்க வில்லை. வைத்திக்கு அடுத்ததாக குற்ற உலகின் மன்னனாக முடிசூடப் போவது யார் என்று ஆராய்கிறது. டி.ஐ.ஜி. டென்சிலின் தங்கையை கடத்தியிருப்பதால் அந்த டி.ஐ.ஜி மிருகமாய் அலைகிறார்."

பாஸ்கரனின் முகத்தில் இருந்து பயம் விடைபெறத் தொடங்கியிருந்தது. பி.எம்.லாலின் பணம் குலாம்ஷா வரை பாய்ந்திருக்கிறது. லாலை மனதுக்குள் பாராட்டிக்கொண்டார் பாஸ்கரன்.

"வைத்தியின் வலையில் நானாக விழுந்தது அங்கு புகுந்து வைத்தியை தீர்த்துக்கட்ட. குற்ற உலகு இரண்டாகப் பிரியாமல் முழுதாக தன் கீழ் கொண்டுவர- வைத்தியின் கணக்கை நான் தீர்ப்பதாக ஏற்பாடு. ஆனால் வைத்தி புத்திசாலி. வைத்திலிங்கமாய் நடித்த தனபால் புத்திசாலி."

சொல்லிச் சிரித்தார் குலாம்ஷா. பாஸ்கர் சுவாரசியமான கதை கேட்கும் குழந்தைபோல குலாம்ஷாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"யெஸ், தனபால் புத்திசாலி. விழித்துக் கொண்டான். என்னை நம்பவில்லை. பொலிஸ் துறைக்கு நான் துரோகம் செய்யமாட்டேன் என்று நினைத்தது தவறு. ஆனால் அந்தத் தவறு இருக்கிறதே அதுவே என்னிடமிருந்து அவனைக் காப்பாற்றிவிட்டது. இறுதியில் பி.எம்.லால் நேரடியாக தலைமைப் போட்டியில் குதிக்க குற்ற உலகு இரண்டாகி விட்டது."

குலாம்ஷாவின் முகத்தில் சிறிது கவலை தெரிந்தது.

"இப்போது என்னை என்ன செய்யப் போகிறீர்கள் குலாம்ஷா?"

பாஸ்கரன் கேட்க அவர் முகத்தை யோசனையோடு நோக்கினார் குலாம்ஷா.

"அதுதான் யோசிக்கிறேன் டாக்டர். டி.ஐ.ஜி. டென்சிலின் தங்கையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

"இரண்டுமுறை பி.எம்.லாலின் லைட் ஹவுஸ் இல்லத்தில் பார்த்ததுதான். ஆஸ்மாவில் அவதிப்பட சிகிச்சைக்காக போயிருந்தேன்."

"லைட் ஹவுஸா? நல்லது அங்குதான் பாதுகாப்பு அதிகம். தப்பக் கூடிய வாய்ப்புக்கள் இல்லையல்லவா டாக்டர்?"

"நீங்கள் அங்கு போயிருக்கிறீர்களா?"

"ஒரே ஒரு தடவை மட்டும்."

"இப்போது நீங்கள் போனால்கூட அவ்ளைப் பார்க்க முடியாது குலாம்ஷா."

டாக்டர் பாஸ்கரன் முதல் தடவையாக முகத்தில் புன்னகை காட்டினார்.

"என்ன சொல்கிறீர்கள் டாக்டர்?"

"நிலத்திற்கு கீழே ஓர் இரகசிய அறை இருக்கிறது பாருங்கள். அங்கே வைத்திருக் கிறார்கள். பொலிஸ் உள்ளே புகுந்தால் கூட அந்த அறை தெரியாது."

பாஸ்கரன் சொல்லிவிட்டு மீண்டும் புன்னகைக்க குலாம்ஷாவும் புன்னகை காட்டினார்.

"ஓ.கே பாஸ்கர். இப்போது நீங்கள் தப்பப் போகிறீர்கள். லால் இந்த நேரத்தில் எங்கிருக்கக் கூடும் என்று நினைக்கிறீர்கள்,"

"அநேகமாக குஜாரா தெருவில் உள்ள பங்களாவில் இருக்கலாம். ஏன் கேட்கிறீர்கள் ஷா?"

"நீங்கள் தப்பிச் செல்ல ஒரு திட்டம் தரப்போகிறேன். நீங்கள் இங்கிருந்து தப்பி நேரே லாலிடம் போக வேண்டியது முக்கியம். முகவரி சரியாக தெரியுமா பாஸ்கர்."

"யெஸ். நம்பர் 16 குஜாரா தெரு."

"தாங்யூ வெரிமச். இப்போது திட்டம் ரெடி. உங்களை அழைத்துக்கொண்டு நான் மீண்டும் ஜீப்புக்குச் செல்வேன். ஜீப்பில் ஏறுவது போல பாவனை செய்துவிட்டு நீங்கள் தப்பி ஓடவேண்டும். அந்தப் புதர்கள் உங்களை மறைத்துக்கொள்ளும்."

பாஸ்கரன் யோசிக்க,

"நான் இருக்கிறேன் பாஸ்கர். பயம் வேண்டாம். இப்போது ஒரு சின்ன நாடகம்."

"என்ன நாடகம் ஷா?"

"நான் அடிப்பது போல நடிக்க நீங்கள் துடிப்பது போல நடிக்க வேண்டும்."

"நான் ரெடி."

பாஸ்கரன் இப்போது புதிய உற்சாகத் தோடு இருந்தார். குரலில் புத்துணர்ச்சி வந்திருந்தது. முகத்திலே தெளிவு பிறந்திருந்தது.

குலாம்ஷா பாஸ்கரனின் வயிற்றில் பூட்ஸ் காலால் எட்டி உதைத்தார்.

"துரோகி நீ எல்லாம் ஒரு டாக்டர்."

உரத்துச் சத்தம் போட்டதில் ஜீப்பில் இருந்த பொலிஸ்காரர் எட்டிப் பார்த்தனர். பாஸ்கரன் நிலத்தில் விழுந்து கிடந்து,

"இன்ஸ்பெக்டர் பிளீஸ்"

என்று உரத்த குரலில் கெஞ்சி, "படக்கூடாத இடத்தில் பட்டுத்தொலைக்கப் போகிறது. பார்த்து அடியுங்கள்."

என்றார் மிக குறைந்தளவான குரலில்.

நிலத்தில் இருந்த பாஸ்கரனின் சட்டைக் கொலரில் பிடித்துத் தூக்கி ஜீப்பை நோக்கி தள்ளிக்கொண்டு போனார் குலாம்ஷா.

"ஏறடா...நீயெல்லாம் ஒரு டாக்டர். பிரமாதமாய் கவனிக்க வேண்டும்பார். ஏறு."

ஏறுவதற்கு முயல்வது போல பாஸ்கரன் முன்னே நகர, சட்டைக் கொலரில் இருந்த பிடி விலக்கினார் குலாம்ஷா.

பாஸ்கரன் புரிந்துகொண்டு, துள்ளி விலகி வலப்புறமாய் இருந்த புதரை குறிவைத்து ஓடத்தொடங்கினார்.

ஜீப்பில் இருந்து குதித்து துரத்த வேகமாய் எழுந்த பொலிசாரை கை உயர்த்தித் தடுத்தார் குலாம்ஷா.

பொலிஸ்காரர்கள் திகைப்பும், குழப்பமும் கலந்து குலாம்ஷாவைப் பார்த்தார்கள்.

குலாம்ஷாவின் இடது கரம் நிதானமாய் இடுப்புக்குச் சென்று அங்கிருந்த பிஸ்டலை எடுத்தது.

பாஸ்கரன் ஓடிக்கொண்டிருந்தார். இன்னும் சில விநாடிகள்தான். புதருக்குள் மறைந்து விரைந்து தப்பிவிடலாம்.

குலாம்ஷாவின் பிஸ்டல் உயர்ந்து பாஸ்கரனை குறிபார்த்தது.

மறு நொடியே ரவைகளுக்கு விடை கொடுத்தது.

டுமீல்...டுமீல்...டுமீல்....

மூன்று ரவைகளும் மிகச் சரியாகப் போய் பாஸ்கரனின் உடலில் ஏறி இரத்தம் வெளியே வர துளைகள் போட்டன.

புதருக்கு அருகே குப்புற விழுந்து கிடந்தார் பாஸ்கரன்.

பிஸ்டலை இடுப்பில் மீண்டும் இருக்க வைத்துவிட்டு, ஜீப்பில் முகம் விறைத்துப் போய் இருந்த பொலிசாரைத் திரும்பிப் பார்த்தார் குலாம்ஷா.

"கொடிய குற்றவாளி. தாக்கிவிட்டுத் தப்பி ஓடும் போது தற்காப்புக்கு திருப்பித் தாக்குவது அவசியப்பட்டுவிட்டது. தட்ஸ்.ஓ.கே."

முகத்தில் திருப்தி தெரிந்தது.

ஜீப்பில் இருந்த வோக்கிடோக்கியில் செய்தி சொல்லி பிணத்தை கொண்டு போவதற்கான ஏற்பாடுகள் செய்துவிட்டு, அடுத்த திட்டம் மனதில் வரைந்தார் குலாம்ஷா.

எதிரிகளுக்குபொறி கலங்கும் பிரமாதமான திட்டம் மனதில் விரிய குலாம்ஷாவின் முகத்தில் ஒரு புன்னகை வந்து அமர்ந்து கொண்டது.

■

லால்-பி.எம்.லால் மெசின் கண்ணோடு திரும்பிய வேகத்தில் அவனை நோக்கி புயல்போலப் பாய்ந்தாள் மதுமிதா.

லாலின் உயிர் நிலையில் மதுமிதாவின் இடது கால் எழுந்து விரைந்து வழங்கிய வேகமான உதையில் பின்புறமாய் அலுமாரியில் சரிந்தான்.

மெசின்கண் கரத்தால் நழுவி கீழே விழ லால் மயக்கமானான்.

"மது நீ ஒரு ஆணாகப் பிறந்திருக்க வேண்டியவள்."

சொல்லியபடியே மதுமிதாவின் அருகில் வந்து அவள் தோள் தொட்டு ஆதரவாய் அணைத்தார்.

"அப்பா"

என்றாள் மதுமிதா. விழிகளில் நிறைந்து கன்னங்கள் மீது கோடாக இறங்கியது கண்ணீர்.

"இத்தனை நாள் எங்கே இருந்தீர்கள் அப்பா?"

"அது ஒரு பெரிய கதை மது. உன்னை விட்டு பிரிந்திருந்த போதும், என் பார்வையில் இருந்து நீ விலகவில்லையம்மா."

குரல் தழுதழுக்க மதுமிதாவின் தலை தடவினார்.

"முதலில் அந்த போட்டோக்களையும் நெக்கடிவ்களையும் எடு மது."

அலுமாரியில் தேட ஒரு பச்சை நிற கவர் தெரிந்தது.

வெளியே எடுத்து பிரித்து உதற இரண்டு போட்டோக்களும் சிறிய கவரும் வந்து விழுந்தன.

போட்டோக்கள் மீது விழிகள் நிலைக்க மதுமிதா திகைத்துப் போய் தந்தையை நிமிர்ந்து பார்த்தாள்.

வைத்திலிங்கம் போட்டோக்களை எடுக்க தரை நோக்கி குனிந்த போது,

"பொறுங்கள் மிஸ்டர் வைத்திலங்கம். அவளவு சுலபமாக உங்கள் வசம் கிடைக்க விட்டுவிடமாட்டோம்."

அதிர்ந்து, நிமிர்ந்து திரும்ப, கதவின் வாசல் திறந்திருக்க அங்கே நந்தகோபால் நின்று கொடூரமாய் புன்னகைத்தார்.

நந்தகோபாலின் இரு புறமும் இரண்டு தடியர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

இரண்டு பேரும் பிஸ்டல் வைத்திருந் தார்கள். மதுமிதாவை நோக்கி பிஸ்டலை நீட்டிக்கொண்டிருந்தார்கள். நந்தகோபால் கொடூரமான புன்னகை மாறாமல் பேசினார்.

"வைத்திலிங்கம் உன் பிள்ளைகள் இரண்டையும் கில்லாடிகளாகத்தான் வளர்த்திருக்கிறாய்."

வைத்திலிங்கம் முகத்தில் கோபம் குடியேறியது.

"கோபப்படாதே வைத்தி. அப்படி இப்படி துள்ளினாய் என்று வை. உன் செல்ல மகள் மீது டுமீல்...டுமீல்... சரி- அந்த துப்பாக்கியை எறிந்துவிடு. அட... எறியப்பா."

மதுமிதாவை நோக்கி குறி வைக்கப் பட்டிருந்த தடியர்களின் பிஸ்டல் வைத்தி லிங்கத்தை கட்டுப்பட வைத்தது. கீழே போட்டார்.

"குட்...தட்ஸ் குட். உன் மகன் பஸ்டினை தேடிக் கண்டுபிடித்து, பொறுமையாய் பயிற்றுவித்து எங்கள் கூட்டத்தோடு இயங்க வைத்து நீ போட்ட திட்டம் இருக்கிறதே... அற்புதம்! வைத்தி நீ விவேகமான எதிரி. சரி. இப்போது பஸ்டின் எங்கே தெரியுமா வைத்தி?"

நந்தகோபால் கேட்க வைத்திலிங்கத்தின் முகத்தில் கவலை தெரிந்தது. பதில் சொல்லாமல் நந்தகோபாலை கேள்வியாய் நோக்கினார்.

நந்தகோபால் இடிபோல சிரித்தார்.

"என் அனுபவம் என்ன. அவன் அனுபவம் என்ன! அவன் வயதைக் கணக்கிட்டால்கூட என் அனுபவத்திற்கு உள்ள வயதில் பாதி கூட தேறாது. அவனைப்போய் அர்ஜுனன் ஆக்கி, அம்பு வில்லுக்குப் பதிலாக பிஸ்டல் கொடுத்து அனுப்பினாய் பார். பிழை செய்துவிட்டாய் வைத்தி."

வைத்திலிங்கம் உள்ளே உடைந்து போனார். பஸ்டினுக்கு என்ன நடந்ததோ என்று துடித்துப்போனார்.

"பஸ்டினை..பஸ்டினை நீ.."

"என்ன செய்தாய் என்று கேட்கிறாயா வைத்தி? நான் ஒன்றும் செய்யவில்லையப்பா. என்னதான் இருந்தாலும் நான் உனது குடும்ப டாக்டர். உன் முன்னாள் நண்பன். நண்பனின் மகனை என் கையால் கொல்ல மனம் வருமோ?"

நந்தகோபால் சொல்ல, வைத்திலிங்கம் நிம்மதியாய் பெருமூச்சு விட்டார்.

"என்கையால் கொல்வது தானே துரோகம். அதிலும் அவன் என்னைக் கொல்ல துடித்துக்கொண்டிருந்தான். ஏதோ என் நல்ல நேரம். இதோ நிற்கிறான் பார் சீசர். அந்த நேரம் பார்த்து அங்கு வந்து ஒரு காரியம் செய்துவிட்டான். பெரிதாக ஒன்று மில்லை. பஸ்டினை சுட்டுவிட்டானப்பா..."

வைத்திலிங்கம் ஆடிப் போனார். மதுமிதாவின் உள்ளே சோகம் ஒரு பாறாங்கல்லாய் அழுத்தியது.

"சரி வைத்தி இப்போது எனக்கொரு கேள்வி. நீ ஏன் உயிரோடு இருக்க வேண்டும். செத்தவனாகவே இருந்துவிடேன்."

சொல்லிவிட்டு தன் அருகில் நின்ற தடியர்களில் ஒருவனைப் பார்த்து

"சீசர்...வைத்தியை பக்குவமாய் அனுப்பும் பொறுப்பு உனக்கு. என்ன சந்தோசம் தானே?"

சீசர் வெறிநாய் போல பல்லைக் காட்டினான்.

மதுமிதாவை நோக்கி நீட்டியிருந்த பிஸ்டலை திருப்பி வைத்திலிங்கத்தை குறி பார்த்தான்.

மறு நொடியே

'யம்மா'

என்று அலறி முன்புறமாய் கவிழ்ந்து விழுந்தான்.

அதிர்ச்சியடைந்து நந்தகோபால் தன் மறுபுறம் நின்ற தடியனைப் பார்க்க அவன் தரை நோக்கி கவிழ்ந்து கொண்டிருந்தான்.

பின்னால் இருந்து சிரிப்பொலி எழுந்தது.

நந்தகோபால் பயத்தில் உறைந்து திரும்பிப்பார்த்தார்.

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எம். ஞானசீலன்
வயது: 25
முகவரி: விவசாயத் திணைக்களம் முல்லைத்தீவு.
பொழுதுபோக்கு: ஆக்கங்கள் எழுதுதல், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: வி.பி. லோஜினி
வயது: 16
முகவரி: சாகாம ரோட், அக்கரைப்பற்று-8.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: ஏ.எல்.ஏ. சிராஜ் முகமட்
வயது: 20
முகவரி: 28/7சீ, டெரின்ஸ்டன் டீ சில்வா மாவத்தை, கொலன்னாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: எம்.டி.எம். பஹ்மி
வயது: 21
முகவரி: 41, டாக்டர் சேக் பாஸி மாவத்த, தர்கா நகர்.
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல், உதைபந்து விளையாடுதல்.

பெயர்: எஸ்.ஆர். ராஜ
வயது: 24
முகவரி: 'கலக்சி' 64, பஸ்நிலைய கட்டடத்தொகுதி, வவுனியா.
பொழுதுபோக்கு: கதை,கவிதை எழுதுதல், பேனா நண்பர் தொடர்பு, புத்தகம் படித்தல்.

பெயர்: எஃப். இதயமலர்
வயது: 28
முகவரி: 95, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: கலை சம்பந்தமான தொடர்புகள், பத்திரிகை, தொலைக்காட்சி

பெயர்: எஸ்.எம்.ஏ. காதர்
வயது: 19
முகவரி: 226, முஸ்லிம் பிளேஸ், தெல்தோட்டை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: நிஸ்னா நிஸார்
வயது: 18
முகவரி: 83/5, உடையார் மாவத்த, தெலியாகொன்ன, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம்.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# மகளுக்காக...!

-முகில் வண்ணன்-



"இளவரசி... இளவரசி...!" என்று மாதவன் அழைத்தார். ஆனால் பதில் இல்லை. மௌனமே நிலவியது.

மாதவன் இளவரசியின் தந்தை. அழைத்தும் அவள் பதில் கொடுக்காததால் மாடிப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தார்.

ராணிக்கும் மாதவனுக்கும் ஒரே ஒரு மகள்தான் இளவரசி. வேறு மகனோ மகளோ இல்லாததால் அந்த 'ராணி இல்லாததால் அந்த' ராணி இல்லத்'துக்கு ராணியாக விளங்கியவள் இளவரசிதான். அவள் பெயரில் மட்டுமல்ல, வீட்டில் அவள் இளவரசியாகவே வளர்ந்தாள். அவளது வேலைகளுக்கென்றே வேலைக் காரிகள் இருவர். அவர்களில் ஒருத்தி- சரோஜா அவளுக்குத் தோழியாக இருந்தாள். அவள் நியமிக்கப்பட்டது இளவரசி வயதுக்கு வந்த பின்னர்-துணையாக இருப்பதற்கு.

இளவரசி சந்தோசமாக- எப்போதும் கலகலப்பாக இருந்ததில் அந்த வீட்டில் வேறு குழந்தை இல்லையே என்ற கவலை பெற்றோர்களிடம் இருந்து விடைபெற்று விட்டது. ஆணாகப் பெண்ணாக எல்லாம் அவளையே அலங்கரித்துப் பார்த்து மகிழ்ந்தனர். ஏக்கம் தீர்ந்து வாழ்ந்தனர்.

அவள் வாய் திறந்தால் அது அந்த வீட்டில் நடக்கும். அவள் சொல்லை சில வேளைகளில் மீறிப் பேசுவது தாய் மட்டும்தான். ஆனாலும் அப்பாவின் 'வீட்டோ' அதிகாரத்தினால் அதையும் வென்று விடுவாள் இளவரசி.

"என்னங்க நீங்க இளவரசிக்கு இப்படிச் செல்லம் கொடுத்து வளர்க்கிறீங்க. அவள் என்ன எப்போதும் நம்மோட இருக்கப் போறாளா? வாற புருஷன் எப்படியோ? கொஞ்சம் கட்டுப்பாடாக வளர்ந்தால் என்ன?" என்று கேட்பாள் ராணி.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்கு உள்ளது ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று. நமது உழைப்பு உடமை எல்லாம் அவளுக்குத்தானே! எவன் வந்தாலும் அவர்களுக்குத்தானே இதெல்லாம். ஒரு டாக்டரோ என்ஜினியரோ வந்து அவளைக் கஷ்டப்படுத்தவா போறான்?"

"வாறவன் 'ஆம்பிள்ளை'யாகத்தான் இருப்பான். உங்களைப் போல செல்லம் கொடுக்க மாட்டான். அதுதான் நீங்க அவளுக்கு அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து அவளுடைய வாழ்க்கையை நாமே குட்டிச் சுவராக்கக் கூடாது. காசு பணம் இருந்தாப் போதாது. நல்ல பழக்க வழக்கங்கள், குணம் இருக்க வேண்டும். ஆணுக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் குடும்பப் பெண்ணின் கடமை!"

"என்னிடம் எதுக்குச் சொல்கிறாய்? இந்த உபதேசத்தை உன்னுடைய மகளுக்கே சொல்லு.."

"நான் சொல்றதைக் கேட்டால் தானே! நான் கண்டிப்பாக இருக்கிறதால என்னிடம் ஒட்ட மாட்டாள். நீங்கள் செல்லம் கொடுத்துப் பின்னுக்குக் கஷ்டப்படப் போறியள். அதைத்தான் சொல்ல வாறன்."

"அப்பா கண்டிப்பா இருந்தா அம்மா அரவணைக்க வேண்டும். நீ கண்டிப்பாக இருக்கிறபடியால் நான் செல்லம் கொடுக்கிறன். இருவரும் கண்டிப்பாக இருந்தால் குழந்தையை வளர்க்க முடியாது. கடும் முறுக்கு தெறித்து விடும் என்று தெரியாதா?"

"எண்ணமோ நீங்களாச்சு மகளாச்சு."

••

இப்போது சில நாட்களாக அந்த வீடு நிசப்தம் குடிகொண்டிருந்தது. இளவரசி மௌனித்து விட்டாள். வீடு களை இழந்து கிடந்தது. தாய்க்கும் தகப்பனுக்கும் உணவு கூடச் செல்ல வில்லை. வேலைக் காரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். சத்தம் போட்டுப் பேசவே பயமாக இருந்தது அவர்களுக்கு. இளவரசியின் தோழியால் அவளைச் சமாதானப்படுத்தமுடியவில்லை. தனது அறையும் கட்டிலும் தலை யணையுமாகக் கிடந்தாள் இளவரசி.

அன்று நடந்த அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அந்த வீடு அமைதி அடைந்து சோபை இழந்துவிட்டது.

மாத்வன் ஒரு என்ஜியர். அவரிடம் பலதரப்பட்டவர்கள் வேலை விடயமாக வருவதுண்டு. அதில் இளம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கேசவனும் ஒருவன். வெள்ளை வெளேரென்ற முகத்தில் ஒரு கூடைச் சுருள் சுருளாக கேசத்தைக் கொட்டிக் கொண்டிருந்தவனை முதன் முதல் அப்பா இல்லாத வேளையில் தேடி வந்த போதுதான் சந்தித்தாள் இளவரசி. அன்றே அவளது மனம் பறிபோய் விட்டது.ஆனால் அது அவனுக்குத் தெரியாது.

ஒரு மாதத்திற்குப் பின்னர் அவன் அறிந்த போது உள்ளத்தில் பறவைகள் சிறகடித்துப் பறந்தாலும், மனம் லாலா பாட நினைத்தாலும், அவர்கள் நிலையை எண்ணிப் பயந்த கேசவன் "வேண்டாம் இளவரசி உனது தரத்துக்குத் தகுந்த மாப்பிள்ளையை அம்மா அப்பா பார்த்துச் செய்வார்கள். அதுவரை அவசரப்படாதே. 'சேர்' இதை அறிந்தால் எனது தொழிலுக்கே ஆபத்தாய் முடியும். பிளீஸ்....." என்றான் கேசவன்.

"நீங்க "ஏன் பயந்து நடுங்கிறீங்க? நான்தானே உங்களை விரும்பினேன். எனது விருப்பத்தை அப்பா தட்டமாட்டார். நான் விரும்பி விட்டேன் என்றால் அவர் செய்து வைப்பார். உங்கள் சம்மதம் தான் எனக்குத் தேவை. மிச்சத்தை நான் பார்த்துக்கொள்கிறேன்."

அவன் என்ன சொன்னபோதும் அவள் கேட்கவே இல்லை. காதல் என்பது இதுதானோ?

"ஓ.கே உங்கள் விருப்பப்படி நான் உங்களை அடிக்கடி சந்திக்க மாட்டேன். அப்பாவிடம் சம்மதம் பெற்றபின்பு சந்திக்கிறேன். உங்களை எந்த விதத்திலும் மாட்டி வைக்க மாட்டேன். ப்ரமிஸ்" என்று கூறிச் சென்றான்.

பாலும் வெறுத்து படுக்கையும் கசந்ததை தோழி தாயிடம் சொல்ல, தாய் தகப்பனிடம் சொல்ல-சங்ககாலத்தில் இருந்தே காதல் நோய் என்று தெரிந்து கொண்டார்கள் அல்லவா?

ஆனால் அவர்கள் தங்கள் மகள் தனக்குகந்த கணவனைத் தேடிக்கொண்டாள் என்று உணரவில்லை. தோழியிடம் கேட்கவும் இல்லை. நோய் தீர வழி திருமண ஏற்பாட்டைச் செய்வதே என்று எண்ணிச் செயற்பட்டனர்.

மாவட்டக் காரியாலயத்தில் ஓர்இளம் என்ஜினியர் இருந்தார். அவரில் மாதவன் ஒரு கண்வைத்து இருந்தார். மகளின் நிலையை அறிந்ததும் தந்தை புறப்பட்டு விட்டார்.

அறிந்த தோழி வந்து இளவரசியிடம் கூறினாள்.

'என்னடி?' என்று படுக்கையில் தீப்பற்றியது போல் துடித்து எழும்பினாள் இளவரசி.

அவள் சொன்னாள்.

"நீயாவது சொல்லி இருக்கலாமேடி?"

"என்னத்தைச் சொல்ல? நான்தான் எத்தனை நாட்களாகக் கேட்கிறேன். நீங்கள் பதில் சொல்லவில்லையே!"

"அப்பா வரட்டும்... நானே பேசிக்கிறேன்." என்று எழுந்தாள். முகம் அலம்பி ஆயத்தமானாள்.

"உள்ளங்கவர்ந்தவன் யாரடி?"

'போடி!' என்று நாணத்துடன் கீழிறங்கி ஓடிவிட்டாள்.

அப்பா மாலை வந்த போது முகம் வாடியிருந்தது. மகிழ்ச்சி அவளுக்கு. கவலை அவருக்கு.

'அப்பா' என்று ஓடிவந்தாள்.

"டோன்ற் வொரி, மகள். அவன் இல்லாட்டி மாப்பிள்ளையா இல்லை? அவன் மாமன் மகளுக்கு சம்மதம் சொல்லிவிட்டானாம் என்று சொன்னான். ஓ.கே. வேறு மாப்பிள்ளை பார்க்கலாம்." என்று கூறியவாறு சோபாவில் அமர்ந்தார். தாயும் சேர்ந்து கொண்டாள்.

"அப்பா.... " என்றாள் இளவரசி.

"என்னம்மா?" என்றார் தேனீர்க் கோப்பைகளை வைத்தபடி?

"அப்பா உங்கள் கந்தோரில் ஒருவர்.... வெள்ளையாய், சுருண்ட கேசமுமாய்..."

"ஓ கேசவனைப் பற்றியா சொல்கிறாய்? அவன் கஷ்டமான குடும்பத்தில் பிறந்தவன். இன்னும் படிக்க இருக்கிறது. இப்போது தான் 'கிளாஸ் ரூ'வுக்கு வந்து இருக்கிறான். இன்னும் ஐந்து வருடமாவது செல்லும் என்ஜினியராக..."

"வேறெதும் குறைபாடுகள்..."

"நோ நத்திங், நல்ல கீழ்ப்படிவான பையன்......"

"அப்பா நான் அவரை...."

"இளவரசி என்ன சொல்லுகிறாய்?" என்று தாயும் தகப்பனும் ஏககாலத்தில் கேட்டனர்.

இளவரசி எழுந்து ஓடிவிட்டாள் தன்அறைக்கு. வியப்பால் விறைத்து நின்றனர் தாய்தந்தையர். தங்கள் அன்பு மேலீட்டால் தங்கள் பிள்ளைகள் சின்னஞ்சிறுசுகள். அவர்களுக்கு ஒன்றும் தெரியாது -தாங்கள் கீறிய கோட்டைத் தாண்ட மாட்டார்கள் என்று பெரும்பாலான பெற்றோர் எண்ணுவது போலவே இளவரசியின் பெற்றோரும் எண்ணிக் கொண்டிருந்தனர்.

இப்போது அவள் தொட்டுக்காட்டியதும் வியந்துபோய் - அதிர்ந்து போய் நின்றனர். எண்ணம் விரிந்தது. அவள் மனத்திலும் கேசவன் சலனத்தை ஏற்படுத்திவிட்டானா?

வயதுக்கு வந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு அவர்களைச் சின்னஞ்சிறுசுகள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பெற்றோரை என்ன சொல்வது? வயதுக்கு வந்ததுமே வாழ்க்கைக்குத்தரம் பெற்றுவிடும் சிறுசுகளை பெற்றோர் உணரத் தலைப் படுவதில்லை. தாங்களும் அந்தப் பருவத்தைக் கடந்து வந்ததையும் மறந்து விடலாமா?

"எனக்குக் கல்யாணம் முடித்து வைக்க விருப்பம் என்றால் கேசவனைக் கேட்டு முடிக்கட்டும். வேறு எவரும் வேண்டாம்." என்று தோழிமூலம் செய்தி கிடைத்ததும் இருவருக்கும் முகத்தில் ஈயாடவில்லை.

அன்றிரவு சாப்பாட்டு மேசையில் பேச்சுநடந்தது. இளவரசி மௌனித்திருந்தாள். 'நாங்கள் பேசுவதையே முடிக்க வேண்டும்' என்ற தீர்மானம் அவர்கள் பேச்சில் தொனித்தது.

இடையிலே கையைக் கழுவிக்கொண்டு எழுந்தாள் இளவரசி. "அம்மா அப்பா... என்மீது உண்மையான அன்பு இருந்தா நான் சொல்வதைக் கேளுங்க. உங்களுடைய விருப்பத்திற்கு பொம்மையாக நான் கொலிவில் இருப்பது போல் வாழ விரும்ப வில்லை. எனது நல்வாழ்க்கையில் உங்களுக்கும் அக்கறை இருக்கிறது எனக்குத் தெரியும். ஆகவே நான் சொல்வதைக் கேட்பீங்க என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் காதலிக்கல்ல. கூடிப் பேசல்ல. கடிதம் எழுதல்ல. கண்ட இடத்தில சுற்றல்ல. அவரை விரும்புறன். நீங்கள் விரும்பினா பேசிச் செய்யுங்க. விரும்பல்ல என்றால் விட்டிடுங்க. என்னையும் விட்டிடுங்க. அதுக்காக வேறு எங்கையும் என்னைக் கொண்டு மாட்ட வேண்டும் என்று இல்ல. மனம் விரும்பியதைச் சொன்னேன். இனி உங்கள் விருப்பம்....." என்று கூறிவிட்டுப் புயல்போல் அறைக்குச் சென்றவள்தான்.

அந்த வீடு இப்போது பேய் குடிபுகுந்த மாதிரி இருந்தது. அதில் இயந்திரமாய்ச் சில மனிதர்கள் உலாவினார்கள். தாயும் தகப்பனும் மாறி மாறிச் சமாதானம் சொல்லிப்பார்த்தார்கள். எதுவும் அவளிடம் எடுபடவே இல்லை. மாறாக வெகுண்டு எழுந்தாள்.

"நானென்ன உங்களிடம் கல்யாணமா கேட்டன்? என்ஜினியர், டாக்டர் என்றாத் தானா அவர் எனக்கு மாப்பிள்ளையாக இருக்க முடியும்? அவரை முடிச்சுத் தரவில்லை என்று ஓலம் வைத்தேனா? தற்கொலை செய்கிறேனா? இல்லை வீட்டைவிட்டு ஓடிவிடுவேனா? உங்கள் கௌரவத்தைக் குறைக்கும் எதையும் செய்யமாட்டன்.

"என்னை நிம்மதியாக இருக்க விட்டாப் போதும். பிளீஸ் எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்னைச் சும்மா இருக்க விடுங்க." என்று கத்தினாள். நடைப் பிணமானார்கள் அவர்கள்.

சில நாட்களின் பின் ஒருநாள் அப்பா அவள் அறைக்குச் சென்று படுக்கையில் கிடந்தவளின் தலையைத் தடவினார். அவள் தலையைத் தூக்கி அப்பாவின் மடியில் வைத்துக்கொண்டு அழுதாள். சிறிது நேரத்தில்...

"அப்பா உங்கள் ஆசையை அறிவேன் அப்பா. அதை நிறேவேற்றக் காத்திருக் கிறேன். உங்கள் மாப்பிள்ளை ஒரு என்ஜினியராக இருக்க வேண்டும்தானே! அவர் என்ஜினியராகும்வரை ஐந்து வருடமென்ன, அதற்கு மேலும் நான் காத்திருப்பேன், அப்பாவின் ஆசையை நிறைவேற்ற... இதற்கு மேலும் என்னை நிர்பந்திக்காதீர்கள் அப்பா பிளீஸ்..." என்றாள்.

அவள் பேச ஆரம்பிக்க மகிழ்ந்த மனம், பின்னர் இடிந்துபோய் இறங்கினார் தந்தை.

அன்றிரவு அவர் தூக்கத்தில் விழித்த போது பூதம் மாதிரி ஒரு கேள்வி அவர் முன் நின்றது.

'எனக்காக என் மகள் ஐந்து வருடம் காத்துக்கொண்டிருக்கவும் தயார் என்றால்... நான் அவளுக்காக அவள் விரும்புபவனுக்காக விட்டுக்கொடுத்தால் என்ன?...' என்பதுதான் அது. பலமுறை அவரது மனதை சம்மட்டி கொண்டு அடித்தது போல் இருந்தது.

ஆமாம் அதை மனைவியிடமும் சொல்லாமல் செயற்படுத்த முனைந்தார்.

அதுதான் இப்போது மாடிப்படி ஏறிக் கொண்டிருந்தார். அவள் சலனமில்லாமல் புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள்.

"இளவரசி மாலை மாப்பிள்ளை நம் வீட்டுக்கு வருகிறார்! 'றெடி'யாக இரு..." என்று கூறிவிட்டு அறையை விட்டு மனைவியிடம் வருகிறார்.

இளவரசி சற்றுத் தாமதித்து அறை வாசலுக்கு ஓடி வருகிறாள். திருப்பிப் பார்த்தவர் "வேறுயாருமில்லை... கேசவன் தான்." என்று கூறிவிட்டு நடக்கிறார் அவர். புத்தகம் எங்கோ போய் விழக் கட்டிலில் 'தொப்'பென்று விழுகிறாள் இளவரசி.

'அப்பா என்றால் அப்பாதான்' என்று ஆனந்திக்கிறது அவள் உள்ளம்.

(யாவும் கற்பனை)

---

**வித்தியாசமான முரசுக்கு வித்தியாசமான ஒரு குட்டிக்கதை**

# 'தேவி நீ எனக்குரியவள்'

-ரமேஷ் கண்ணன்-



என் இதயம் என்றுமில்லாது இன்று வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. கடிகாரத்தைப் பார்க்கின்றேன். சரியாக காலை 9 மணி. மனதிற்குள் ஒரே குழப்பம். 'என்ன வழமையாக 9 மணிக்கெல்லாம் கிளம்பி விடுவாளே.. இன்று ஏன் இவ்வளவு சுணக்கம்..?' என் பதட்டம் இன்னும் அதிகரிக்க, கால்கள் குறுக்கும், நெடுக்குமாக இயங்கிக்கொண்டிருந்தன.ஆயினும் என் பார்வையைவிட்டு அந்த வீடு விலகவில்லை.

இன்று நேற்று அல்ல, சுமார் ஒரு வருடமாகவே அந்த வீட்டை நான் சுற்றி அலைகின்றேன். ஆனால் தேவி என்னை ஒரு முறையேனும் பார்த்தது கிடையாது. தேவி.. அவள்தான் என் கனவுக் கன்னி. அவளைக் கண்ட நாள் இன்னும் என் மனதில் பசுமையாக பதிந்திருந்தது.., அவள் கண்களின் சுழற்சியில் சிக்குண்டவன்தான் நான்.

அடர்ந்த கூந்தல், கௌவை இதழ், அரிசிப் பற்கள், சிவந்த கன்னங்கள் அப்பப்பா.. மொத்தத்தில் அவள் ஊர்வசி. என்று அவளைப் பர்த்தேனோ, அன்றிலிருந்து அப்படி ஒரு மோகம் எனக்கு. என்றாவது ஒருநாள் அவள் எனக்குச் சொந்தமாவாள்.....

என் நினைவுகளை மணியத்தின் கார் இரைச்சல் கலைக்கின்றனது. நான் உசாராகிக் கொள்கிறேன். நெடுநாட்களாக போட்ட திட்டத்தை மீண்டும் ஒருமுறை மீட்டுப் பார்க்கின்றேன். மணியம் புறப்படும்போது அவனது மனைவியும், தேவியும் அவனை வழியனுப்ப வருவார்கள். அவன் வீட்டை விட்டுச் சென்றதும் அவன் மனைவி வீட்டுக்குள் சென்றுவிடுவாள், தேவி தோட்டத்தில் உலா வருவாள். அவ்வேளை என் கைவரிசை காட்டிவிட வேண்டும்.

நெடுநாள் திட்டம் இன்று நிறைவேறப் போகின்றது. என் மனதில் இரட்டிப்புச் சந்தோசம். எனக்குள் ஓர் அசுர பலம்.

கார் வீட்டைவிட்டு நகர்ந்தது.. வழமை போல் தேவி வாசல்வரை வந்து மணியத்தை சிரித்த முகத்துடன் வழிய னுப்பி விட்டு தோட்டப் பக்கம் செல்கின்றாள்.

என் உதடுகள் முணுமுணுத்தன. "தேவி நீ என்குரியவள்.." கால்கள் முன்னேற அந்த வீட்டு சுற்றுமதிலை நெருங்கிக் கொண்டேன். ஒருமுறை நாலாபக்கமும் எனது பார்வை நோட்டமிட்டது. ஒருவரும் இல்லை. மனதில் இன்னும் தைரியத்தை செயற்கையாக வரவழைத்துக் கொள்கிறேன். ஒரே பாய்ச்சல். எட்டடிச்சுவரில் எப்படி ஏறிக்கொண்டேனோ எனக்குத் தெரியாது. மெதுவாக வீட்டு வளவுக்குள் குதித்து பதுங்கிக் கொள்கின்றேன்.

இதயம் "படார்.. படார்.." என ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. பதுங்கியபடி என் பார்வையை தேவியின் மேல் ஓட விடுகின்றேன். தேவி ரதம் போன்று அசைந்த வண்ணம் என்னை நெருங்கிக் கொண்டிருந்தாள். நான் என் சட்டைப் பைக்குள் கையைவிட்டு; ஏற்கெனவே திட்டமிட்டபடி கையுறைகளைப் போட்டுக் கொள்கின்றேன்.

அவள் என்னை நெருங்கி விட்டாள். மனம் பதறிக்கொண்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். மனதிற்குள் "1...2...3" ஒரே பாய்ச்சல். லாவகமாய் அவளை என் பிடிக்குள் மடக்கிக் கொண்டேன். அவள் திணறத் தொடங்கினாள். என் பிடி இன்னும் இறுகியது. அவளின் நகங்கள் என் உடம்பைப் பதம்பார்த்தன. ஆனாலும் வலி தெரிய வில்லை. அவள் கதற எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றன.

தாமதியாது அவளைத் தூக்கிக் கொண்டு நான் வந்த திசையை நோக்கி ஓடுகின்றேன். அந்த எட்டடிச் சுவர் என் வேகத்தை குறைத்தது. நான் தடுமாறிப் போகின்றேன். தேவியின் அரிசிப்பற்கள் அவ்வேளை என் கரத்தைப் பதம் பார்க்க, என் கரம் அவள் வாயைவிட்டு விலகிக் கொள்கின்றது. அந்தச் சொற்ப இடைவெளிக்குள் அவள் "வள்..வள்..வள்.." உரக்கக் கத்துகின்றாள்... நல்ல வேளை அவள் சத்தம் வெளிப்படுமுன், நான் அந்த எட்டடிச் சுவரை தாண்டிவிட்டேன்.

மனதிற்குள் ஆயிரமாயிரம் சந்தோஷம் அவளைக் கடத்தியதில். நெடுநாள் கனவு பலித்துவிட்டது. "தேவி நீ எனக்குரியவள்.. எனக்குரியவள்" நான் வாய் விட்டுக் கத்துகின்றேன்.



# வெண்ணிலவு நீ எனக்கு

-வாழையூர் ஸ்ரீவரணி-

சிறுகதை

**கூடிப்பிரியாமலே-ஓரி ராவெல்லாம்**
**கொஞ்சிக் குலவி யங்கே,**
**ஆடி விளையாடியே- உன்றன் மேனியை**
**ஆயிரங் கோடி முறை**
**நாடித் தழுவி மனக்- குறை தீர்ந்து நான்**
**நல்ல களி யெய்தியே**
**பாடிப் பரவசமாய்- நிற்கவே தவம்**
**பண்ணிய தில்லை யடி!**

கையிலிருந்த தினமுரசை புரட்டிக் கொண்டிருந்த சசியின் கண்கள் ஓரிடத்தில் நிலைத்தாய் நின்றது.

'திருமண நன்றி நவிலல்' எனத் தலைப்பிட்டிருந்த அந்த விளம்பரத்தில் இருந்த மணமகளின் முகம் பார்த்து அதிர்ந்தான்.

'மதுவந்தியல்லவா இவள்?......'

நிச்சயப்படுத்த விளம்பரத்தில் பெயர் தேடினான். 'மதுவந்தி' என்ற பெயருடன், கூடவே விலாசம் கனடா என்றிருக்க, நெஞ்சில் பசுமை மாறா பழைய நிகழ்வுகளின் நினைவுகள் படம்போல்,.....

குச்சவெளி என்ற அந்தக் கிராமம் நகரமயமாக்கலின் ஆக்கிரமிப்பில்லாது, காடு, மலை, ஆறு, கடல் என கிராமமொன்றிற்கான எழிலனைத்தையும் கொண்டது. இங்குதான் சசி பிறந்தது, வளர்ந்தது எல்லாமே!

அப்போது அவனுக்கு பதினாறு வயதிருக்கும். விடலைப் பருவம் என்பார்களே, அது. அங்கிருந்த பாடசாலையில் ஒன்பதாம்- வகுப்பில் இவன் பயின்றபோது, அவன் வகுப்பில் வந்து சேர்ந்து கொண்டவள்-மதுவந்தி. மதுவந்தி அழகாயிருந்தாள். இரட்டைப் பின்னல் பின்னி, அதில் கறுப்பு நாடாவால் பூப்போன்று முடிச்சிட்டிருந்த அழகைப் பார்த்து ரசித்தான். வகுப்பில் எல்லோருக்கும் அவளை ஆசிரியர் அறிமுகப் படுத்திய போது, அவள் தந்தை அரசாங்க உத்தியோகத்தர் எனவும், அவர்கள் இடமாற்றத்தினால் இங்கு வந்துள்ளார்களெனவும் அறிந்துகொண்டான்.

படிப்பில் சசி மகா கெட்டிக்காரன். போட்டி இல்லாதிருக்க, போட்டியாய் இவள் வந்து சேர்ந்தாள். வகுப்பில் யார் முதலில் என்பதில் போட்டி. அவள் திறமைகளில் சசிக்கும் நிரம்ப ஈடுபாடிருந்தது. அவள் பேச்சு, அவள் பாவனை, எல்லாமே.....ஒரு கவர்ச்சியாய், மனசுக்குள் மத்தாப்பு பூப்பதைப் போல உணர்வுகள். மதுவந்திக்கும் சசியை ரொம்பவும் பிடித்திருந்தது. நாட்கள் நகர நகர சசிக்கு மதுவந்திக்குமிடையிலான நட்பு இறுகிப்போனது.

சசியின் ஆயிரம் போராட்டங்கள், சதா மதுவந்தி பற்றிய சிந்தனைகள். அவள் முகம் காண தினமும் தவித்தான். விடுமுறை நாட்களில் கூட, அவள் வீட்டின் முன்னால் சைக்கிளில், அவள் காணும்வரை இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாய் ஓடுவான். அவள் முகம் கண்டதும்தான் அங்கிருந்து நகர்வான். நாளடைவில் மதுவந்தி என்ற பெயரே முச்சாகிப் போனது அவனுக்கு. விடலைப்



பருவத்தில் அவனது முதற்காதல் உருக்கொண்டது, மதுவந்தியாய்.... மதுவந்திக்காய்.

அன்று பாடசாலையில் மாணவர் மன்றக் கூட்டம் நடந்தது. சசிக்கு பாரதியார் கவிதைகள் பற்றிப் பேச்சு. முன்வரிசையில் மதுவந்தி! அந்த உற்சாகத்தில், அன்றைய பேச்சு மிக அபாரம். இறுதியாக "கூடிப் பிரியாமலே" கவிதையை வாசித்துவிட்டு, மேடைவிட்டு இறங்கி வந்தபோது, சசியின் கண்கள் மதுவந்தியின் கண்களை சந்தித்துக் கொண்டன. அதில் ஆயிரம் வார்த்தைப் பரிமாற்றங்கள்.

மனசுள் உருவான காதலை வெளிப் படுத்தி, அவள் அங்கீகாரம் பெற தவித்தான். அதற்கான சந்தர்ப்பம் தேடினான். அதுவும் அன்றே கிடைத்தது. கூட்டம் முடிந்து வீடு வரும் போது, இருவரும் ஒன்றாக...சசியே பேச்சை ஆரம்பித்தான்.

"மது, உங்கிட்ட ஒண்டு சொல்ல வேணும்."

"சொல்லன் சசி."

"பிழையா நினைக்க மாட்டியே?"

"உன்னையா? நிச்சயம் நினைக்க மாட்டன்."

"வந்து...உன்ன ஒருநாள்கூட என்னால பாக்காம இருக்கேலுதில்ல."

"ஏன், தினமும்தானே என்னைப் பார்க்கிறாய். லீவு நாள்ல கூட, சைக்கிள்ல வந்து...." கண்சிமிட்டினாள்.

வாயுள் வந்த உமிழ்நீரை விழுங்கிக் கொண்டான். நீண்ட மௌனம் கலைப் பிடித்தான். அவள் வீடு அருகில் வர தைரியத்தை வரவழைத்துக்கொண்டு சொன்னான்,

"நான் உன்ன விரும்புறன் மது."

கூட வந்தவள் நின்றாள். மௌனமாய் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, அவள் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"மது..." சசி அழைக்க திரும்பியவள், மீண்டும் கண்சிமிட்டி சிரித்துவிட்டு நடந்தாள்.

சசி, குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்தான். உடன்சென்று பதில் கேட்க வேண்டும்போல் ஆவல்! அடக்கிக் கொண்டான். நாளை ஸ்கூலில் கேட்கலாம். ஆனாலும் மனம் அடங்கியபாடில்லை. எழுந்து கடிதம் எழுத ஆரம்பித்தான். இரவு கண்ணயரும் வரை கடிதம் எழுதினான்.

அன்று நடுஇரவு. சசி நித்திரை யிலிருந்தான். கனவில் மதுவந்தி! அந்த இரவு நிசப்தத்தில் திடீரென, ஒரு நில அதிர்வு. திடுக்குற்று எழுந்து உட்கார்ந்தான். மீண்டும் இடிமுழக்கம் போன்ற சத்தத்துடன் நிலம் அதிர்ந்தது. தொடர்ந்து வேட்டுச் சத்தங்கள் காதைப்பிளந்தன. ஓடிச்சென்று குடும்பத்துடன் சேர்ந்து கொண்டான். யாவருக்கும் நடுக்கம். வேட்டொலி கேட்டுக்கொண்டேயிருந்தது. வேட்டுச் சத்தத்தையும் மீறி, சூழவிருந்த சனங்களின் கதறல்கள்...கணநேரத்தில் யாவும் புரிந்தது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து. மனசினுள் மதுவந்தி வந்தாள். அவன் குடும்பம் திடீரென வெளியேறி, காட்டுத்திசை நோக்கி ஓடத் தொடங்கியது. இவனும் இழுத்துக்கொண்டு ஓடப்பட்டான்.

மறுநாள் விடிந்தபோது, ஊரனைத்தும் காட்டிற்குள், பிழைத்தது யார்? அகப்பட்டது யார்? ஒவ்வொருவராலும் வேறு வேறு செய்திகள். ஊரவர்கள் சிறுசிறு பிரிவுகளாக, காட்டின் வெவ்வேறு இடங்களில் பரவியிருந்ததால், உண்மை நிலவரம் சரிவரத் தெரியவில்லை. சசியின் குடும்பம் காப்பாற்றப்பட்டாலும், சசிக்கு மனசெல்லாம் மதுவந்தியின் முகமே!

மீண்டும் ஊருக்குள் புகுவது சாத்திய மாகாது என கருதப்பட்டு, காட்டுவழியே அருகிலிருந்த நிலாவெளியை அடைந்த போது அவ்வூர்ப் பாடசாலை அகதி முகாமாக மாறியிருந்தது.

சசியின் கண்கள் மதுவந்தியையே தேடின, காணவில்லை அவளை.

இவனும் முகாமில் அடைபட்டிருந்தான்.

ஒருவாரம் கழிந்திருக்கும்.

திடீரென சசியைத் தேடி வந்தாள் மது. அவளைக் கண்டதும், அவன் மனசுக்குள் ஆயிரம் ரோஜாக்கள் மலர்ந்தன. அருகில் வந்த மது, மூன்று வார்த்தைகளே பேசினாள்.

"நான் போறன் சசி."

அருகே பார்த்த போது, அவள் குடும்பம் எங்கோ கிளம்புவதற்கான ஆயத்தங்களுடன்! பதறிப் போனான் சசி. அவனாலும் ஒரு வார்த்தையே பேச முடிந்தது.

"மது"

அவளையும், அவள் குடும்பத்தையும் ஏற்றிக்கொண்ட வாகனம் நகர்ந்த போது, சகலதுமாய் நொறுங்கிப்போனான்.

அவன் வாழ்வில் அரும்பாகி, மொட்டாகி மலரவிருந்த முதற்காதல் மொட்டிலேயே கருகிப் போனது.

அதன்பிறகு நிகழ்ந்த மாற்றங்கள் சசிக்கு கனவு போலிருந்தன. உயிர் பிழைக்க, உயிர் வாழ பட்ட கஷ்டங்கள் கணக்கிலடங்கா. கண்மூடித்திறப்பதற்குள் 8 வருடங்கள் நகர்ந்து விட்டிருந்தன.

இன்று தினமுரசு அவள் முகத்தைக் காண வைத்தது......

"ஓ, மதுவந்தி! உனக்குத் திருமணமாகி விட்டதா?"

பத்திரிகையில், அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன.

"இன்னும், நீங்க பேப்பரா படிச்சுக் கொண்டிருக்கீங்க? சந்தைக்குப் போகலயா?"

எதிரேயிருந்து குரல் வர, நிமிர்ந்து பார்த்தான். அங்கு, அவன் மனைவி ராசாத்தி நின்று கொண்டிருந்தாள்.


(எல்லாம் கற்பனையல்ல)

# நிமிடக் கதை

சில பிழையான சந்தேகங்கள்
விபரீதமான முடிவையே தரும்!

# சந்தேகம்!

-எம். சுரேஷ்-



காதலாம்...காதல், காதலிக்கிற வயசாடி இது?..."பளார்"...சுருண்டு விழுந்தாள் அபிராமி!

"ச்சே! உன்னை எப்படியெல்லாம் வளர்த்தேன், இப்பிடி செய்திட்டியேடி பாவி" கவுண்டரின் கைகள் மீண்டும் அபிராமியின் கன்னத்தில் பதிந்து கண்ணீரை வரவழைத்தது.

அவள் சின்னவள்... தந்தையின் திடீர் நடவடிக்கையால் தடுமாறிப்போய் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தாள். நிலவு போன்ற முகம் நெருப்பாய் சிவந்து சோகத்தைக் கொட்டியது.

இங்கு என்னதான் நடந்தது? ஒரு இளைஞனோடு அவள் ஓரிரு தினங்கள் சிரித்துப் பேசுவதைக் கண்ட "நலன் விரும்பிகள்", கண்ட காட்சிக்கு கை, கால்களைப் பொருத்தி, உருக்கொடுத்து அதை அபிராமியின் பெற்றோர் காதில் போட, விளைவு அடியும் உதையும்...

"அப்பா! நான் சத்தியமா யாரையும் காதலிக்கல்லப்பா... சத்தியமா "அவரை" நான் காதலிக்க.."

"மூடுடி வாயை! செய்யிறதையும் செஞ்சிட்டு, பேச வந்துட்டாளாம் பேச."

"ஐயோ! அப்பா என்னை நம்புங்கப்பா..."

"ஆமாடி! இவ்வளவு காலமும் நம்பினது போதும்... இனி நீ வீட்டுக் குள்ளயே இரு... ஒனக்கு படிப்பும் வேணாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேணாம்" கத்தினார் கவுண்டர்!

அபிராமியின் கண்களை கண்ணீர் மறைத்தது... தான் சிரித்துப் பேசிய இளைஞனை நினைத்துப் பார்த்தாள்... 'உண்மையில் "அவர்" எவ்வளவு நல்லவர். ஒரு நாளாவது என்னோடு தப்பாகப் பேசியிருப்பாரா? எவ்வளவு பண்பாக நடந்து கொள்வார்? நன்றாகப் படிக்க வேண்டுமென்று அறிவுரை கூறுவார்.. அவரைப்போய் என்னோடு இணைத்து.. ச்சே எவ்வளவு மோசமான சமுதாயம்.'

இந்த ஊர் சந்தேகப்பட்டதில் அவளுக்கு ஆச்சரியமில்லை. ஆனால் சொந்த தாய், தந்தை கூட தனது பேச்சை நம்பாமல், யாரோ சொன்னதை நம்பி, தன்னை போட்டு அடிப்பதை நினைத்து மேலும் கண்ணீர் விட்டாள் அபிராமி.

"இன்னொரு முறை அவனோட பேசுறதைப் பார்த்தேன்... ஒன்னைத் தொலைச்சுப்புடுவேன், தொலைச்சு.."

"ஐயோ! நான் அவரோட தப்பாப் பழகல்லியே.."

"மூடுடி வாயை.." மீண்டும் ஒரு "பளார்."

இப்போது அபிராமியின் தாய் ஒருவாறு சமாளித்தாள்.. "சரிசரி விடுங்க! இனிமே அவ அப்பிடியெல்லாம் பண்ணமாட்டா.."

"ஆமா! ரொம்ப நல்ல பொண்ணு!" திட்டியபடியே விலகிச் சென்றார் கவுண்டர்.

அபிராமியின் கூந்தலை அன்பாக வருடிக்கொடுத்த அவளின் தாய் "எல்லாம் ஒன்னோட நன்மைக்குத்தானம்மா.. இந்த வயசில எதுக்கும்மா காதலும் கத்தரிக்காயும்?" அபிராமிக்குத் தூக்கிவாரிப்போட்டது. திடுக்கிட்டாள்.

"அம்மா! நீயுமா என்னை சந்தேகப்படுறே?"

"சேச்சே! சந்தேகப்படவே மாட்டேன். இனி நீ அந்தப் பையனோட பேச மாட்டேன்னு எனக்கு நல்லாத் தெரியும்."

"அம்மா! எனக்கும் அந்தப் பையனுக்கும் எந்த வித்தியாசமான தொடர்பும் இல்லைம்மா"

"இங்க பாரு அபிராமி! தப்பை மறைக்க முயலாம, திருந்துறதுக்கு வழியப் பாரு" அப்பிடின்னா அம்மாகூட எம்மேல சந்தேகப் படுறாங்களா? அபிராமி மௌனமானாள்.. மெதுவாக ஆனால் தீர்க்கமாக அவள் மனதிற்குள் காதல் அரும்ப ஆரம்பித்தது!

(முதன்முதலாக அந்த "இளைஞனை" தன் காதலனாக கற்பனை பண்ண ஆரம்பித்தாள் அபிராமி)

# கத்தரித்த கடி ஜோக்ஸ்



வாலிபன்: உங்கள் மகளை மனைவியாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
தந்தை: உனக்கு வயது என்ன?
வாலிபன்: இருபத்திரெண்டு.
தந்தை: என் மகளுக்கு இப்போது இருபத்தி நாலு வயது. உன்னை அவளுக்கு கணவனாக்க நான் விரும்பவில்லை. அதனால் இன்னும் இரண்டு வருடம் கழித்து வா.

•

நீலா: என்னடி இது ஆச்சரியமாய் இருக்கு. புடவைக் கடைக்கு போகிறேன் என்றாய்.
உடனே திரும்பி விட்டாய்.
மாலா: பழக்கமான கடைக்கு போனேன். என்னைப் பார்த்ததுமே கடையை இழுத்து மூடிவிட்டார்களடி.

•

தயாரிப்பாளர்: நான் எடுக்கப்போகும் படத்தாலே ஊரே சிரிக்கப் போகுது.
நிருபர்: படத்தின் பெயர் என்ன?
தயாரிப்பாளர்: ஹி.ஹி.ஹி

•

பொலிஸ்காரர்: தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்த பெண் கழுத்தில் இருந்த சங்கிலியில் கைபோட்டான். லபக் என்று பிடித்துவிட்டேன்.
இன்ஸ்பெக்டர்: அப்படியா. அது சரி படத்தின் பெயர் என்ன?
பொலிஸ்காரர்: திருடா திருடா.

•

அவர்: அந்த டாக்டர் கவனமாக ஒப்பிரேசன் செய்வாராமே!
மற்றவர்: ஆமாம். அவருக்குத்தான் தெரியும். செத்த பிணம் பணம் தராது என்று.


•

நண்பர்: என்ன டாக்டர் ஒப்பிரேசன் முடிந்து விட்டது போலிருக்கிறது. வீட்டுக்கு கிளம்பிவிட்டீர்களா?
டாக்டர்: இல்லை. உடனே அதே நோயாளிக்கு இன்னொரு ஒப்பிரேசன் செய்யவேண்டும்.
நண்பர்: ஏன் டாக்டர்?
டாக்டர்: சாவி போடாமல் என் கார் கிளம்பாதேயப்பா. என் கார் சாவியை தவறுதலாக அவர் வயிற்றுக்குள் வைத்துவிட்டேன்.

# குட்டிக்கதை

# இதுதான் காதல் என்பதா?

-சேத்தூர் எஸ். பகீரதி



**"நேற்று இல்லாத மாற்றம் என்னது**
**காற்று என் காதில் ஏதோ சொன்னது**
**இதுதான் காதல் என்பதா**
**இளமை தூது விட்டதா..."**

அந்தப் பாடல் தேனான பெண்குரலில் ஒலித்துக்கொண்டிருந்தது. கூடவே எனது கற்பனைகளும் இறக்கை கட்டிக்கொண்டன. இயற்கையைக் காதலித்து தென்றலைத் தூதாக அனுப்பி பூக்களுடன் பேசி, சைக்கிள் டயர் தேயத் தேய நண்பர்களுடன் பட்டாம் பூச்சிகளாய் பெண்களுக்குப் பின்னே வட்ட மடித்துத் துள்ளித் திரியும் பருவம். அன்றொரு நாள் அவளை நான் முதன் முதலாகக் கண்டேன். அவள்... அழகுகளின் இமயம். வசந்தங்களை தன்னோடு சுமந்திருப்பவள். அவளைக் கண்ட நாள் முதல் நான் என்னை இழந்து அலைந்தேன்.

அவளைக் காணும் போது அவளது அழகிய விழிகளுக்குள் எதையோ என் விழிகள் தேடும்.

'எதைத் தேடுகின்றேன்' எனக்குள்ளேயே நான் கேட்கிறேன். என்னைப் பார்த்து அவள் இமைச் சிறகுகளைப் படபடவென அடிக்கும் போது என் இதயம் துடிதுடிக்கிறது.

'என்னவளே உன்னுள் இருக்கும் பெண்மை என்னும் விலைமதிப்பற்ற புதையலைக் காட்டு. நான் பைத்தியம் அல்ல. உன்னால் பைத்தியமாக்கப்பட்டவன். (கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டதா?) "எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று ஏதோ அடி ஏதோ உன்னிடம் இருக்கிறது." பாடத் தொடங்கினேன். (எனக்கு மட்டும்) அவள் என் இதயம் நிறையச் சிரிக்கிறாள். அவளது பவளக் கண்களையும் பளிங்கு மேனியையும் கண்டுதானோ வந்தது இந்தக் காதல்!

ஆழமாய் யோசித்து ஆயிரம் கேள்விகள் எனக்குள்ளேயே கேட்டுக் கொள்கிறேன். இதயம் நிறைய அவள் இருக்கும் போது இதயம் பொய் சொல்லுமா என்ன?

இல்லை. நிச்சயமாக இல்லை. என் காதல் ஆத்மா சம்பந்தமானது- புனிதமானது. "மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக் காதல் அல்ல. அதையும் தாண்டி புனிதமானது." என்ற கமலஹாசனைப் போல கத்தவேண்டும் மாதிரி ஒரு வேகம். புன்னகையே அவளது தாய்மொழி. அவளுக்குத் தெரிந்த அந்த மொழியிலே நான் அவளுடன் பேசிக்கொண்டேன். உன்னை நேசித்தல் மட்டுமே எத்தனை சுகம். நேசித்தல் நேசிக்கப்படுதல் ஒரு சுகமே. (முரசத்தில் வாசித்தது ஞாபகம் வருகிறது) சொல்லிக்கொள்கிறேன்.

"உன்னை நானும் என்னை நீயும் இப்படி அடிக்கடி பார்த்துச் சிரித்துக்கொண்டால் அர்த்தம் என்ன?

ப்ளீஸ் உன் உதடுகளுக்குப் போட்டி ருக்கும் மௌனப் பூட்டைத் திறந்து நீ முற்றுமுழுவதுமாயிருக்கும் உன் இதய சாம்ராஜ்யத்தின் கதவுகளைத் திறந்துவிடு." அவளிடம் கேட்டுவிட்டேன்.(கன்னம் கவனம் என்று சொல்கிறீர்களா? நானும் ஜாக்கிரதை யாகத்தான் இருக்கின்றேன். ஆனால்...)

அவள் பூவாய்ச் சிரிக்கிறாள்.

நாணத்தால் முகம் சிவக்கிறாள்.

வசந்தம் என் வாழ்வில் வந்தது. ஒவ்வொரு நாளும் மணிக்கணக்கில் கதைத் தோம். சிரித்தோம். காலம் கடந்தது. திருமணம் என்ற பந்தம் வந்தது. எத்தனை சந்தோஷங்கள்.

"நான் பாக்கியசாலி" அவளிடம் கூறினேன்.

"இல்லை நான்தான் பாக்கியசாலி" அவள் கூறினாள். வசந்தங்கள் வாழ்த்த சந்தோஷம் எங்களுடன் கை கோர்த்து புதிய சங்கீதம் பாடியது.

"எழும்புங்கோ....ம் எழும்புங்கோ என்ன பகற் கனவா" எனது இல்லாள் அன்பாய் (அதட்டி) என்னை எழுப்ப கண்களைத் திறக்கின்றேன்.

"இவ்வளவு நேரமும் கண்டது கனவு தானா?" என நினைத்துக்கொண்டு இல்லாளின் முகம் நோக்குகிறேன். "அட இது என் இதய தேவதைதானா? எத்தனை மாற்றங்கள்! நரைத்த தலையும், குழி விழுந்த கன்னமும், மெலிந்து விட்ட தேகமும்." நான் எனக்குள் வியந்து போகின்றேன். (நான் மட்டும் என்ன இளைஞனா?) அவளது கண்களில் இருந்த கனிவு (மன்னிக்கவும் கண்டிப்பு) மாறாமல்,

"இந்த வயசில யார் கூட டூயட் பாடுறீங்க? நீங்க ரிட்டையர் ஆனது உத்தியோகத்துல இருந்துதானே தவிர வீட்டு வேலைகளில் இல்லை என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்க. ஸ்கூல் விடுகின்ற நேரமாச்சு. போய்ப் பேரப்பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வாங்கோ." கூறிவிட்டு அவள் தங்கப் பதுமை போல (ஓ...ஸாரி தள்ளாடியபடி) நடக்கிறாள்.

இந்த இருபத்தைந்து வருடங்களில் எத்தனை மாறுதல்கள். முன்பு அவளை ஒரு நாள் காணவில்லையென்றால் பசி ஏது? தூக்கம் தான் ஏது? இதுதான் காதல் என்பதா? கேட்டுக் கொள்கிறேன்.

எனது பேரப்பிள்ளைகளை அழைத்து வர பாடசாலையை நோக்கி விரைகின்றேன். என்னைக் கண்டதும் துள்ளி வந்த எனது பேரக் குழந்தைகளை அணைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடக்கின்றேன்.

இல்லாள் சிரித்துக்கொண்டு நின்றாள். அவள் இப்பொழுதும் அழகாகவே இருந்தாள். ஏனெனில், என் காதல் ஆத்மா சம்பந்தமானதல்லவா?

(கற்பனை மட்டுமே)

www.padippakam.com    நன்றி - நூலகத்திட்டம்

## தருவது ரசிகன்

## இலக்கிய நயம்

இளஞ்செழியன் வானத்தில் எரியும் நிலவின் வெளிச்சத்தில் தன் அருகே இருந்த தேவதையின் அழகு முகம் இரசித்தான்.

சீர்மிகு கலை வண்ணம் கண்ட மனது அந்த சிற்பத்தின் மீது வண்டாக ஏறி அமர்ந்து இரசிக்கும். இரசிப்பதோடு நிறுத்தாமல் அதனைப் படைத்துத் தந்த சிற்பியின் கற்பனைத் திறனையும் வியந்து கொள்ளும். புகழவும் செய்யும்.

"ம்..."

வீணையின் நாதம் போல அந்த ஒற்றைச் சொல் மட்டுமே அந்த மோகன சுந்தரியின் உதடுகளில் இருந்து இறங்கி வந்தது.

"அருகிலே நானிருக்க, தரையிலே அப்படி என்ன ஆராய்ச்சி?"

காவியா மெல்ல முகம் திருப்பி இளஞ்செழியனை நோக்கினாள்.

இளஞ்செழியன் விழிகளில் நிறைந்த ஆசையுடன் காவியாவின் விழிகளுக்குள் பார்த்தான்.

மான்குட்டிகள் போல துள்ளும் விழிகள். உதடுகள் சொல்ல மறுக்கும் எண்ணங்கள் விழிகளில் தெரிந்துவிடும். காவியாவின் மோகன விழிகளில் அவன் மீது அவள் கொண்ட ஆசை இருந்தது. அன்பு தெரிந்தது. ஒரு முறை நோக்கினால் தப்பிக்கொள்ள முடியாமல் சிக்கவைக்கும் மோக வலை தெரிந்தது.

இளஞ்செழியன் தவித்தான். அவள் விழிகள் பட்டதால் தீராத வியாதியில் சிக்கியவன் வேதனை போல துடித்தான். மீண்டும்,

"காவியா"

என்று அழைத்தான்.

பேசுவதற்கு விசயங்கள் இருந்தாலும் எதைப் பேசுவது என்று மறந்துவிடுவதும், ஆசை உள்ளே எரிய ஏதாவது உளறுவதும் காதலர்கள் உலகில் சகஜமான விசயங்கள்.

இளஞ்செழியன் காவியாவின் முகத் தருகே தன் முகம் கொண்டு சென்று அவள் நெற்றியில் உதடு பொருத்தி முத்தமிட்டான்.

ஆசைத்தீ உள்ளே எரிந்தமையால் முத்தத்தில் அந்த வெப்பம் தெரிந்தது.

காவியாவுக்கு தன் காதலன் தந்த முத்தம் இதமாய் இருந்தது. விழிகளை மூடி இரசித்தாள். "இன்னும் தரட்டும்" என்று மனதுக்குள் நினைத்தாள்.

நெற்றியில் இருந்து விலகிய உதடுகளால் காவியாவின் பளிங்குக் கன்னங்களில் ஊர்வலம் நடத்தி, அவ்வாறு ஊர்வலம் நடத்தியபோது உள்ளே சிலிர்த்து துடித்த இதழ்களை மைதானமாக்கி ஊர்வலம் முடித்து அமர்ந்து கொண்டன இளஞ்செழியனின் உதடுகள்.

இதழ்கள் கலந்தன. உள்ளத்தில் அணை உடைத்து ஆசை வெள்ளம்-காட்டாற்று வெள்ளம் போல, நாணம் என்னும் தடை உடைத்து, கரை பெயர்த்து புரண்டு வந்தது.

காவியா இளஞ்செழியனின் மேல் உதட்டை மெல்லக் கடித்தாள்.

பெண்ணுக்கு வேகம் வந்தால் ஆண்பாடும் அவதிதான்.

இளஞ்செழியன் காவியாவின் இறுகிய அணைப்பில் கட்டுண்டு போனான்.

"மெல்லிய கரங்களுக்கு இத்தனை வலுவா? முதுகெலும்பு உடைந்துவிடும் போல் இருக்கிறதே. எங்கிருந்து இத்தனை பலம் வந்தது?" என்று மனதுக்குள் கேட்டுக்கொண்டான்.

எங்கே விலகிப் போய்விடுவானோ- அணைப்பை தளர்த்தினால், என்று பயப்படுபவள் போல காவியா தன் இரு கரங்களையும் அவன் முதுகில் அழுத்தி இன்பச் சிறையை இறுக்கிக் கொண்டாள்.

இளஞ்செழியனோ சிறை கதவம் விலகாமல் இருக்க வேண்டும். இன்பச் சிறகுகள் முளைத்து சந்தோச வானில் உலா நடத்திக்கொண்டே இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

சிறைக்குள் இருந்தபடியே முகம் குனிந்தான். குனிந்தபோது மோதியது மோகன அழகு. மோதிய அழகில் அவன் முகம் புதைக்க, காவியா மெய் மறந்தாள்.

இளஞ்செழியன் காவியாவின் கிறக்க மான முணு முணுப்பை காதில் வாங்கி மகிழ்ச்சி கொண்டான்.

"ஐம்புலன்களும் ஒன்றாய் மகிழ்வதும் ஒன்றாய் சிலிர்ப்பதும் என்னே விந்தை!" என்று இன்பத்தின் உச்சியில் ஏறி நின்ற உள்ளம் நினைத்துக்கொண்டது.


"கண்,காது, நாக்கு, மூக்கு, உடல், ஆகிய ஐம்புலன்களும் தமக்குரிய இன்பத்தை பெறும் வித்தை மனம் கலந்த காதலில் மலரும் காமத்தில் மட்டுமே உண்டு."

இளஞ்செழியன் நினைத்துக் கொண்டான். இளஞ்செழியன் நினைப்பது சரிதான். திருவள்ளுவரும் அதைத்தான் சொன்னாரோ?

**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு**
**-மைம்புலனு**
**மொண்டோடி கண்ணே யுள.**

அதிகாரம் 111
குறள்-1101

# இதுவும் சிறைதான்-ஆனால் இனிமை



இளஞ்செழியனும் தன் அருகே இருந்த பொன்மகளின் பூ முகமும், பொன் கொழிக்கும் நிலம்போல செழித்திருந்த பூந்தேகமும் பார்த்து வியந்தான்.

"இந்த தங்கப் பதுமையைப் படைத்து தரையிலே உலவ விட்டவர்களை பாராட்டியே தீரவேண்டும்."

என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

பக்கவாட்டில் பார்த்தபோது பாண்டிய மன்னனின் பட்டத்து யானை போல கம்பீரமாய் நிமிர்ந்து செழித்திருந்த பருவ எழில் இளஞ்செழியனை வதைத்தது.

அவன் விழிகள் தன் மீது புரள்வது புரிந்து காவியா நாணத்தால் முகம் சிவந்தாள். நிலம் நோக்கித் தலை குனிந்திருந்தாள்.

காவியா இளஞ்செழியனை திரும்பிப் பார்க்கவில்லை. புறக்கண்களால் அந்த மறவனைப் பார்க்கவில்லையே தவிர அகக் கண்களால் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

"காவியா"

உச்சரிக்கும் போதே எங்கே உதடுகளில் பட்டு அவள் பெயர் காயப்பட்டுவிடுமோ என்று கவலைப்படுபவன் போல பக்குவமாய் அழைத்தான்.

## நகலும் அசலும்





அமெரிக்காவில் ஜனாதிபதி கிளிண்டன், அவர் மனைவி ஹிலாரி மற்றும் அவர்களது செல்ல மகள் செல்சியா ஆகிய மூவரையும் அச்சில் வார்த்தது போலவே இன்னொரு குடும்பம் இருக்கிறது. அந்த "போலி ஜனாதிபதி குடும்பம்" அமெரிக்காவில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

கிளிண்டன் போலவே தோற்றமளிக்கும் மைக்கேல் நெவெல், ஹிலாரி போல இருக்கும் கதேவெஸ், செல்சியா போல் இருக்கும் ஜெசிக்நா ஆகிய அந்த மூவரையும் தற்போது விளம்பர நிறுவனங்கள் விரட்டி விரட்டி பிடித்து தங்கள் படங்களில் நடிக்க வைக்கின்றன. இந்த போலி ஜனாதிபதி குடும்பம் கிளிண்டன் தம்பதிகளுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

அவர்கள் போலி ஜனாதிபதி குடும்பத்தினருக்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஆனால் போலி ஜனாதிபதி குடும்பத்தினர்தான் தினமும் பயந்தபடி இருக்கின்றனர்.

மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைக்கும் அதே வேளையில் உயிருக்கும் அபத்து ஏற்படலாம் என்பதால் பொது இடங்களுக்கு அவர்கள் 'புல்லட் புரூப்' அணிந்தே செல்கின்றனர். இது அவர்களுக்கு சங்கடமாக இருக்கிறதாம்.

## சிந்தியா பதில்கள்

அழகு எப்போது வெறுக்கப்படுகிறது?

பரினா-உடத்தலவின்னை.

அதனை காரியம் சாதிக்கும் சாதனமாகச் சிலர் மாற்றும்போது.

•

தங்கள் பழைய நிலையை மறந்து பெருமை காட்டுகின்றவர்கள் பற்றி?

எம். ஆர். மங்களராணி-கோமாரி.

ஏணிகளை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் ஒருநாள் கீழே இறங்கிவரும் தேவை உள்ளபோது ஏணிகளும் அவர்களை மறந்துவிட்டால் குப்புற விழுவார்கள்.

•

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதுவரை எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

கே.சந்திரன்-லுணுகல.

280 படங்கள். 280வது படம் தேவர் மகன்.

•

தமிழ் திரையுலகில் அண்மைக் காலங்களில் தோன்றிய கதைப்பஞ்சம் என்று தீரும்?

தி.லிங்கேஸ்-வாகரை.

தினம் நாலு-ஐந்து படங்களுக்கு பாட்டெழுதும் நிலையில் உள்ள கவிஞர்கள் படும் பாட்டைப் பார்க்கும் போது வரும் சமீபகாலத்தில் பஞ்சம் தீரும் அறிகுறி தென்படவில்லை.

•

### யாராலும் திருடமுடியாதவை எவை?

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" இது நமது நாட்டுக்குப் பொருந்துமா?

ம. நிசாயா-இறக்கக்கண்டி.

"யாவும் போரே, யாவரும் கேளீர்" என்று மாறிக்கொண்டிருக்கிறதோ நிலமை என்று சந்தேகம் வருகிறது.

•

ஹலோ சிந்தியா, யாராலும் திருட முடியாதவை எவை?

எம்.ஏ.றபீக்-மூதூர்-01.

உள்ளத்தில் பூட்டிவைக்கும் இரகசியங்கள்.

•

பதவியில் இருந்து கொண்டே "தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்ன தந்தை செல்வா பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

மகேஸ்-கொழும்பு-13.

தம்மால் முடியாத விசயங்களையெல்லாம் முடியும் என்று சாதிக்கும் அரசியல்வாதிகளைவிட அவர் பரவாயில்லை என்று நினைக்கிறேன்.

•

டியர் சிந்தியா! சொல்லில் இனிப்பாகவும் செயலில் கசப்பாகவும் நடந்து கொள்பவர்களைப் பற்றி....

ரீ.எம். நாசர்-நுவரெலியா.

கபடத்தனத்தின் மொத்த வடிவங்கள். ஆனால் கையாலாகாதவர்கள். தங்கள் எண்ணங்களை நேரில் வெளிப்படுத்தப் பயந்தவர்கள்.

•

இ.தொ.காவில் ஏற்பட்டுள்ள பிணக்குகள் தீருமா?

எஸ். தணிகைவேல்-நுவரெலியா.

பிரச்சனைகள் பகிரங்கத்திற்கு வந்துவிட்டதால் இனி பேசித் தீர்வுகாண வாய்ப்பிருக்காது.

•

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கிழக்கில் மீண்டும் ஒத்திவைக்கப்படுமா?

அ. ஹரிகரன்-மட்டக்களப்பு.

நடத்தி முடிப்பதில் ஜனாதிபதி உறுதியோடிருப்பதாகவே தெரிகிறது.

•

தினமுரசில் பேனா நண்பர் பகுதியில் இடம் பெற பணம் செலுத்த வேண்டுமா?

எம். துர்கா-கொழும்பு-6.

வேண்டவே வேண்டாம்.

•

வை.கோ. தமிழக முதல்வராகும் வாய்ப்பு இருக்கிறதா?

கா. ஜோதிராஜ்-சிலாபம்.

தற்போதைக்கு இல்லை. செல்வி ஜெயலலிதாவுக்குத்தான் அடுத்த முதல்வராகும் வாய்ப்பும் வந்திருக்கிறது.

•

கடந்த ஆண்டின் சிறந்த மனிதர் யார்?

வீ. தனலக்சுமி-நீர்கொழும்பு.

யாசீர் அரபாத், நெல்சன் மண்டேலா, கிளேர்க், ராபின் ஆகியோரை கடந்த ஆண்டின் சிறந்த மனிதர்களாக அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை கூறியுள்ளது.

•

(19ம் பக்க, மகாபாரதம் தொடர்.)

கொண்டு வரப்படுகிறார்)

**காவல:** வாழ்க மகாராஜா!

**கம்சன்:** சந்நியாசி! நீ தானே சொன்னாய்... தேவகியின் எட்டாவது மகனால் நான் கொல்லப்படுவேன் என்று! சொன்னவன் நீ தானே?

**ரிஷி:** ஆமாம் நிச்சயமாக!

**கம்சன்:** சந்நியாசி! தேவகி இம்முறை பெற்றது பெண்குழந்தை. அவளுக்கு எட்டாவதாக ஆண் குழந்தை பிறக்கவில்லையே!

**ரிஷி:** கம்சனே! தேவகியின் சாதகத்தில் பெண் குழந்தைக்கே இடமில்லை. அவளுக்கு எட்டாவது ஆண்குழந்தை பிறந்தேவிட்டது. அவன் எப்படியும் உன்னைக் கொல்லுவான். இந்த உலகத்தை உன்னுடைய கொடுமைகளிலிருந்து அவன் விடுவிப்பான். காலம் காட்டும் உண்மை இது தான்.

**கம்சன்:** (பயங்கரமாக உறுமிய வண்ணம்) இல்லை. இல்லவே இல்லை.

*(இன்று இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களின் தொகுப்புடன் காட்சி முடிகிறது)*

(எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது)

## குறுக்கெழுத்துப் போட்டி இல-32

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | 5 | |
| 6 | 7 | | | ■ | | |
| | | | 8 | 9 | | |
| ■ | | ■ | ■ | | | ■ |
| 10 | | | | | | ■ |
| 11 | ■ | 12 | | | | |

**இடமிருந்து வலம்**

1. உலகத்தில் உயரமானவைகளில் ஒன்று.
4. நீரிலும் இருக்கும், நிலத்திலும் திரியும்.
6. இறுதிப் பயணம் இங்கே முடிகிறது.
8. ஐரோப்பிய நாடுகளில் ஒன்று.
10. இது நடந்தால் அரங்கத்தில் உள்ளது தெரியும்.
12. செலவு செய்ய வேண்டுமென்றால் இது இருக்க வேண்டும்.

**மேலிருந்து கீழ்**

1. காச நோயாளிகளுக்கு இது தொல்லை.
2. வெளிச்சம் வரும் பாதைகளில் ஒன்று.
3. இப்பெயரில் ஒரு படம் வந்திருக்கிறது.
5. தற்பெருமையுள்ளவர்கள் இதுவும் செய்வார்கள். (குழம்பியிருக்கிறது)
7. காசிக்குப் போவதை இப்படியும் சொல்வதுண்டு.
9. உடம்பில் அடிபட்டால் இது வருவதுண்டு.
11. இதில் போகும் போது கவனம் தேவை. (தலைகீழாக இருக்கிறது)

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 15.01.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-32**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-30க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | ற் | று | 2 மை | ■ | 3 தி | ரி |
| த் | ■ | 4 பு | னா | ய் | ல | வு |
| 5 த | 6 வி | ல் | ■ | ■ | ■ | ர |
| ட | ரு | ■ | 7 இ | ■ | 8 க | 9 ம |
| ம் | ட் | 10 வ | ன் | 11 மு | றை | ■ |
| ■ | ச | ■ | ப | டி | யா | 12 ப |
| 13 சி | ம் | ம | ம் | ■ | ன் | னி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.30இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. ப. ஜெகதா மட்டக்களப்பு.
2. ஏ.எஸ்.எம். நஸ்ருதீன் கல்முனை.
3. எம். ரோஹினி நாவலப்பிட்டி.
4. இ. கந்தசாமி புத்தளம்.
5. என். நந்தகுமார் கண்டி.
6. யாழினி மயில்வாகனம் மட்டக்களப்பு.
7. எல். இக்பால் கண்டி.
8. எஸ். சாரதா கொழும்பு-5.
9. சி. பாத்திமா கொழும்பு-6.
10. வி. ரகுநாதன் நீர்கொழும்பு.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (09.01.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

*அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்*

# மகாபாரதம்

அங்கம் 11

**காலத்தின் குரல்:** தேவகியின் முதல் குழந்தை பிறப்பதற்கான வேளை நெருங்கி விட்டது. கம்சனின் பிடியில் சிக்கிச் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் மதுரா புரியின் விடுதலை வெகு தூரத்தில் இல்லை. கம்சனின் அழிவுக்கு இன்னும் எட்டுப் படிகளே பாக்கியுள்ளன. தேவகிக்கும் இது தெரியும். இருப்பினும் அவள் ஒரு பெண் பேதை- தாயாகிக் கொண்டிருக்கும் தவிப்பு மேலிட்டு தேம்பிக்கொண்டிருக்கிறாள். சிறைக் கூடத்தின் இருள் அவளுடைய கருத்தையும் இருளச் செய்துவிட்டது. குழம்பிப்போயிருக்கிறாள். நானே இருள்! நானே ஒளி! பகலும் நான்! இரவும் நான்! காலைக் கதிரவனாக நான் ஒளிபரப்ப ஆரம்பித்ததும் இருள் அகன்று விடுகிறது. பகலிலும் ஒளிபுக முடியாத இந்தச் சிறைக்கூடம் உண்மையின் ஒளி வெள்ளத்தால் பிரகாசிக்கத் தான் போகிறது. அதற்கான முதற்படி அமைக்கப்பட்டு விட்டது. இந்த உண்மையினை கம்சனும் அறிவான். ஆனால் அவன் அகங்காரத்தால் அந்தகனாகி விட்டான். வேத வர்க்குப் பொய்க்காது என்பதனையும் அவன் அறிவான். ஆனால் தான் எனும் அகங்காரம் கொண்ட அவன் விதியை வென்று விடலாம் என வீண் ஆசை கொண்டு கொக்கரிக்கிறான்.

*(வாயில்காப்போன் வருகிறான்)*

இவன் உண்மையில் வாயிற்காவலனல்ல. விதியின் தூதுவன் இவன். கம்சனின் அழிவுக்குரிய முதற்படி அமைக்கப்பட்டுவிட்டது என்பதனை அறிவிக்க வருகிறான் இவன்.

-காட்சி தொடக்கம்-

*(கம்சனின் அரண்மனை)*

**காவலன்:** வாழ்க மகாராஜா! சிறை அதிகாரி தகவல் அனுப்பியுள்ளார்.

*(கம்சன் வாளை உருவிக்கொண்டு எழுகிறான்.)*

-காட்சி மாற்றம்-

*(சிறை-உருவிய வாளுடன் உள்ளே புகுந்த கம்சனைக் கண்டு தேவகி அழுது புலம்புகிறாள்)*

**கம்ச:** என்னை அப்படிப் பார்க்காதே தேவகி! உனது கோபம் பிரமன்பால் திரும்பட்டும். அந்த பிரம்மனே அவனுக்கும் எனக்குமான போர்க்களத்துக்கு உனது வயிற்றைத் தேர்ந்தெடுத்தான். நான் என்ன செய்ய முடியும்? நான் இருதலைக்கொள்ளி எறும்பாகிவிட்டேன்.... உம்.... கொடு... பிள்ளையைக் கொடு.

**தேவகி:** (அழுத வண்ணம்): இல்லை! நான் தரமாட்டேன்.

**கம்ச:** நீயாகத் தராவிட்டால் நானே பறித்தெடுக்க வேண்டிவரும்.

**வாசு:** கம்சா! உனது எதிரி எங்கள் எட்டாவது மகன்தானே! இந்த முதற்குழந்தையை எதற்காகக் கொல்ல வேண்டும்?

**கம்ச:** நச்சுப்பாம்பு நச்சுப்பாம்புதான். அது ஆரம்பமாக இருந்தாலும் இறுதியாக இருந்தால் என்ன, நஞ்சு நஞ்சுதான்.

**வாசு:** கம்சா! இதயமேயற்ற கொடியவனாகாதே! ஆண்டவனுக்கே அடுக்காத செயலில் இறங்காதே! இவன் உனது மருமகன் அல்லவா?

**கம்ச:** இவனா என் மருமகன்? இல்லை! பிரம்மன் என் மீது ஏவியுள்ள முதலாவது பாணம்! அவன் ஏவும் எட்டுப் பாணங்களையும் அழித்தே தீருவேன்.

**தேவகி:** பேயும் தன் உறவினை நேசிக்கும் அல்லவா அண்ணா?

**கம்ச:** உன் துயரத்தைக் கொட்டி என் இதயத்தை மென்மையாக்கி விட நினைக்காதே தேவகி! உனது சொந்த அண்ணனின் உயிரைப் பற்றிக் கவலைப்படாத தங்கையா நீ!

**தேவகி:** இவனை ஏன் அழிக்க நினைக்கிறாய்? என்னைக் கொன்றுவிடு. கொன்றுவிட்டால் எட்டுக் குழந்தைகள் பற்றிய உன் பயமும் நீங்கிவிடுமே!

**கம்ச:** கொடு குழந்தையை...!

**தேவகி:** வேண்டாம் அண்ணா. வேண்டாம்.

**கம்ச:** கொடடி அதை...!

**தேவகி:** வேண்டாம் அண்ணா..!

*(கம்சன் கையை நீட்டி குழந்தையைப் பறித்து சுவரின் மீது மோதுகிறான்)*

**வாசு:** அழாதே தேவகி.

*(கம்சன் சிரித்து மகிழ தேவகி அழுகிறாள்)*

-காட்சி மாற்றம்-

*(சிறை- சுவரில் இரத்தக்கறை)*

**காலத்தின் குரல்:** இருள் சூழ்ந்த சிறையின் சுவரிலே சிசுவின் இரத்தக்கறை கம்சனின் அழிவை முன்னறிவிக்கும் முதல் அடி இது. கம்சன் கொக்கரிக்கவில்லை. அவனுடைய தலை விதியே அவனைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தது. அவன் மீண்டும் சிறைக்கு வருகிறான். அவனுடைய அழிவுக்கான அடுத்த காலடியைக் காண வருகிறான்.

அவனல்ல சிரிப்பது. அவனுடைய விதியே அவனுடைய கடைசிச் சிரிப்பாக இருக்கப் போகிறது.

*(கம்சன் சிறைக்கு வருகிறான். அடுத்த குழந்தையை வைத்துக் கொண்டு தேவகி புலம்புகிறாள்)*

**தேவகி:** இல்லை...இல்லை....

**கம்ச:** பிள்ளையைக் கொடுத்துவிடு.

*(கம்சன் குழந்தையைப் பறித்து சுவரில் மோதுகிறான். இரத்தக்கறை சுவரில் படர்கிறது. இவ்வாறு ஆறு இரத்தக் கறைகள் சுவரில் காணப்படுகின்றன)*

-காட்சி மாற்றம்-

*(சிறை-ரோகினிதேவி சிறைக்கு வருகிறார்)*

**ரோகி:** தேவகி! கடுமையாக எதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறாய்?

**தேவகி:** எனது வயிற்றிலுள்ள இந்தக் குழந்தையும் கொலை செய்யப்பட்டு விடுமே அக்கா! எனது கண் முன்னாலேயே எனது ஆறு குழந்தைகளும் கொல்லப்பட்டதைப் பார்த்துக்கொண்டு நான் இன்னும் உயிருடன் இருக்கிறேனே அக்கா!

**ரோகி:** உனது எட்டாவது குழந்தைக்காகவே காத்துக்கொண்டிருக்கிறாய் நீ!

**தேவகி:** இந்தக் கொடுமையை இன்னும் சகிக்க என்னால் முடியாது அக்கா!

**ரோகி:** தேவகி! உனது வயிற்றில் வளரும் கருவினை எடுத்துச் செல்லவே இன்று இங்கு நான் வந்திருக்கிறேன்.

**தேவகி:** என் வயிற்றுக் கருவினையா?

**ரோகி:** ஆமாம்! உனது கருவினை நான் ஏற்றுச் செல்லப் போகிறேன். அப்போது கம்சன் உன் மகனை ஒன்றும் செய்ய முடியாதல்லவா? ஆகவே கவலையை விடு.

**தேவகி:** அக்கா! அப்படியே செய்வோம் அக்கா! எனது குழந்தை மீது எனக்கு எத்தனை அக்கறை இருக்கிறதோ அத்தனையும் தங்களிடமும் இருக்கிறது.

*(தேவகி ஒரு விளக்கினை எடுத்து ரோகினியிடம் கொடுக்கிறாள்)*

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை-சிம்மாசனத்தில் கம்சன் வீற்றிருக்க அரச மருத்துவர் முன் நிற்கிறார்)*

**கம்ச:** (ஆத்திரத்துடன் எழுந்து) என்ன கூறுகிறீர் அரச வைத்தியரே!

**அர.வை:** உண்மைதான் மகாராஜா! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நேற்று முன் தினம் நான் இளவரசியாரைப் பரிசோதித்தேன். கர்ப்ப நாடி தெளிவாக இருந்தது. இன்று போய்ப்பார்த்த போது கர்ப்பத்துக்கான அறிகுறி எதுவுமே அவரிடம் காணப்படவில்லை. என்ன நடந்தது என்றே தெரியவில்லை மகாராஜா!

**கம்ச:** கர்ப்பம் கலைக்கப்பட்டிருக்கலாமா?

**அர.வை:** இல்லை மகாராஜா!

**கம்ச:** குறைப்பிரசவமாகியிருக்கலாமா?

**அர.வை:** எனது பரிசோதனையில் அவ்வாறு தோன்றவில்லை மகாராஜா!

**கம்ச:** (பலமாகச் சிரித்தவண்ணம்) அரச வைத்தியரே! உண்மையில் என்ன நடந்திருக்கிறது என்று புரிகிறதா உமக்கு?

**அர.வை:** தெரியவில்லை பிரபு!

**கம்ச:** கம்சனைக் காணப் பயந்து அந்தக் குழந்தை ஓடிவிட்டது. எதிர்காலமே என் வலிமை கண்டு அஞ்சி அலறி ஓடிவிட்டது வைத்தியரே!

*(தொடர்ந்து கம்சன் சிரிக்கிறான்)*

**காலத்தின் குரல்:** கம்சன் சிரிக்கிறான். அவன் தன்னைப் பார்த்தே சிரிக்கிறான் என்பது அவனுக்கே தெரியாது. தன்னுடைய தலைவிதியினை தானே மாற்றிக்கொண்டு விட்டதாக கம்சன் மனப்பால்குடிக்கிறான். ஆனால் எனக்குத் தெரியும்- அவனுடைய விதி அவனை மிக நெருக்கமாக அண்மித்து வந்துவிட்டது என்பதனை நான் நன்றாகவே அறிவேன். கைக்கெட்டிய தூரம்வரை அவனுடைய அழிவு வந்துவிட்டது. ஆகவே, மேலே நடக்க வேண்டியவற்றைத் தொடர்ந்து கவனிப்போம். தேவகியையும் வாசுதேவனையும் தொடர்வோம்.

-காட்சி மாற்றம்-

*(சிறை-வாசுதேவன் தேவகிக்கு ஆறுதல் கூறுகிறான்)*

**வாசு:** தைரியமாய் இரு தேவகி! நம் கனவுகள் நனவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

**தேவகி:** அமைதியாக இருக்கத்தான் நான் முயற்சிக்கிறேன். ஆனால் எனது தாய்மை தாங்க முடியாமல் தவிக்கிறதே. கடந்த ஆறு குழந்தைகளுக்காக நான் அழுதேன். அக்குழந்தைகளை பத்துமாதம் வரை சுமந்து எனது இரத்தத்தையே கொடுத்து வளர்த்தேன். ஆனால் முடிவு என்னவானது என்று தாங்கள் கண்டீர்கள். அண்ணன் வருகிறான், குழந்தையைப் பறிக்கிறான், சுவரில் வீசி எறிந்து பெரும் இரத்தக் கறையினை சுவரில் பதித்து விடுகிறான். இனிமேலும் இந்தத் துயரத்தைக் கண்டு சகித்துக்கொள்ள என்னால் முடியவில்லை, பிரபு!

**வாசு:** தேவகி! இத்தகைய சூழ்நிலையில் அமைதி என்பது தான் தைரியத்தின் மறு அர்த்தம். நமது துன்பங்கள் யாவும் முடிவுக்கு வரும் காலம் காலடிக்கு வந்துவிட்டது. இதனை நினைவில் வை. தேவகி! நீ இப்பொழுது எட்டாவது குழந்தைக்கு தாயாகப் போகிறாய்.

**தேவகி:** தேவ வாக்கின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை என்று கருத வேண்டாம் பிரபு! ஆனால், நான் ஒரு தாய். எனது குழந்தைகளுக்காக நான் அழுவதற்குக்கூட உரிமை இல்லாயா? மன வேதனைச் சுமையினை இறக்குவதற்கு என்னைக் கொஞ்சம் அழவிடுங்கள் பிரபு!

**வாசு:** அக்குழந்தைகளுக்காக உன்னை அழ வேண்டாம் என்று தடுக்கவில்லை தேவகி! ஆனால் உன் கண்ணீரை கம்சன் காணாதிருக்கட்டும்.

**தேவகி:** கண்ணீர் சிந்தாமலிருக்க முயற்சிக்கிறேன் பிரபு. ஆனால் நான் எவ்வளவ ,தான் முயன்றாலும் கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியவில்லையே! முடியவில்லையே பிரபு!

**வாசு:** கூடுமான்வரை அமைதியாக இரு தேவகி!

-காட்சி மாற்றம்-

*(சிறை-தேவகியின் அறைக்கு வெளியே காவலர்கள் உரையாடல்)*

**காவலன்1:** இளவரசி படும் துன்பம் பார்க்கச் சகிக்க முடியவில்லை..!

**காவ2:** குழந்தையை இங்கேயே ஈன்றெடுக்கிறார். இங்கேயே அந்தக்குழந்தையை தனது சொந்த அண்ணனாலேயே படுகொலை செய்யப்படுவதையும் தனது கண்களாலே காண்கிறார்.

**காவ3:** எந்த நாட்டு அரசனும் இவ்வளவு கொடூரமாகக் குழந்தையைத் தன் கைகளாலேயே கொல்வதை நான் எப்போதும் கண்டதும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை.

**காவ 1:** தனது சகோதரியின் குழந்தைகளை அவளுடைய அண்ணன் படுகொலை செய்கிறான். இளவரசியைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருக்கிறது.

**காவ 2:** இதோ! இளவரசி அடுத்த குழந்தைக்குத் தாயாகப் போகிறாள். இதுவும் நிச்சயமாகக் கொலை செய்யப் பட்டுவிடும்.

**காவ 3:** ஆண்டவா! நாங்களாவது இந்தத் துர்ப்பாக்கியவதிக்கு உதவுவதற்கு முடியாதிருக்கிறதே!

**காவ 1:** பரிதாபகரமான நிலையிலிருக்கிறார் இளவரசி.

*(பிறந்த குழந்தையின் அழுகுரல்)*

-காட்சிமாற்றம்-

*(சிறை - தேவகியின் அறை)*

**தேவகி:** அழாதே மகனே! மகனே அமைதியாக இரு. உன் அழுகுரல் கேட்டால் உன் மாமன் கம்சன் ஓடி வந்து விடுவான். அழாதே மகனே.

**வாசு:** அவன் அழட்டும் தேவகி. இங்கு தா என் மகனை. அவன் நன்றாக அழட்டும்.

**தேவகி:** பிரபு! இன்னும் கொஞ்ச நேரம்தானே என் கைகளில் இருக்கப் போகிறான். அதுவரையாவது என் மகனைக் கண் குளிரப் பார்த்து விடுகிறேனே.

**வாசு:** தேவகி! இவன் நம்மை விட்டு விட்டு ஓடி மறைய வந்தவன் அல்ல. இவன் நமது எட்டாவது புத்திரன். கம்சனின் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அவதரித்துள்ள தேவகுமாரன்.

**தேவகி:** காலத்தை வீணாக்க முடியாது பிரபு. அந்த இதயம் அற்றவன் ஓடி வந்து விடுவான். அதுவரையாவது என் கண்களால் என் மகனைப் பார்த்து மகிழ விடுங்கள் பிரபு.

**வாசு:** அஞ்ச வேண்டாம் தேவகி. (ஒளிக்கதிர் ஒன்று சிறையினுள் தென்படுகிறது. மின்னலுடன் அசரீரி கேட்கிறது)

**அசரீரி:** **வாசு தேவா! மனித சமுதாயத்தின் எதிர்கால ஒளிவிளக்கு இந்தக் குழந்தை. இதனை யமுனா நதிக்கு அக்கரையில் கோகுலத்திலுள்ள உன் நண்பன் நந்தகோபனிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிடு.**

**தேவகி:** விலங்கிடப்பட்டுள்ளீர்களே பிரபு! நீங்கள் எவ்வாறு போக முடியும்?

*(உடனடியாக விலங்கும் சங்கிலிகளும் அறுந்துவிழுகின்றன)*

**வாசு:** பார்த்தாயா தேவகி! இறைவன் அருளால் சங்கிலிகளே அறுந்துவிட்டன.

**தேவகி:** ஆனால் இரும்புக் கதவுகளும் வாயிற்காவலர்களும் உள்ளனரே.

**வாசு:** நாம் எதையும் செய்யவேண்டியதில்லை தேவகி. விலங்குகளிலிருந்து என்னை விடுவித்தவன் எவனோ அவனே இரும்புக் கதவுகளையும் வாயில்களையும் திறந்துவிடுவான்.

*(பெரும் புயல் ஒன்று எழுகிறது. காவலர்கள் மயங்கி விழுகின்றனர். சிறைக் கதவுகள் ஒவ்வொன்றாகத் திறக்கின்றன. உக்கிரசேனன் தனது அறையிலிருந்து இந்தப் புதுமைகளை அவதானிக்கின்றார்)*

**உக்கி:** வாசு தேவரே! காலம் தாழ்த்தாதீர்கள். குழந்தையை உடனடியாக எடுத்துச் செல்லுங்கள்.

*(வாசுதேவர் குழந்தையை ஒரு பேழையில் வைத்துக்கொண்டு வெளியேறுகிறார். தேவகி அழுதுகொண்டே இருக்கிறாள்)*

**பின்னணிப்பாடல்:** கிருஷ்ணாஷ்டமி புதன் கிழமை இரவு கம்சனின் சிறைக் கூடத்தில் கண்ணன் அவதரித்தான்.... கண்ணன் அவதரித்தான்....)

**தேவகி:** ஆண்டவா!

-காட்சி மாற்றம்-

*(சிறையின் வெளிப்புறம்- பலத்த காற்று வீசுகிறது. வானில் மின்னல் தோன்றுகிறது- வாசுதேவனுக்கு வழிகாட்டியாக. பலத்த புயல் வீசிய போதும் தனது தலையில் குழந்தையைக் கிடத்தியுள்ள பேழையை வைத்துக்கொண்டு வாசுதேவன் அமைதியாக முன்னேறுகிறார்)*

-காட்சி மாற்றம்-

*(யமுனா நதிக்கரை- தொடர்ந்து பேய் மழை பெய்கிறது. ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இருப்பினும் வாசுதேவன் ஆற்றில் இறங்கி நடக்கிறார். பேழையிலிருந்து குழந்தையின் பாதம் நீரில் பட்டவுடன், வாசுதேவனுடைய மூக்குவரை இருந்த நீர் கீழிறங்கி வழிவிடுகிறது. மிகப் பெரிய நாகம் ஒன்று தன் படத்தை விரித்து மழை நீர் குழந்தையில் படாமல் பாதுகாத்துச் செல்கிறது.*



-காட்சி மாற்றம்-

*(கோகுலம் - நந்தகோபனின் இல்லம் வெளிப்புறம்- நந்தன் கதவு திறக்க வாசுதேவர் குழந்தையுடன் உள்ளே வருகிறார்)*

**நந்தன்:** வாருங்கள் வாசுதேவரே! தங்களை எதிர்பார்த்துக்காத்து நிற்கிறேன். உள்ளே வாருங்கள் நண்பரே.

*(இருவரும் உள்ளே வந்ததும் நந்தன் கதவைத் தாழிடுகிறார்)*

**நந்தன்:** சிறையிலிருந்து எவ்வாறு தப்பி வந்தீர்கள் நண்பரே?

**வாசு:** விலங்குகள் அறுந்தன. கதவுகள் திறந்தன. யமுனா வழி விட்டாள். இதோ இதுதான் தேவகியின் எட்டாவது மைந்தன்!

**நந்தன்:** ஆகா....வாசுதேவரின் எட்டாவது மைந்தனே! வா மகனே. என்னிடம் வா! (வாசுதேவரிடம்) வாசுதேவரே உண்மையில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த இக்கட்டான வேளையில் என்னையும் ஒரு பொருட்டாக நினைத்தமைக்கு பெருமைப்படுகிறனே. என்னைப் பெருமைப்படுத்திவிட்டீர்கள். இது சாதாரண மானிடக் குழந்தையல்ல. கம்சனின் கொடுமைகளிலிருந்து மனித சமுதாயத்தை மீட்பதற்கு அவதரித்த தெய்வக் குழந்தை இது. நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் தேவகியும் நீங்களும் ஏற்றுக்கொண்ட கடமையைச் செம்மையாக நிறைவேற்றி விட்டீர்கள். நீங்கள் விட்ட இடத்திலிருந்து தேவகியும் நானும் எமது கடமையைத் தொடரப் போகிறோம். *(குழந்தையைப் பார்த்து அன்புடன் வணக்கம் செலுத்துகிறார்)* எம்மை விடுவிக்க வந்த பெருமானே! உம்மைத் துதிக்கின்றோம். உமது வரவால் எமது இல்லம் அருள் பெறுகிறது. என் தேசமும் உமது அருளால் பெருமை பெறுகிறது.

*(குழந்தை சிரிக்கிறது)*

வாசு தேவரே! இத்தகைய வெகுமதியைத் தந்த தங்களை நான் வெறும் கைகளுடன் வழியனுப்ப முடியாது. சற்றுப் பொறுங்கள் நண்பரே. தயவு செய்து போய்விட வேண்டாம். நான் அதிகம் தாமதிக்கமாட்டேன். இதோ வந்து விடுகிறேன்)

*(நந்தன் குழந்தை கண்ணனுடன் உள்ளே செல்கிறார்)*

-காட்சி மாற்றம்-

*(நந்தனுடைய இல்ல உட்புறம்- ஒரு குழந்தையுடன் யசோதா படுத்திருக்கிறாள். நந்தன் குழந்தை கண்ணனை யசோதாவின் அருகில் கிடத்திவிட்டு அவளருகில் கிடந்த பெண்குழந்தையைத் தூக்கிக்கொண்டு வெளியே வருகிறார்)*

-காட்சி மாற்றம்-

*(நந்தனின் இல்லம் முன்புறம்- நந்தன் குழந்தையினை வாசுதேவனிடம் கொடுக்கிறார்)*

**நந்தன்:** யோசிப்பதற்கு எதுவுமே இல்லை வாசுதேவரே. குழந்தை பிறந்த செய்தி கேள்விப்பட்டதும், கம்சன் பதறி ஓடி வருவான். அப்போது அவனுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? வாசுதேவரே நீங்கள் எனது நண்பர். யசோதா தேவகியின் சினேகிதி. யசோதாவுக்கு இப்பொழுதுதான் இந்தக்குழந்தை பிறந்தது.

**வாசு:** பெண்குழந்தை!

**நந்தன்:** ஆமாம். இந்தக் குழந்தை பிறந்திருப்பதை யசோதையும் அறிய மாட்டாள். அவளுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை.

**வாசு:** நண்பரே! என்ன காரியம் செய்துவிட்டீர்கள்? என்னுடைய குழந்தையைக் காப்பாற்றுவதற்காக நண்பராகிய உங்களுடைய குழந்தையைப் பலிகொடுக்க நான் அவ்வளவு சுயநலக்காரனா? வேண்டாம் நண்பரே. இந்தக் காரியத்திற்கு உடந்தையாக இருக்க என்னால் முடியவே முடியாது.

**நந்தன்:** தைரியத்தை இழக்காதீர்கள் வாசுதேவரே!இந்தப் பெண் குழந்தையைக் கண்டால் கம்சன் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொள்ளக்கூடும் அல்லவா? இறைவனில் நம்பிக்கை வையுங்கள். என்னுடைய சொல்லைக் கேளுங்கள்.

**வாசு:** என்னுடைய சுயநலம் என்னையே ஆட்கொண்டு விடுகிறது. என்ன செய்யலாம்... நண்பரே! தங்கள் சொற்படி நடக்கிறேன்.

**நந்தன்:** வாசுதேவரே! தன்னலத்தால் நீங்கள் தூண்டப்படவில்லை. கம்சனே சுயநலக்காரன். அவனே பெரும்பாபி. அவனுடைய பேராசை அவன் கண்களை மறைக்கின்றது. அவன் செய்த கொடுமைகளும் பாபங்களும் பெரும் சாபக்கேடாக மாறி, அவனுடைய முடிவுக்கே அடித்தளம் அமைத்துவிட்டது என்பதை அவன் அறிவான். ஆனால் அவன் அறிவு மயங்கிக் கிடக்கிறான்.

தாமதிக்க நேரமில்லை நண்பரே, மீண்டும் சுயநலம் என்று எண்ணித் துன்பப் படாதீர்கள். மனித சமுதாயத்தின் நன்மைக்காக நாம் செய்யும் கடமை இது. இதுவே உண்மையின் ஒளி.

*(வாசுதேவன் பெண் குழந்தையுடன் செல்கிறார்)*

**பின்னணி:** அங்கே சென்றது ஆண்குழந்தை இங்கே வருகிறது பெண்குழந்தை.

-காட்சிமாற்றம்-

*(சிறை-வாசுதேவன் பெண்குழந்தையுடன் சிறைக்குள் வருகிறார். திறந்திருந்த கதவுகள் எல்லாம் மீண்டும் மூடிக் கொள்கின்றன)*

**தேவகி:** என்ன நடந்தது பிரபு?

**வாசு:** தேவகி! உன்னுடைய குழந்தையைப் பெற்றுக்கொண்டு நந்தகோபன் யசோதாவின் பெண்குழந்தையைத் தந்திருக்கிறான்.

*(காவலர்கள் எழுகின்றனர் குழந்தை பிறந்திருப்பதைப் பார்த்து கம்சனிடம் தகவல் தர ஓடுகின்றனர்)*

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை- கம்சன் படுத்திருக்கிறான். காவலன் உள் வருகிறான்)*

**காவலன்:** மகாராஜா! மகாராஜா!

**கம்சன்:** என்ன?

**காவல:** வாழ்க மகாராஜா! சிறை அதிகாரி....

**கம்சன்:** வரச்சொல்.

**காவல:** தங்கள் சித்தம் மகாராஜா.

**சி.அதி:** வாழ்க மகாராஜா!

**கம்சன்:** என்ன செய்தி கொண்டுவந்தீர்?

**சி.அதி:** இளவரசிக்கு ஒரு பெண்குழந்தை பிறந்திருக்கிறது.

**கம்சன்:** (ஆச்சரியத்துடன்) என்ன பெண் குழந்தையா? தேவகி பெண் குழந்தையா பெற்றிருக்கிறாள்? அந்தச் சந்நியாசி சொன்னானே...! (மகிழ்ச்சியுடன் சிரித்த வண்ணம்) அவன், அவன்...இனி என்னை எவனும் கொல்ல முடியாது. எனக்கு அழிவே இல்லை. ஆகா! எனக்கு அழிவே இல்லை. எனது தங்கை தேவகியையும் அருமை நண்பர் வாசுதேவனையும் அனாவசியமாகத் துன்புறுத்திவிட்டேன். அவர்களுடைய அருமைக் குழந்தைகளையும் கொன்றுவிட்டேன். (பற்களை நறுமியவண்ணம்) எங்கே அந்தச் சந்நியாசி? அவனைத்தான் கொல்ல வேண்டும். இழுத்து வாருங்கள் அவனை.

**காவலன்:** அப்படியே மகாராஜா!

*(ரிஷி சங்கிலியால் பிணைக்கப்பட்ட வண்ணம் கம்சனின் அரண்மனைக்குக்*

**(18ம் பக்கம் பார்க்க)**

www.padippakam.com
நன்றி - நூலகத் திட்டம்

தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு
அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 436331





ஜாக்கிரதை

சிறகு வளராத
சின்னப் பறவைகளே...
ஜாக்கிரதை!
இலக்குத் தவறிய
யுத்தத்தின் வீச்சுக்கள்
உங்கள் மீதும்
விழக் கூடும்!

படமும் கவிதையும்
...கோவுஸ்ஸ... எல்ல

## சிறகுகள் இருந்தன. பறப்பது கிடையாது!





## அசத்தும் படப்பிடிப்பாளர்!



சடுகுடும்
எந்த முயற்
சியிலும்
ஒரு நுட்பம் வேகம், திறமை, புதுமை செய்யும் ஆர்வம் இருந்தால் அந்த முயற்சி வெற்றியாகும் அனைவரையும் கவரும்.
லூயிஸ் கிரீன் ஃபீல்ட் ஒரு பெண் படப்பிடிப்பாளர். நவீன நடனக்கலை மீது ஈடுபாடுள்ளவர். மரபு வழி நடனக்கலைஞர்கள் போல் இல்லாமல் நவீன நடனக்காரர்களின் அங்க அசைவுகள், பாவனைகள் புத்துணர்ச்சி ஊட்டுகின்றன என்பது அவரது கருத்து.
நவீன நடனங்கள் வேகமானவை. உயரே எழுந்து கரணமடித்து பார்வையாளர்களை வியப்பூட்டி மகிழவைப்பவை. அந்த வேகத்தை, அசைவுகளை கலை குறையாமல் கமராவில் பதிவு செய்வது சுலபமான காரியமல்ல.
லூயிஸ் கிரீன் ஃபீல்ட் தன் கமராவை நுட்பத்தோடு இயக்கி முன்னைய படப்பிடிப்பாளர்களில் இருந்து வேறுபடுகிறார். வித்தியாசம் காட்டுகிறார்.
அமெரிக்க நடன அரங்கில் டெஸ்மண்ட் றிச்சார்சன் என்பவரது நடனமே படத்தில் இருக்கிறது. அவர் உயர்ந்து பாய கமரா லாவகமாய் பிடித்திருக்கிறது.

## வான் முட்டும் நான்முகக் கோபுரம்

அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன்.
அவரை அமெரிக்கர்கள் மறக்கப் போவதில்லை.
அது மட்டுமல்ல, அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில் அவரது நினைவாக அமைக்கப்பட்டுள்ள நான்முகக் கூர் நுனிகள் கொண்ட வானளாவிய கோபுரம் ஜோர்ஜ் வாஷிங்டனின் புகழை என்றும் நினைவூட்டும்.
இது போன்ற கோபுரங்களில் இதுவே உலகில் மிக உயரமான கோபுரம் ஆகும். 555 அடி 5 1/8 அங்குல உயரம் கொண்ட இக்கோபுரம் 1884இல் திறந்து வைக்கப்பட்டது. 106 ஏக்கர் நிலத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது.



## ஒரே பாய்ச்சல்!

விளையாட்டு உலகில் பெண்கள் படைத்துவரும் சாதனையில் ஜெர்மன் நாட்டுப் பெண் ஹெய்கே ஹெங்கெல் படைத்துள்ள சாதனையும் சேர்க்கப்பட்டுள்ளது. அதுவும் சாதாரண சாதனையல்ல. உலக சாதனை. 1992 பெப்ரவரி 26 திகதி ஜெர்மனியில் நடைபெற்ற உள்ளரங்கப் போட்டிகளில் அவர் உயரம் பாய்தலில் உலக சாதனை படைத்தார்.
பாய்ந்த உயரம் 2.07 மீற்றர். இதுவரை அந்தச் சாதனை முறியடிக்கப்படவில்லை.



## கூரையோ கூரை!

இந்த விளையாட்டரங்கத்தில் ஒரு விசேடம் இருக்கிறது.
உலகின் எந்த விளையாட்டரங்கிலும் இல்லாத சிறப்பு அது. இந்த விளையாட்டரங்கை மூடியுள்ள கூரைதான் உலகத்தில் மிக நீளமான கூரையாகும்.
நீளம் 207.3 மீட்டர். (680 அடி) இந்த விளையாட்டரங்கு அமெரிக்காவில் உள்ள நியூ ஓர்லியன்ஸ் மாநிலத்தில் இருக்கிறது. இதன் பெயர் லௌசியானா சுப்பர்டோம்.
நீளமான கூரையின் உயரத்தால் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்துவிட்டது.